புதுக்கோட்டை ஸமஸ்தான

தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்]· 1943-ம் ௵ ஸெப்டம்பர்௴ 11௳ [ந. 163.

இதாலி நிபந்தனையற்ற சரணடைந்தது.

1943-ம் ௵ ஸெப்டம்பர்௴ 3-ம் தேதியன்று

சமாதான உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.

பிரஸங்கம் CLXIII.

நம்பிக்கையுடன் பிரார்த்திப்போம்.

வெற்றி நமக்கே.

1943-ம் ௵ ஸெப்டம்பர்௴ 5-தேதியன்று

புதுக்கோட்டை ஸமஸ்தான உதவி நிர்வாகி

கான் பஹதூர் *P.* கலிபுல்லா ஸாஹிப் செய்த பிரசங்கம்.

சீமான்களே,

மிகவும் கோரமாக நான்கு வருஷங்களாக நடைபெற்ற யுத்தத்தில் நேசதேசத்தாருக்குக் கிடைத்திருக்கும் வெற்றிகளுக்காக கடவுளுக்கு நம்முடைய நன்றியைச் செலுத்துவதற்கும், யுத்தம் கூடிய சீக்கிரத்தில் வெற்றிகரமாக முடிவு பெறுவதற்காக கடவுளை பிரார்த்தனை செய்வதற்கும் நாம் இங்கு இன்று குழுமியிருக்கிறோம்.

சென்ற வருஷங்களில் நடைபெற்ற சம்பவங்கள் உங்களுக்கு அறிமுகமானவை. அவைகளைப் பற்றி நான் சொல்ல விரும்பவில்லை. ஆகிலும், நமது ஸமஸ்தான நிர்வாகியான ஸர் அலெக்ஸாண்டர் டாட்டன்ஹாம் அவர்கள் அடிக்கடி சொல்லி வந்ததை மட்டும் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். இந்த யுத்தத்தில் சம்பவங்களை பொருட்படுத்தக்கூடாதென்றும், யுத்தத்தின் நெடும்போக்குத்தான் முக்கியமென்றும் அவர் சொல்லியிருக்கிறார். அவருடைய மொழிகளை செவியுற்ற சந்தேகிகளும் அவைகளின் உண்மையை இப்பொழுது அறிவார்கள். மற்றொரு விஷயமும் என் ஞாபகத்துக்கு வருகிறது. இதே ஹாலில் காப்டன் ஹார்வி அவர்கள் ஒரு சமயத்தில் பிரிடன் சிறிய சண்டைகளிலெல்லாம் தோல்வியடையும். ஆனாலும், இறுதியில் யுத்தத்தில் வெற்றிபெறும் என்று சொன்னார். இதுதான் சரித்திரத்தின் பிடிப்பினை. சரித்திரப்போக்கும் திரும்பத்திரும்ப ஒரே மாதிரிதான் நடைபெறும். பிரிடனுடைய வெற்றிகளுக்கு அதன் ஊக்கமும் தீரமும்தான் காரணங்கள். இந்தக் குணங்கள்தான் பிரிடனை ஜான் புல் என்று சொல்லுவதற்கு அடிப்படையான காரணங்கள். ஆகிலும் இந்த யுத்தத்தில் பிரிடன் எல்லாச் சண்டைகளிலும் தோல்விபெறவில்லை. இப்பொழுது எல்லாப்போர்களிலும் வெற்றி பெற்றுவருகிறது.

இதை விவரிப்போம். 1940-ம் வருஷத்தில் பிரிடனை ஜெர்மன் விமானங்கள் தாக்கிய பொழுது பிரிடனுக்கு ஆபத்து உண்டாயிற்று. ஸெப்டம்பர் மாதம் 15 தேதியன்று லண்டனிலிருந்து வெற்றி பிரசங்கம் செய்வதாக ஹிட்லர் பறை சாற்றினான். கடல் மார்க்கமாக படையெடுப்பு நடைபெறும் என்ற பேச்சு நிரம்பியிருந்தது. பிரிடனை இழந்தாலும், கனடாவிலோ, ஆஸ்திரேலியாவிலோ இருந்துகொண்டு பிரிடன் யுத்தத்தை நடத்துமென்று சர்ச்சில் சொல்லிவிட்டார். அந்த சமயம் பிரிடனுக்கு பயங்கரமான காலம். ஆகிலும், பிரிடிஷாரின் தீரமும், ஊக்கமும் பிரிடனை மட்டுமில்லாமல் உலகத்தையும் காப்பாற்றிவிட்டன. ஹிட்லர் துரத்தியடிக்கப்பட்டான்.

அதன்பின் பேராசைகொண்டு இரண்டு வருஷங்களாக நண்பனாகயிருந்த ருஷ்யாவைத் தாக்க ஹிட்லர் முயன்றான். அதிலிருந்து அவனுக்கு அழிவுகாலம் துவங்கிற்று. அவன் கஷ்டகால தேவதையை எதிர்த்தான். தகுந்த சிக்ஷை ஆரம்பமாயிற்று. செம்படை ஒன்றிரண்டு ஸ்டாலின்கிராட்டில் ஜெர்மனியைப் பழிக்குப்பழி வாங்கிவிட்டது.

இதற்குள்ளாக பிரிடன் முஸ்தீப்புகளை அதிகரித்துவிட்டது. அமெரிக்கா யுத்தத்தில் கலந்து கொண்டது. வட ஆபிரிக்காவில் யுத்தப்போக்கு தலைகீழாக மாறிவிட்டது.

நேசதேசத்தாரின் தாக்குதலின் மூலம் முதல்முதலில் முஸோலினி வீழ்ச்சி பெற்றான். சாம்ராஜ்யத்திலிருந்து துரத்தியடிக்கப்பட்டு இதாலியிலிருந்தும் அப்புறப்படுத்தப்பட்டு முஸோலினி இப்பொழுது இருந்த்யிடம் தெரியாமல் மறைந்துவிட்டான். ஜெயிலுக்குள் அடைபட்டிருக்கலாமென்றும் தோன்றுகிறது. அக்கிரமக்காரர்களுக்கு ஏற்படும் கதி அவனுக்கு வந்துவிட்டது.

பாக்கியிருப்பது ஹிட்லர். லண்டனை நொருக்கி அழித்து விடுவோமென்று அவன் மனக்கோட்டை கட்டி பீத்திக்கொண்டகாலமுண்டு. அதேவிதமாக 1940-ம் வருஷத்தில் பகிரங்கமாகவும் அவன் சொல்லி வந்தான். கால அளவில் அவனுக்குத் தகுந்த பதில் மரியாதை கிடைத்துவிட்டது. லண்டனைத் தாக்கியதற்குப் பழிவாங்கியாகிவிட்டது. ஹிட்லரின் தலைநகரமான பெர்லின் இப்பொழுது பலமாகத் தாக்கப்படுகிறது. பெர்லின் தீக்கிரையாகி சாம்பலாகுகிறது. ஐரோப்பிய தேசப்படத்திலிருந்து அந்த நகரமே மறைந்துவிடும் போலிருக்கிறது.

கீழ்த்திசையில் டோஜோவும் பாக்கியிருக்கிறான். ஆகிலும், கியூபெக் மகாநாட்டில் அவனையும் தாக்கவேண்டுமென்று முடிவு செய்தாகி விட்டது.

ஆகையால், எல்லாம் நமக்கே சாதகமாகத் தோன்றிவிட்டது. ஹிட்லரின் ஐரோப்பிய அரணின் கால்கட்டை விரல் பாகமாகிய இதாலியில் நாம் படையெடுத்துவிட்டோம். கூடிய சீக்கிரத்தில் வெற்றி கிடைத்துவிடுமென்ற நம்பிக்கை உண்டாகிவிட்டது. நாம் ஒன்றுபட்டு வெற்றி சீக்கிரம் கிடைக்கவேண்டுமென்று பிரார்த்தனை செய்வோம்.

வார யுத்தச் செய்திகள்.

4—9—43-லிருந்து 10—9—43-வரை.

முக்கியமான சம்பவங்கள்.

1—9—43 புதன்கிழமை—கியூபெக் மகாநாட்டின் தொடர்ச்சியாக சம்பாஷணை நடத்த மிஸ்டர் சர்ச்சில் வாஷிங்டனுக்கு வருகிறார். ருஷ்யர்கள் டாரோகோபனையும் கோமாரிச்சியையும் பிடித்துக்கொண்டார்கள். அமெரிக்க விமானப்படையும், கடற்படையும் மத்திய பஸிபிக்கிலுள்ள மார்கஸ் தீவுகளைத் தாக்கின.

2—9—43 வியாழக்கிழமை—ருஷ்யர்கள் சூமியையும், விஸ்சியான்ஸ்கையும் பிடித்துக் கொண்டனர்.

3—9—43 வெள்ளிக்கிழமை—நான்காவது வருஷ விழாக் கொண்டாட்ட தினம். பிரிடிஷ் 8-வது படை மெஸ்ஸினா ஜலசந்தியைத் தாண்டி இதாலியைப் படையெடுத்தது. ரெக்கியோவும், ஸான்கியோவன்னியும் விழுந்தன. 10 நாட்களுக்குள் பெர்லின் 3-வது தடவை பலமாகத் தாக்கப்பட்டது.

4—9—43 சனிக்கிழமை—அமெரிக்க வெடி விமானங்கள் நிகோபர் தீவுகளையும், ரெங்கூனிலுள்ள கப்பல் தளங்களையும் தாக்கின. நியூ கினியாவின் வடக்குக் கடற்கரையிலுள்ள லேக்கு வடகிழக்கிலுள்ள ஹூவான் வளைகுடாக் கரையில் ஆஸ்திரேலியத் துருப்புகள் இறங்கின. லேயிலிருக்கும் ஜப்பானியர்களுக்கு உதவிப்படை வராதபடி தடுத்துவிட்டன.

5—9—43 ஞாயிற்றுக்கிழமை—பிரார்த்தனை தினம். பிரிடிஷ் 8-ம் படை இதாலியில் பாக்னுராவையும், மெலிரோவையும் பிடித்தது. மேற்கு ஜெர்மனியிலுள்ள மான்ஹீமையும் லட்விக்ஷேபனையும் பிரிடிஷ் விமானப்படை தாக்கி 1,500 டன்கள் எடைமான முள்ள குண்டுகளைப் பொழிந்தன.

6—9—43 திங்கட்கிழமை—இதாலியில் கால் கட்டைவிரல் போன்ற பாகத்திலுள்ள ஸான் ஸ்டாபானியை பிரிடிஷ் 8-ம் படை பிடித்து 3,000 இதாலியர்களைக் கைதி செய்தது. ருஷ்யர்கள், கோனுடாப்பையும், கிரமடார்ஸ்காயாவையும், ஸ்லாவியான்ஸ்கையும் பிடித்தனர். தெற்கு ஜெர்மனியிலுள்ள மூனிக்கின்பேரில் நேசதேச விமானங்கள் குண்டுகளை வீசின.

7—9—43 செவ்வாய்க்கிழமை—பிரிடிஷ் 8-வது படை இதாலியில் பால்மியையும், டெலியானுவாவையும் பிடித்தன. ருஷ்யர்கள் சேர்னிகாவ் பிராந்தியத்தைப் பிடித்துக் கொண்டு ஸ்டாலினேவுக்குள் ஊடுருவிச் சென்றனர்.

8—9—43 புதன்கிழமை—ருஷ்யர்கள் ஸ்டாலினேவைப் பிடித்தார்கள். இதாலி நேசதேசத்தாரிடம் நிபந்தனையற்ற சரணுகதி செய்தது.

இதாலி நிபந்தனையற்ற சரணுகதி செய்தது.

இதாலி—செப்டம்பர் 1-ம் தேதியன்று கடற்கரை பீரங்கிகள் இதாலியில் கால் கட்டைவிரல் போன்ற பாகத்தில் குண்டுகளை பிரயோகித்தன. ராட்னி, நெல்ஸன் போன்ற யுத்தக் கப்பல்கள் கொண்ட பிரிடிஷ் கடற்படை ரெக்கியோ பிராந்தியத்தில் குண்டுகளை வர்ஷித்தன.

செப்டம்பர் 3-ம் தேதி பொழுது விடிவதற்கு ஒரு மணிக்கு முன் 8-ம் படையைச் சேர்ந்த பிரிடிஷ் கனேடியத் துருப்புகள் மெஸ்ஸினு ஜலசந்தியைத் தாண்டி ரெக்கியோ பிரதேசத்தில் இறங்கின. அதற்குப்பின் மற்றும் இரண்டு இடங்களில் படைகள் இறங்கின.

இதாலியக் கடற்படை டாரண்டோ வளைகுடாவை விட்டுப் புறப்பட்டுவிட்டது. பேருக்குக்கூட எதிர்த்து நிற்காமல் இதாலியப் படைகள் சரண்புகுந்துவிட்டன.

தேசத்தின் பிரதேச அமைப்பைப் பொருத்தும், ஜெர்மானியர்கள் விளைவித்த இடைஞ்சல்களைப் பொருத்தும் யோஜித்தால் நேசதேசப் படைகளின் முன்னேற்றம் வேகமாகத்தான் நடைபெறுகிறது.

கீழ்க்கண்ட இடங்கள் பிடிபட்டன.—ரெக்கியோ, ஸான்கியோவானி, பாக்னுரா, மெலிடோ, ஸான்ஸ்டபானி, ஸில்லா, காலிகோ, பாலாரோ, கேப் டெல்லார்னி, பால்மி, டெலியானுவா.

செப்டம்பர் 3-ம் தேதியன்று பிரென்னர் கணவாயை வெடி விமானங்கள் தாக்கின.

செப்டம்பர் 6-ம் தேதிக்குள் தெற்கு கலாபிரியாவை நேசதேசங்கள் ஆக்கிரமித்துவிட்டன.

செப்டம்பர் 8-ம் தேதியன்று படோக்ளியோ நிர்வாகம் நிபந்தனையற்ற சரணுகதி செய்தது.

ருஷ்யா.—ருஷ்ய யுத்தம் ஸ்மோலன்ஸ்க்கிலிருந்து ஆஸாவ் கடல்வரையில் 600 மைல் நீளத்துக்கு நடைபெறுகிறது. எதிரிகள் நீபர்—டெஸ்னு பிராந்தியத்துக்குப் பின்வாங்கப் பிரயத்தனம் செய்தது பலிக்கவில்லை. சில இடங்களில் பின்வாங்குவது ஒரே ஓட்டமாக இருக்கிறது. இந்த வாரத்தில் ஸ்டாலினே விழுந்துவிட்டது. டான்பாஸ் பிரதேசத்தில் மூன்றில் இரண்டு பாகம் ருஷ்யர் வசமாகிவிட்டது. யூக்ரேனிலுள்ள நிலக்கரிப் பிரதேசம் கூடிய சீக்கிரம் ருஷ்யர் வசமாகிவிடும். கோனுடாப்பை ருஷ்டர்கள் பிடித்ததிலிருந்து ஜெர்மனியின் மத்திய பிரதேச சேனைக்கும், தெற்குப் பிரதேச சேனைக்குமுள்ள தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது. டானட்ஸ் பகுதியில் சண்டையானது குழப்பமான ஸ்திதியை அடைந்துவிட்டது.

ஜூலை 5 முதல் செப்டம்பர் 5-ம் தேதிவரையில் எதிரிக்குக் கீழே சொல்லப்படும் நஷ்டங்கள் ஏற்பட்டன.

1,500,000 ஜனங்கள் மாண்டார்கள், அல்லது காயமடைந்தார்கள். 1,041 டாங்கிகள், 2,018 பீரங்கிகள், 5,382 யந்தர பீரங்கிகள், 7,853 லாரிகள்.

இந்த வாரத்தில் கீழ்க்கண்ட பிரதேசங்கள் பிடிபட்டன.—டோரோகபுஸ், (ஸமொலன்ஸ்க் பகுதி); கோமாரிசி, குடார்-மிகாய்லோவிஸ்கி (பிரியான்ஸ்க் பகுதி); காசினிலுக், ஸிஸிகான்ஸ்க், பிரோலிடார்ஸ்க், கார்லூகா, நிகிடோவ்கா, டிராயிட்ஸ்கோயி, ஆர்டிமோவ்ஸ்க் (டானட்ஸ் பகுதி); சூமி (வாரனேஷ் பகுதி); டெபெல்ட்ருஸேவோ, மாகெவ்கா, கிரமடான்ஸ்

காயா, ஸ்லாவியான்ஸ் (டான்பாஸ் பகுதி) ; மெரபா, ஸென்கோவ் (கார்காவ் பகுதி) ; காராப் (செரின்கோவ் பகுதி) ; கோராப், ஆர்டெமென்ஸக் (வடக்கு யூக்ரேன்) ; பாடுரிக்ஸ் (பாக்ஹுக் பகுதி).

ஜெர்மனி பேரிலும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவிலும் விமான நடவடிக்கை.—இந்த வாரத்தில் மூன்று பலமான தாக்குதல்கள் ஏற்பட்டன. ஆகஸ்டு 31-ம் தேதியன்றும், ஸெப்டம்பர் 3-ம் தேதியன்றும் பெர்லின் தாக்கப்பட்டது. ஸெப்டம்பர் 5ம் தேதியன்று மான்ஹீமும் லட்விக்ஷேபனும் தாக்குண்டன. பெர்லினை முதல் தடவை தாக்கியபொழுது 45 நிமிஷ நேரத்தில் 450 அக்கினி ஜ்வாலைகள் உண்டாகின. பெர்லினிலுள்ளவர்கள் ரகசியப் போலீஸாரைத் தாக்கினார்கள். இரண்டாவது தடவை தாக்கியபொழுது 1,000 டன்கள் எடைமானமுள்ள குண்டுகள் வீசப்பட்டன. பிரதேசம் தீப்பற்றி எரிந்தது.

இவ்வாரத்தில் மற்ற விமான நடவடிக்கைகள்.—வடக்கு பிரான்ஸ், ஹாலந்து, லக்ஸம்பர்க், பெல்ஜியம், முக்கியமான லக்ஷியங்கள் மார்டைக்கிலுள்ள விமான தளங்கள், மாஸிங்கார்டியிலுள்ள மின்சார உற்பத்தி நிலயம், ஸெர்க்பூவிலுள்ள ரயில்வே என்ஜின்கள் தங்குமிடம், ஹாலந்திலுள்ள நதிப் போக்குவரத்துகளிலுள்ள மூடு கதவுகள், லிலியிலும் பூமாண்டு ஈரோஜரிலுள்ள விமானதளங்கள், பாரிஸிக்குச் சமீபத்திலுள்ள ரெயினல்ட் தொழிற்சாலை, ரூவன், ஏமியன்ஸ், அப்பெவில்லாவிலுள்ள ரயில்வே என்ஜின்கள் தங்குமிடம்.

பஸிபிக் யுத்தம்.—ஸெப்டம்பர் 4-ம் தேதியன்று ஆஸ்திரேலியப் படைகள் நியூகினியாவிலுள்ள லேக்கு வடகிழக்கிலுள்ள ஹோவன் வளைகுடாக் கடற்கரையிலிறங்கின. அங்கிருக்கும் படைகள் பின்ஷேபனிலிருந்தும் வடக்குக் கடற்கரையிலுள்ள மற்ற நிலயங்களிலிருந்தும் துண்டிக்கப்பட்டுவிட்டன. பின் பக்கத்தில் மார்க்கம் பள்ளத்தாக்கில் இறங்கிய அமெரிக்கக் குடைத்துருப்புகள் ஆஸ்திரேலியப் படைகளுடன் சேர்ந்து கொண்டன. லேயிலிருக்கும் 20,000 ஜப்பானியர்கள் வளைத்துக்கொள்ளப்பட்டார்கள்.

வட கினியாவில் வேவாக் தீவுக்கருகில் ஒரு துணைக்காவல் படையைச் சேர்ந்த மூன்று சாமான் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. ஒரு நாசகாரியும், மற்றொரு துருப்பேற்றிச் செல்லும் கப்பலும் தீக்கிரையாகின. 12 சண்டை விமானங்கள் அழிந்தன.

சீனு.—ஜப்பானிய தளங்களில் பல தாக்கப்பட்டன. சீனர்கள் செகியாங்க் மாகாணத்திலுள்ள லூகாங்கைத் திரும்பிப்பிடித்துக் கொண்டார்கள். அமெரிக்க வெடி விமானங்கள் பிரெஞ்சு இந்தோ சைனுவிலுள்ள ஷப்வேயிஹோஙவையும், லெயிசிகாக்கையும் லேயோகெயையும் தாக்கின.

பர்மா.—இங்கே நடைபெற்ற விமானத்தாக்குதலின் விபரங்கள் அடுத்த பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

30—8—43. (திங்கட்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

சாயங்காலம்.—விமானதளம்—ஏமியன்ஸ் (7 எதிரி விமானங்கள் நாசம், 3 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இரவு.—(28 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை. 9 எதிரி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).

தொழிற்சாலைப் பிரதேசம்.-ஜெர்மனியிலுள்ள மஞ்சன்—கிளாட்பாக்—ரெவ்ட்.

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமான நிலயம்.-இதாலியிலுள்ள விடெர்போ.

ரயில்வே தளங்கள்.—இதாலியிலுள்ள ஆவெர்ஸா, ஸிவிடா, வெக்கியா, தெற்கு இதாலி. ஸார்டீனியா.

ருஷ்யா (Russia).

(37 அச்சுவிமானங்கள்சுட்டுவீழ்த்தப்பட்டன)

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

படகுகள்.—நியூ கினியிலுள்ள லேக் கருகில், நியூ கினியிலுள்ள வீவாக்குக்கும், மாடாங்குக்கும் மத்தியில்.

யுத்த மருந்துக் துவியல்கள்.—நியூகினியாவிலுள்ள, ஹன்ஸா விரிகுடா, போர்ச்சுகீஸ் டிமோரிலுள்ள டில்லி.

பர்மா (Burma).

சாமான் இறக்குமிடம்.—பூதிடாங்.

நதியிலுள்ள படகுகள்.—ஐராவதி நதியில்.

ஒரு பெரிய நாட்டுக்கலம்.—காம்பெர்மெரி விரிகுடா.

31—8—43. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமான நிலயம்-வெண்டெவிலி, லிலி.

ரசாயன உற்பத்தி சாலைகள், மின்சார உற்பத்தி சாலைகள்.—பிரான்ஸிலுள்ள மாஸின் கார்ப்.

விமான நிலயங்கள்.—பிரான்ஸில் ஸெயிண்ட் போல் பிராந்தியம் (3 எதிரி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன, இரண்டு நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இரவு.—பேர்லின்—(ஜெர்மனியின் தலைநகரம்).

விமான தளங்கள்.—பிரான்ஸிலும் நெதர்லாந்திலும்.

(47 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

(16 எதிரி விமானங்கள் சுட்டுத் வீழ்த்தப்பட்டன. 2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

ரயில்வே தளங்கள்.—இதாலியில் பைஸா, கோஸென்ஸா, காடான்ஸாரோ.

ரயில்வே இலக்குகள்.—இதாலியிலுள்ள காப்ரி ஸெட்ராரோ, ஷேரோ, பெஸ்காரா.

ரயில் வண்டித் தொடர்கள் நிற்குமிடம்.—பெஸ்காரா.

ருஷ்யா (Russia).

(90 அச்சு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் பூராவிலும்.

தூரக்கிழக்கு (Far East).

எதிரியின் விமானதளம்.—நியூகினியாவில் வேவாக், (37 ஜப்பானிய விமானங்கள் நாசம். 12 நாசமாகி யிருக்கலாம்).

எதிரியின் தளம்.—நியூகினியாவில் மடாங்க்.

1—9—43. (புதன்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—சுரங்க வேடி பாவுதல்—எதிரியின் சமுத்திரங்களில்.

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

போக்குவரத்துகள்.—தெற்கு இதாலி.

ரயில்வே தளங்கள்.—ஆவெர்ஸா.

விமான தளம்.—இதாலியிலுள்ள ரோடாக்ளி.

தொழிற்சாலை.—ஸார்டீனியாவிலுள்ள இக்னிஸியாஸ்.

ராணுவ முகாம்கள்.—தெற்கு இதாலி.

ருஷ்யா (Russia).

(45 அச்சு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரையிலுள்ள விமானங்களும்.—ருஷ்யப் போர்முனை பூராவிலும்.

தூரக்கிழக்கு (Far East).

எதிரி நிலயங்கள்.—ஸலாமுவாவைச் சுற்றிலும்.

விமானதளம்.—பூயின் பெயிஸியிலுள்ள காகிலி, (36 ஜப்பானிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. மத்திய பஸிபிக்கிலுள்ள மார்கஸ் தீவுகள்).

பர்மா (Burma).

ஸ்ப்ளைக் கப்பல்கள்.—மாக்விக்கருகில், ஐராவதி நதியில்.

ரயில்வே தளங்கள்.—மாண்டலே.

கட்டடங்கள்.—டாரோ, லெக்சாங்க்.

2—9—43. (வியாழக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

(4 எதிரி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. 4 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

பகல்.—எதிரியின் விமான தளங்கள்—பிரான்ஸில் பார்டிக், டெனேயன்.

இலக்குகள்.—பாஸ் டி கலே.

மின்சார உற்பத்தி சாலைகள்.—மாஸிங்கார்ப்.

ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள்.—ஸெர்க்வெக்ஸ்.

கேட்டுகள்.—ஹாலந்திலுள்ள நீர் மார்க்கங்களின் ஒரு ஓரத்தில்.

இரவு.—சுரங்கவேடி பாவுதல்—எதிரியின் சமுத்திரங்களில்.

விமான தளங்கள்.—பிரான்ஸ், நெதர்லாந்து. (ஒரு நேசதேச விமானம் காணப்படவில்லை).

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

இருப்புப் பாதை மார்க்கங்களும் எதிரியின் ஸ்தானங்களும்.—தெற்கு இதாலி.

விமான தளங்கள்.—தெற்கு இதாலி.

ருஷ்யா (Russia).

(51 எதிரி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

ரயில்வே ஜங்ஷன்கள்.—கோனடாப், வாரோஸாபா, டபால்ட் ஸேவோ, எஜுகியோ.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய விமான தளங்கள்.—சைனாவில் கிங்க்மென், ஒவேகிகௌ.

ரயில் வண்டித் தொடர்கள்.—காண்டன்—ஆங்கௌ இருப்புப்பாதை.

படகுகள்.—நியூ கினியா கடற்கரைக் கருகில்.

பர்மா (Burma).

மோட்டார் லாரிகள்.—டாங்கப்பிலிருந்து புரோம்வரையிலுள்ள ரஸ்தாக்கள்.

ஸ்ப்ளைக் கப்பல்கள்.—ஐராவதி, சிண்ட்வின் நதிகள்.

ரயில்வே இஞ்சின்களும் வண்டித் தொடர்களும்.—டாங்கூ.

கட்டடங்கள்.—பால்ட்வா.

துருப்புகள் வசிக்குமிடங்கள்.—பியாப்வீ.
சாமான் கிட்டங்கிகள், தொழிற்சாலைகள்.—சௌக்.
கப்பல் கட்டுமிடங்கள்.—டாங்கூ.

3—9—43. (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமானம் கட்டும் தொழிற்சாலை—பாரிஸின் வெளிப்பக்கத்தில்.
விமானத்தின் பாகங்களைச் சேர்க்குமிடம்.—ம்யூலான்லே, ம்யூரியாக்ஸ் (பிரான்ஸ்).
விமான தளங்கள்.—வடக்கு பிரான்ஸ். (29 எதிரி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. 10 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை)
இரவு.—(22 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை (பெர்லின்).
இலக்குகள்.—ரைன்லாந்து.
இதர லக்ஷியங்கள்—வடக்கு பிரான்ஸ்.

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமான தளங்கள்—கோமிக்னியாடெல்லோ, குரோடோன்.
இருப்புப் பாதை, ரஸ்தா நிலயங்கள்—கோஸென்ஸா, காடன்ஸாரோ, பாண்டி—டி ஸாலெட்டி.
ரயில்வே தளங்கள்—கான்ஸெல்லோ, போல்ஸானோ, டிரெண்டோ, பொலோனு.
இருப்புப் பாதை போக்குவரத்துகள்—தெற்கு இதாலி.
வெயர்லஸ் ஸ்டேஷன்கள்—தெற்கு ஸார்டீனியா. (27 அச்சு விமானங்கள் நாசமாகிவிட்டன).

ருஷ்யா (Russia).

(31 அச்சு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் பூராவிலும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய துணைக்காவல் கப்பல் கூட்டம்—நியூகினியாவில் வீவாக். (சாமான் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. 12 ஜப்பானிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).

பர்மா (Burma).

கப்பல் துறைகள்—கார்-நி-கோபார் தீவுகள்.
படகு.—ஐராவதி நதி.
எண்ணெய் சேமிப்பு டாங்கிகள்—சௌக்.
ஜப்பானிய தலைமை காரியாலயம்—ஸம்ப்ராபம்.
ரஸ்தாவிலுள்ள பாலங்கள்—மியிட்கியினு.

4—9—43. (சனிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—
ரயில் வண்டித் தொடர்கள் நிற்குமிடங்கள்—ரூவன், ஏமியன்ஸ், அபிவில்லி (பிரான்ஸ்).
கப்பல்கள்—போலோன் துறைமுகம்.
ரயில்வண்டித் தொடர்கள் நிற்குமிடம்—லிலி ஸெயிண்ட்பால், ஹேஸ்ப்ருக் (பிரான்ஸ்).
விமான நடவடிக்கை—பெல்ஜியம் (15 எதிரி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. 3 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
இரவு.—லக்ஷியங்கள்—ரூர் பிரதேசம், ரைன்லாந்து (ஜெர்மனி).
இ-படகுகள்—இங்கிலீஷ் கால்வாய் (3 இ படகுகள் நஷ்டமாகின).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

இருப்புப் பாதைகளும், ரஸ்தாக்களும்—நேபிள்ஸ் பிரதேசம்.
ரஸ்தாக்களும், போக்குவரவு மார்க்கங்களும்—தெற்கு இதாலி.
வெயர்லஸ் அமைப்புகளும், இறங்குமிடங்களும்—ஸார்டீனியா.
ரயில்வே தளங்கள்—பாட்டி பாக்ளியா (இதாலி).

ருஷ்யா (Russia).

(70 எதிரி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).
விமானப் போர்களும், தரையிலுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் பூராவிலும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய தலைமை காரியாலயம்—நியூ கினியாவிலுள்ள லே.
ஜப்பானிய ஸ்தலங்கள்—லேக்கு வடமேற்கில்.
ஜப்பானியப் படகுகள்—நியூ பிரிடன் கடற்கரைக்கருகில்.
ஜப்பானியத் துருப்புகள்—கொலம்பாங்காராவில், விலாவில்.

பர்மா (Burma).

ரயில்வே தளங்கள்—மெயிமியோ.
எதிரியின் கப்பல்கள்—துறைமுகத்திலுள்ள சாமான்கள், ரெங்கூன்.
லெபெடான் ரயில்வே தளங்கள்—ரெங்கூனுக்கு வடமேற்கில் 75 மைல் தூரத்தில் உள்ளது.
கட்டடங்கள்—ஸிப்பவா.
ரயில்வே எஞ்சின்கள்—நாமியா ரெயில்வே தளங்கள்.

5—9—43. (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—ரயில் வண்டித் தொடர்கள் தங்குமிடங்கள்—கெண்ட் (பெல்ஜியம்).
விமான தளம்.—வொயன்ஸ்டிரெக்ட் (ஹாலந்து).
விமான தளங்கள்.—மார்டிக் (பிரான்ஸ்).
கப்பல்கள்.—டச்சுத் தீவுகளுக்கருகில் (6 எதிரி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. 2 நேசதேச விமானம் காணப்படவில்லை)

இரவு.—ரசாயன உற்பத்திசாலை, யுத்த தளவாட உற்பத்திசாலைகள்.—மான்ஹீம், லட்விக்ஷேபன் (ஜெர்மனி).
இலக்குகள்.—ரைன்லாந்து.
விமான தளங்கள்.—பிரான்ஸ், பெல்ஜியம். (35 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை. 9 எதிரி விமானங்கள் நஷ்டம்).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

விடர்போ பிரதேசம்.—நேபிள்ஸுக்கு வடக்கு (இதாலி).
விமான தளங்கள்.—கிராஸ்ஸாநிஸி (இதாலி).
இருப்புப்பாதை பாலம்.—மிண்டர்னோ.
ரயில்வே தளங்கள்.—நேபிள்ஸ்.
போக்குவரத்துகள், இதர லக்ஷியங்கள்.—தெற்கு இதாலி (Southern Italy).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

காண்டன்.—சீனா.
ஜப்பானிய ஸ்தானங்கள்.—லேயையும் ஸலாமூவாவைச் சுற்றிலும் (நியூ கினியா).

பர்மா (Burma).

விமானச் சண்டைகள்.—அக்கியாப் (ஆகாயத்தில் 1 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.)
ஸ்பீனா படகுகள்.—ஐராவதி, மாயூ நதிகள்.
மோட்டார் படகுகள்.—கலடான் நதி.
கட்டடங்கள்.—கியாக்பா.
சாமான் குவியல்கள்.—டாங்கப் (ஒரு நேசதேச விமானம் காணப்படவில்லை).

விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

31—8—43. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—டான் பாஸ் பிரதேசம்.

1—9—43. (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—ஸ்மொலன்ஸ்க் பிரதேசம்.

2—9—43. (வியாழக்கிழமை.)

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—டான் பாஸ் பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

3—9—43. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரியின் விமான நடவடிக்கையைப்பற்றி ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

4—9—43. (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—டான் பாஸ் பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

விமானச் சண்டைகள்.—நியூ கினியாவிலுள்ள வீவாக் விமான தளத்தின் பேரில்.

5—9—43. (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

6—9—43. (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain),

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

யுத்தக் குறிப்புகள்.

[கடைசிச் செய்தி:—இதாலி நிபந்தனையற்ற சரணாகதி செய்துவிட்டது.]

இதாலியில் படையெடுப்பு.

யுத்தத்தின் நான்காவது வருஷம் பூர்த்தியான தினமாகிய ஸெப்டம்பர் 3-ம் தேதியன்று விடியற்காலத்துக்கு ஒரு மணி நேரத்துக்குமுன் இதாலியின் கால் கட்டை விரல் போன்ற பாகத்திலுள்ள ரெக்கியோ பிரதேசத்தில் 8-ம் சேனையைச் சேர்ந்த பிரிடிஷ் கனேடியத் துருப்புகள் இறங்கின. பீரங்கிகளின் குண்டு வீச்சின் ரக்ஷணையோடும், விமானப் படை, கடற்படையின் உதவியுடனும் துருப்புகள் இறங்கின. இறங்குவதற்குமுன் மெஸ்ஸினா ஜலசந்தியைத் தாண்டி, கப்பல்கள் குண்டுகளை வீசி கடற்கரைப் பிரதேசங்

களை நொருக்கிவிட்டன. இந்த நிகழ்ச்சிகளில் பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த நெல்ஸனும், ராட்னியும் பங்கெடுத்துக்கொண்டன. படையெடுப்புக்குமுன் விமானப் படையின் தாக்குதலும் நடைபெற்றது.

இப்பொழுது கடற்கரை பூராவும் நேசதேசங்களின் வசமாகிவிட்டது. நாம் பிடித்த கேந்திர ஸ்தானமும் பலப்படுத்தப்பட்டுவிட்டது. அதன் வழியாக சாமான்களும், உதவிப் படைகளும் வந்துகொண்டிருக்கின்றன. மலைச் சரிவுகள் உள்ள பிரதேசத்தின் வழியாகவும் ஜெர்மன் எதிர்ப்பு முறைகளைத் தாண்டியும் கூடியவரையில் துரிதமாக 8-ம் சேனை முன்னேறுகிறது. ஏற்கனவே 2,000 இதாலியர்கள் கைதி செய்யப்பட்டார்கள். அநேக வாரங்களாக இதாலிய போக்குவரவு மார்க்கங்களை நொருக்கியதிலிருந்து இதாலிய இருப்புப் பாதைகள் சீர்கேடடைந்துவிட்டன. இதை விஞ ஜெர்மனியிலிருந்து இதாலிக்கு வரும் ஸப்ளை மார்க்கமான பிரென்னர் கணவாயை நமது விமானங்கள் தாக்கியிருக்கின்றன.

வி வி வி வி வி

அற்புதமான படை. ஐரோப்பாவில் முதல் முதல் இறங்குவதற்கு 8-ம் படையை அனுப்பியது பொருத்தமானதேயாகும். எல் அலாமீனிலிருந்து, எல் அகேலா, மாரத் அரண், டூனிஸ், கடானியா வழியாக முன்னேறி ஆச்சரியப்படத்தக்க நடவடிக்கைகளை நடத்தியிருக்கும் எட்டாம் படைக்கு சிறந்த அனுபவம் உண்டாகியிருக்கிறது. ஆகையால் ஹிட்லரின் ஐரோப்பியக் கோட்டையைத் தாக்குவதில் அது முன்னிலையில் நிற்கின்றது.

வி வி வி வி வி

இதாலியின் வீழ்ச்சி. இதாலியில் இறங்கியிருக்கும் படைகளை பேருக்குக்கூட எதிரிப்படைகள் எதிர்த்து நிற்கவில்லை. படைகளிறங்கும்பொழுது எதிரிகள் ஒரு குண்டுகூட வீசவில்லை. கண்ணுரக் கண்டவர் சொல்லுகிறுர்.

“நாங்கள் இப்பொழுதுதான் இதாலிய கடற்கரையிலிறங்கினேம். எதிரியின் விமானப் படையும், வெடிகுண்டுகளும், கப்பல்களும் தென்படவில்லை.

“கடற்கரையில் ஒரு சிறிய பெண்ணும், அவனுடைய தகப்பனும்தானிருந்தார்கள். அவன் மாலுமியாகயிருந்தவன். ஆங்கில பாஷை அவனுக்குக் கொஞ்சம் தெரியும். அவன் சிறித்துக்கொண்டே சொன்னுன். “நீங்கள் வந்துவிட்டீர்கள். இங்கே ஜெர்மன் படைகள் இல்லை. முஸோலினி போய்விட்டான்; ஜெர்மனி போய்விட்டது; நாங்கள் பட்டினியுடன் இருக்கிறேம்; ஐந்து நாட்களாக ரொட்டி கிடையாது”.

துருப்புகள் இறங்கியபொழுது ரெக்கியோ மகா ஜனங்கள் கடற்கரைக்கு வந்து சந்தோஷத்துடன் வரவேற்ருர்கள். முற்றுகையைத் தடுக்கத் தயாராகயிருந்த அரண்களை எதிரிகள் விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். எதிரிச் சேனைகள் பூராவும் சரணடைந்தன. இதாலியக் கடற்படை டாரண்டோ வளைகுடாவை விட்டுப் புறப்பட்டுவிட்டது.

தெற்கு இதாலி பூராவையும் எதிரிகள் காலி செய்துவிட்டனர். எதிரிகள் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளுக்காக படோக்ளியோ ஒரு மந்திரி சபையை அமைத்திருக்கிறுன் என்பது விந்தையாகயிருக்கிறது.

வி வி வி வி வி

நல்ல புத்தி உதயம். உள்நாட்டில் கதியற்ற நிலைமை உண்டாகிவிட்டது. ஸெப்டம்பர் மாதம் 4-ம் தேதியன்று நிபந்தனையற்ற சரணுகதியைப்பற்றி ரோம் ஒலிபரப்பில் பின்வருமாறு சொல்லப்பட்டது.

“எங்களுக்கு சிறிது சந்தர்ப்பம் கிடைத்தால் நாங்கள் சரியான நடவடிக்கைகளைச் செய்து முடிப்போம். எங்களுக்கு ஞாயமானதும், உபயோகமுள்ளதுமான திட்டத்தை நாங்கள் ஒப்புக்கொள்ளுவோம். இதாலிய தீபகற்பத்தின் மூலையில் எதிரி தாக்க ஆரம்பித்து இருக்கும் இந்த சமயத்தில், எங்களுக்குச் சாத்தியமானல், இதாலியின் அக்கரைக்கு ஒத்தவாறு நடவடிக்கைகளை நடத்த இதாலிய அரசாங்கம் தயாராகவிருக்கிறது.

“ஒழுக்க, பொருளாதாரா துறையில் சகிக்கக்கூடிய வாழ்க்கை நிபந்தனைகளை அளித்தால் நாம் ஐரோப்பிய புனருத்தாரணத்திற்குத் திட்டமாக உதவுகிறவர்களாவோம். நிபந்தனையற்ற சரணுகதியாகவேண்டுமென்று இன்னமும் கோரப்படுகிறது. நமது நகரங்கள்மீது உக்ரமாகக் குண்டு வீசி நமது நாட்டின் மீது படையெடுக்கிறுர்கள்.

“நாம் உண்மை நிலைமையை சமாளிக்கத் தயாராகயிருக்கிறேம். பிரிடனையும், அமெரிக்காவையும் பின்கண்ட கேள்வியைக் கேட்கிறேம். துரதிருஷ்டம் வாய்ந்த எங்களது

தேசத்தின் சுயேச்சையையும், ஒற்றுமையையும் நீங்கள் மதித்து நடத்த உத்தேசிக்கிறீர்களா? அம்மாதிரி உத்தேசித்திருந்தால் நீங்கள் ஏன் அதனைச் சொல்லிவிடக்கூடாது? ஆங்கிலோ சாக்ஸன்களது யுத்த சமாதான நோக்கங்கள் இதாலியின் எல்லை தற்போது போலிருக்கும் என்று உறுதியளிக்கின்றனவா அல்லது இதாலி மேற்கொண்டு துண்டாடப்படுமா என்று கேட்கிறோம்".

நிபந்தனையற்ற சரணாகதிதான் நேசதேசத்தாரின் முடிவு. யுத்தத்திற்குப்பின் நிறுவப் படும் திட்டங்களின் மந்திரியாகிய வில்லியம்ஜோவிட் சொல்லுகிறபடி நேசநாடுகள் வேண்டு வதெல்லாம் வேஷம் மாற்றுவதல்ல. அந்தரங்க சுத்திவேண்டுமென்பதுதான்.

வி வி வி வி வி

கயிற்றில் தாண்டவம். இப்பொழுது படோக்ளியோ கயிற்றின்பேரில் தாண்டவம் செய்ய முயற்சிக்கிறான். எதிர்கால நிகழ்ச்சிகளையும் கவனித்துக்கொண்டு ஜெர்மனி சம்பந்தமட்டில் பழைய இதாலிய நிர்வாகத்தின் அயல்நாட்டுக் கொள்கையை அனுஷ்டித்துவருகிறான். ஆகஸ்டு 6-ம் தேதியன்று ரோமுக்கு வந்த ஜெர்மன் தூதுகோஷ்டியார்கள் படோக்ளியோவுடன் சம்பாஷணை செய்து, நேசதேசத்தார்களின் நட வடிக்கைகளுக்கு மத்திய தெற்கு இதாலியயை விட்டுவிடாத பக்ஷத்தில் அந்த பிராந்தியங் களிலுள்ள ஜெர்மன் துருப்புகள் அங்கிருந்து வெளியேறிவிடவேண்டுமென்று முடிவு செய்யப் பட்டது. அதே சமயத்தில் அங்குவந்த ரிப்பன்டிராப்பும் எந்நிலைமையிலும் ஜெர்மனி இதாலியில் யுத்தத்தை நடத்துமென்றும், படோக்ளியோ நிர்வாகம் அதை எதிர்த்தால் அங்கே குயிஸ்லிங்க் நிர்வாகம் ஏற்படுத்தப்படுமென்றும் சொன்னான். நேசநாடுகள் நிபந்தனை யற்ற சரணாகதியைச் செய்யவேண்டுமென்று வற்புறுத்திவிட்டால் சமாதானம் செய்து கொள்ளுவதாக படோக்ளியோ பாசாங்கு செய்கிறான். மற்றொரு பக்கத்தில் 3,00,000 ஜெர்மானியர்கள் இதாலியிலிருப்பதாலும், லக்ஷக்கணக்கான இதாலியர்கள் ஜெர்மனியில் கூலி வேலை செய்துவருவதாலும் அவன் தயங்குவதாகவும் சொல்லிவருகிறான்.

வி வி வி வி வி

தந்திரம். ரோம் நகரத்தை ராணுவ தற்காப்பற்ற நகரமென்று படோக்ளியோ சொல்லிவிட்டது, நிலைமையில் சிக்க லுண்டாக்குவதற்காகத்தான் என்று தோன்றுகிறது. ஒரு நகரத்திலுள்ள யுத்த தளவாட சாலைகளும், தொழிற்சாலைகளும் மூடப்பட்டபின்னும், அதிலுள்ள ராணுவ நடமாட்டம் படையெடுக்கும் தேசத்தார்கள் நியமிக்கும் தூது கோஷ்டியாரின் ஆமோதனத்துக்குட்பட்டு நின்றபொழுதும்தான் அந்த நகரம் ராணுவ ரக்ஷணையற்ற நகரம் என்று சொல்லக்கூடும். இது விஷயத்தில் அநேக இன்னல்களிருக்கின்றன. இவ்விதமான பேச்சினால் நேச தேசத் தாரின் நடவடிக்கைகளில் தாமதம் உண்டாக்கவும், நேசநாடுகள் தயங்கும்படிக்கும், இதாலிய மக்களிடம் யுத்தக்கொடுமைகளிலிருந்து இதாலியைக் காப்பாற்ற தான் செய்து வரும் முயற்சிகளைப் பிரகடனம் செய்வதற்கும் படோக்ளியோ முயற்சிக்கிறான். சூழ்ச்சி பலமாகவிருக்கலாம். ஆகிலும் ஒருவரும் ஏமாற்றமடையமாட்டார்கள். நேசநாடுகளும் ஏமாந்துவிடமாட்டார்கள்.

தற்போதிருக்கும் இதாலிய நிலைமையை யோசித்தால் இதாலிக்கு பாதகமாக இதாலி யுடன் நட்புவைத்திருக்க ஜெர்மானியர்கள் தீர்மானித்துவிட்டார்கள். படோக்ளியோ மத்திய, தெற்கு இதாலியில் நேசதேசத் துருப்புகள் நடமாடுவதற்கு அனுமதிக்கவில்லை. மத்திய நிர்வாகம், பலமாக விருப்பதால் பொதுஜனங்களின் கிளர்ச்சி ஏற்பட சம்பாவிதமில்லை. தேசம் பூராவிலும் சமாதான உணர்ச்சி கிளம்பிவிட்டது. அவன் தீர்மானமாக நேசதேசத் தார்கள் கக்ஷியில் சேர்ந்துகொண்டால் ஜெர்மானியர்கள் படோக்ளியோ நிர்வாகத்தை ஒழித்து பாஸிஸ்டு முறைப்படியுள்ள பொம்மை அரசாங்கத்தை மன்னர் ஒப்புக்கொள்ளும்படி செய்துவிடுவார்கள். ஆகையால்தான் வேஷம் மாற்றுதல் போதாது, அந்தரங்க சுத்தியும் வேண்டுமென்று நேசதேசத்தார்கள் நினைக்கிறார்கள்.

வி வி வி வி வி

அடுத்த நடவடிக்கை என்ன? இதாலியைப் படையெடுத்தது மூலம் ஐரோப்பிய அரணை ஊடுருவிச்செல்ல நடவடிக்கை ஆரம்பமாகி விட்டாலும் அத்துடன் நடவடிக்கைகள் நின்றுவிடாது. வடஆபிரிக்கா, ஸிஸிலி யுத்தத்தைப் போல இதுவும் ஒரு முக்கியமான நடவடிக்கையாகும். இதாலியை யுத்தத்திலிருந்து அப்புறப் படுத்துவதுதான் இந்த நடவடிக்கைகளின் முக்கிய நோக்கம். இது கூடிய சீக்கிரம் முடி வடையும். ரோமைக் கைப்பற்றிவிட்டால் அதிலிருந்து ஐரோப்பா பூராவிலும் ராஜீய விளைவுகள் உண்டாகிவிடும். தெற்கு இதாலியைக் கைப்பற்றுவதிலிருந்து ஏட்ரியாடிக் கடலுக்கும், அயோனியன் கடலுக்கும் போகும் மார்க்கங்கள் திறக்கப்பட்டுவிடும். நேச

தேசத்தார்களை வரவேற்கத் தயாராகவிருக்கும் பால்கன் நாடுகளுக்குச் செல்லுவதற்கு இந்தக் கடல்கள்தான் வாசற்படி போன்றவைகள். இதாலியின்பேரில் நேசநாடுகள் படையெடுத்த தற்கு விசேஷ பயனுமுண்டு. சர்ச்சில் சொன்னபிரகாரம் குத்துச்சண்டைக்காரனைப்போல், நேசநாடுகள் இருகரங்களையும் உபயோகிக்கவேண்டும். இப்பொழுது ஒரு கரம் இதாலியைத் தாக்குகிறது. மற்றொரு கரம் எங்கு அடிக்குமென்று புலப்படவில்லை.

[குறிப்பு மேலே எழுதியிருக்கும் பாராக்கள் இதாலியின் சரணாகதிச் செய்திகள் வருவதற்கு முன்பு எழுதப்பட்டவை. பத்திராதிபர்].

வி வி வி வி வி

குத்துச்சண்டை. செப்டம்பர் 7-ம் தேதியன்று ரோம் ரேடியோவில் பின்வருமாறு சொல்லப்பட்டது. இன்னும் அநேக இடங்களில் படையெடுப்பு ஏற்படப்போகிறது. கலாப்பிரியாவில் பிரிடிஷார்களும், அமெரிக்கர்களும் படை பலத்தின் ஒரு சிறிய பாகத்தைத்தான் உபயோகித்திருக்கிறார்கள். ஸிஸிலியிலும், வடஆபிரிக்காவிலும் அவர்கள் ஏராளமான துருப்புகளையும், தளவாடங்களையும் சேமித்து வைத்திருக்கிறார்கள்.

இரு கரங்களையும் உபயோகித்து பலமான தாக்குதல் செய்ய ஞாயம் ஏற்பட்டிருக்கிறது. டைம்ஸ் பத்திரிகையில் எழுதியிருக்கிறபடி ருஷ்யர்கள் அபாரமான பளுவைத் தாங்கி வருகிறார்கள். ஜெர்மானியர்கள் அதிகப்படைகளை பலிகொடுக்கவில்லை. டேயிலி டேலகிராப் பத்திரிகை சொல்லுகிறபடி ஜெர்மனியை முறியடிக்க நேசநாடுகள் இதர மகத்தான போர்களைத் துவக்கவேண்டும். யார்க்ஷையர் போஸ்டு சொல்லுகிறபடி விமானத் தாக்குதல் மூலமாக ஜெர்மனியைச் சின்னாபின்னப்படுத்துவதுடன் இதர ராணுவப்படைகளும் அதை பலமாகத் தாக்கவேண்டும். ஸ்மட்ஸ் சொல்லுகிறார் "காலதாமதம் செய்யக்கூடாது. ஜெர்மனியில் பலமான கலகம் உண்டாகப்போகிறது. இரவு விமானத்தாக்குதலின் விளைவுகளை விட உள்நாட்டுக் கலகம்தான் ஹிட்லரையும் நாஸி தத்வத்தையும் நாசம் செய்யப்போகிறது."

வி வி வி வி வி

ருஷ்யப் போர்முனை. இங்கே தினந்தோறும் புதிய வெற்றிகள் கிடைத்து வருகின்றன. ஸ்மொலன்ஸ்கிலிருந்து அஸாவ் கடல் வரையில் 600 மைல்கள் நீளமுள்ள பிரதேசத்தில் ஜெர்மன் படை வரிசைகள் குலைந்து வருகின்றன. அவைகள் நீபர் நதிக்குப்பின் வாங்குகின்றன. ஸ்மொலன்ஸ்க் பிராந்தியத்தில் பின்வாங்குவது 1812-ம் வருஷத்தில் நெபோலியன் சென்ற வழியைப் பின்பற்றியிருக்கிறது. சில இடங்களில் துருப்புகள் தலைவிரிகோலமாகப் பின்வாங்குகிறார்கள்.

வி வி வி வி வி

அச்சுப் பிரசாரம். எந்த நிலைமையிலும் கோயபல்ஸ் சமாளித்து நிற்கிறான். அபாரப் பொய்சொல்லும் சக்திவாய்ந்தவனாகையால் அவன் இப்பொழுது பரிபாஷையை மாற்றிச் சொல்லுகிறான். இப்பொழுது "வெற்றிகரமாக ஜெர்மானிய முன்னேற்றத்துக்குப் பதிலாக வெற்றிகரமாக திட்டப்படி பின்வாங்கும் முறை என்று சொல்லப்படுகிறது. பெரிய நகரங்களென்று சொல்லப்பட்ட ஓரல், கார்கோவ், டாகன்ராக், ஸ்டாலினோ எல்லாம் சரளைக் குவியல்களாம். "தற்காப்பு யுத்தத்தில் ஜெர்மன் கைதான் ஓங்கி நிற்கின்றதென்று" ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் சொல்லுகிறார்கள். மற்றொரு ஜெர்மன் ரிப்போர்ட்டு பின்னும் ஒரு படி தாண்டிவிட்டது. கார்கோவைச்சுற்றி நடைபெறும் யுத்தத்தைப்பற்றிச் சொல்லும்பொழுது இங்கு ருஷ்யர்கள் பின்வாங்குகிறார்களென்றும், ருஷ்யர்கள் வறுமையால் யுத்தம் செய்கிறார்களென்றும் ஆயிரக்கணக்கான ருஷ்யர்கள் யாதொரு பயனன்னியில் மாண்டுபோகிறார்களென்றும் சொல்லப்படுகிறது. நாஸிகளின் தத்வப்ரவசன துரந்தரரான ஹாஹா பிரபு சொல்லுகிறபடி ஜெர்மானியர்கள் பின்வாங்கியதால் ஜெர்மன் யுத்த அரங்கம் குறைவுபட்டு விட்டதாம். ஆனால், ருஷ்யர்கள் அநேக முன்னணி பிரதேசங்களை வசப்படுத்தி விட்டதால் யுத்த முனைகள் விஸ்தரிக்கப் பட்டுவிட்டன. இத்துடன் ஸிஸிலி யுத்தத்தை அச்சு நாட்டினருக்கு வெற்றி என்று நாஸிகள் சொன்னதை ஒப்பிட்டுப்பார்க்கலாம். இதேமாதிரியாக இதாலியிலும், மற்ற இடங்களிலும் அச்சுநாட்டினரின் அநேக வெற்றிகளைப் பற்றியும் கதைகளை நாம் கேட்கக்கூடும்.

வி வி வி வி வி

ஜெர்மனியின் உள்நாட்டு நிலைமை. ஜெர்மனியின் உள்நாட்டு நிலைமை மோசமாகிவிட்டதென்பது ஹிம்லரை உள்நாட்டிலாகா மந்திரியாக நியமித்ததிலிருந்தே தெளிவாகத் தோன்றுகிறது. அந்தரங்கத்தில் அமைதிக்குறைவு உண்டாகியிருக்கிறதென்று தோன்றுகிறது. கூடிய சீக்கிரம் அது வெளிப்பட்டுவிடும்.

அதைப்பற்றி நாம் இப்பொழுது பேசப்போவதில்லை. ஜெனரல் ஸ்மட்ஸ் சொல்லுகிறபடி மற்றொரு உயர்வான ஜெர்மனி தோன்றிவிடும். டப்கூபர் சொல்லுகிறார் "எனக்குக் கிடைத்த தகவல்களிலிருந்து நல்ல ஜெர்மானியர்கள் இந்த யுத்தத்தில் ஜெர்மனிக்குத் தோல்வி நிச்சயமென்று முடிவுசெய்துவிட்டார்கள். அவர்கள் பின்வருமாறு பேசிக் கொள்ளுகிறார்கள்.

"சென்ற யுத்தத்தைவிட இந்த யுத்தத்தில் நம்முடைய நடவடிக்கை சிறந்தது. நாம் பிரான்ஸையும் ஹாலந்தையும் பிடித்தோம். அநேகமாக பிரிடனை தோற்கடித்தோம். சென்ற யுத்தத்தில் அமெரிக்கா யுத்தத்தில் கலந்துகொள்ள பிரியப்படவில்லை. இந்த யுத்தத்திலும் கலந்துகொள்ளுவதற்கு அதற்கு இஷ்டமே கிடையாது. அடுத்த தடவையில் அவர்கள் யுத்தத்தில் கலந்துகொள்ளவேமாட்டார்கள். நம்முடைய யுத்தத்தை நடத்துவதற்கு அடுத்த தடவை முட்டாளான கார்பொரல் ஹிட்லரைப் போன்ற ஒருவரை நியமிக்கக்கூடாது. அதுதான் நாம் செய்த தவறு. இந்தத் தவறு அடுத்த தடவை ஏற்படாமல் செய்துவிடுவோம். பிரிடனை முறியடிப்பதற்குமுன் ருஷ்யாவைத் தாக்குவது என்பதுதான் சரித்திரத்திலேயே நாம் செய்த மகத்தான தவறாகும். காலதாமதமன்னியில் நமது நகரங்கள் நாசமாகுமுன் நாம் சரணடையவேண்டும். அவ்விதம் செய்து அடுத்த யுத்தத்திற்கு நாம் தயார் செய்யவேண்டும். நமது எதிரிகள் ஜெர்மானியர்களில் அநேக புத்திசாலிகள் இருக்கிறார்களென்று பேச ஆரம்பித்திருக்கிறார்கள். அதுதான் நம்மிடமுள்ள தற்போதய தந்திரம்."

இதுதான் முதல்படி. அடுத்தபடியாக நிபந்தனையற்ற சரணாகதி ஏற்படும். டோகியோ இந்த அபிப்பிராயத்தை அறிந்துவிட்டது. ஸெப்டம்பர் மாதம் 8-ம் தேதியன்று டோகியோ ஒலிப்பரப்பில் "எதிர்காலத்திய யுத்தப்போக்கில் சிறிது நம்பிக்கைகூட வைக்க நியாயமில்லை" என்று சொல்லப்பட்டது.

வி வி வி வி வி

விமான நடவடிக்கை. ஆகஸ்டு மாதத்தில் ஜெர்மனி பலமாகத் தாக்கப்பட்டது. ஆகஸ்டு 12-ம் தேதி முதல் ஆகஸ்டு 31-ம் தேதிக்குள்ளாக பெர்லின் லேசாக 7 தடவைகளும், பலமாக இரண்டு தடவைகளும் தாக்கப்பட்டது. ஜுலை 24-ம் தேதியிலும், ஆகஸ்டு 7-ம் தேதியிலும் ஹாம்பர்க்குக்கு ஏற்பட்ட கதி பெர்லினுக்கும் ஏற்பட்டது. தாக்குதல்கள் ஒன்றுபட்டு இடைவிடாது நடைபெற்றன. ஒன்றுபட்டு தாக்குதல் செய்ததிலிருந்து அதிக நாசம் ஏற்பட்டது. தொடர்ச்சியாக நடைபெற்றதிலிருந்து ஜெர்மானியர்களின் நாடி தளர்ச்சி பெற்றுவிட்டது. மூன்று வாரங்களாக பெர்லின் வாசிகள் கடுந்துன்பமடைந்தார்கள். ஆகஸ்டு மாதம் 12, 14, 15, 17, 18 தேதிகளில் மஸ்கிடோ விமானங்களும், ஆகஸ்டு 23-ம தேதியன்று லங்காஸ்டர், ஸ்டர்லின், ஹாலிபாக்ஸ் விமானங்களும், ஆகஸ்டு 24, 25, தேதிகளில் மஸ்கிடோ விமானங்களும் குண்டுமாரி பொழிந்தன. ஆகஸ்டு 31-ம் தேதியன்று மற்றொரு பலமானத்தாக்குதலும் ஸெப்டம்பர் 3-ம் தேதியன்று மற்றொரு தாக்குதலும் ஏற்பட்டது. பிரான்ஸையும் வெடிவிமானங்கள் பலமாகத் தாக்கின. இதைக்கண்டு நடுங்கி விஷி ஒலிபப்பில் இங்கும் படையெடுப்பு ஏற்படுவதற்கு முற்போக்கான நடவடிக்கையென்று ஓலமிடப்பட்டது.

வி வி வி வி வி

யூ-படகு யுத்தம். இதுவும் ஜெர்மனிக்கு பாதகமாக மாறிவிட்டது. ஜெர்மானியர்களின் புள்ளி விவரங்கள் பிரகாரம் 36,000 டன்கள் மொத்த எடைமானமுள்ள 15 கப்பல்கள் நாசமாக்கிவிட்டனவாம். இந்த யுத்தத்தில் மாதாந்திர நஷ்டக் கணக்குகளில் இதுதான் மிகவும் குறைவானது. யூ-படகுகள் தினசரி ஒரு கப்பலை மூழ்கடிக்கிறதென்று வைத்துக்கொண்டால் இரண்டு யூ-படகுகள் தினசரி நஷ்டமாகின்றன என்று ஏற்படுகிறது.

வி வி வி வி வி

தேய்வு. தென்மேற்கு பஸிபிக்கில் ஜப்பானியரின் நிலைமை நாளுக்கு நாள் வலுக் குறைந்துவருகிறது. நியூ ஜார்ஜியாவில் ஒன்றுபட்ட எதிர்ப்பு நின்றுவிட்டதிலிருந்தே இது வெளிப்படுகிறது. கொலம்பஙகாராவிலிருந்து ஜப்பானியப்படைகள் கலைக்கப்பட்டுவிட்டன. மத்திய ஸாலமன்ஸ் தீவுகளிலும் அதைச்சுற்றிலுமுள்ள சமுத்திரங்களிலும் நேசதேச விமானங்கள் வட்டாரமிடுகின்றன. சமீபகாலத்தில் வேவாக் தீவில் எதிரி 282 விமானங்களை இழந்தான். ஜுலை மாதத்தில்

மத்திய ஸாலமன்ஸில் எதிரிக்கு 33 யுத்தக் கப்பல்கள் நஷ்டமாகின. லேயும், ஸலாமுவாவும் வளைத்துக்கொள்ளப்பட்டன. அதாவது ரபாலே சீக்கிரம் நாம் தாக்குவோம். நியூ பிரிடனுக்கும், நியூ கினியாவுக்கும் மத்தியிலுள்ள டாம்பியர் ஜலசந்தி நேசதேசத்தாரின் அமுலுக்குட்பட்டுவிட்டது. ஸாலமன்ஸிலுள்ள இஸபெல்தீவு நேசதேச வசமானதும் மத்திய பஸிபிக்கிலுள்ள மார்க்கஸ்தீவை நேசதேச விமானங்கள் தாக்கியதிலிருந்தும் ஜப்பானியர்களின் பலம் கடலிலும் ஆகாயத்திலும் குறைந்துவிட்டதென்பதற்கு ருஜு ஏற்படுகிறது.

வி வி வி வி வி

ஜப்பானிய நஷ்டங்கள். ஆகஸ்டு மாதத்தில் பஸிபிக்கில் 584 ஜப்பானிய விமானங்கள் அழிவுற்றன. 500 கப்பல்கள் கடலில் மூழ்கடிக்கப்பட்டன.

வி வி வி வி வி

சில்லரை விஷயங்கள். 1. நான்காவது இந்தியப் படையைச் சேர்ந்த 33 ஆபீஸர்களும், ஆள்களும் பிரிடனில் 6 வாரங்கள் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள். தொழிற்சாலைகளையும், பிரிடிஷ் விமான நடவடிக்கை நிலயங்களையும் பார்வையிடுவார்கள். லண்டனின் மேயர் பிரபுவும் அவர்களை வரவேற்பார். மன்னரும், ராணியும் அவர்களை வரவேற்று கௌரவமளிப்பார்களென்றும் தோன்றுகிறது.

2. அமெரிக்கர்கள் சீனாவுக்கு இரண்டு லிபெர்டிக் கப்பல்களை அனுப்பியிருக்கிறார்கள். அதில் சீனர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவார்கள். யுத்தம் முடியும்வரையில் சீனர்கள் அதை உபயோகித்து வரவேண்டும்.

3. கிழக்கு ஆபிரிக்காவிலிருந்த துருப்புகள் இந்தியாவுக்கும், ஸிலோனுக்கும் வந்துவிட்டன. ஜப்பானைத் தாக்கும் போரில் அவைகள் ஈடுபடும்.

நாஸி ஜெர்மனிக்கு அதோகதி வந்துவிட்டது.

(பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸின் யுத்த விமர்சனம்).

சென்ற இரண்டு வருஷங்களாக ஜெர்மனியின் தரைப்படையில் மூன்றில் இரண்டு பாகத்தையும் விமானப்படையின் செம்பாதியையும் ருஷ்யர்கள் எதிர்த்துநின்று அவைகளின் பெரும்பாகத்தை அழித்துவிட்டார்கள். முதல்முதலில் யுத்தம் ஜெர்மானியர்களுக்கு அனுகூலமாகயிருந்தபோதிலும் ஸ்டாலீன்கிராட் வெற்றிக்குப்பின் ருஷ்யர்கள் ஆச்சரியப்படத்தக்க முறையில் புத்துயிர் பெற்றுவிட்டார்கள். யுத்தப்போக்கும் மாறிவிட்டது. ருஷ்யப்படைகள் மேன்மேலும் வெற்றிபெற்று யூக்ரேனைத் தாக்குவதற்கு முன்னேறியிருக்கிறார்கள்.

ருஷ்யர்கள், இப்பொழுது முன்னேறித் தாக்க ஆரம்பித்துவிட்டார்கள். பின்வாங்கி வரும் ஜெர்மானியர்களின் சேனை முற்றிலும் சிதைவுபடாதபோதிலும், நேசதேச நாடுகள் ஹிட்லரின் ஐரோப்பியக் கோட்டையை பலமாகத் தாக்க ஆரம்பிக்கும்பொழுது ஜெர்மன் படைகள் முறிபட்டுவிடும்.

யுத்த ஆரம்பத்தில், முதல் கட்டத்தில் பிரிடிஷ் மக்களின் திடமான தீரம் உலகத்துக்கு வந்த பேராபத்தை எவ்விதம் நிவர்த்திசெய்ததோ அதுபோல இரண்டாவது கட்டத்தில் அமெரிக்கா தயாராகயில்லாதபொழுதும் ஐரோப்பாவில் ஜெர்மன் சேனையை எதிர்த்து நிற்க பிரிடிஷ் சேனைக்கு, போதுமான பலமில்லாதபொழுதும் ருஷ்யா எதிர்த்துநின்று உலகத்தைக் காப்பாற்றிவிட்டது.

ருஷ்யாவுக்குப் புகழுரை.

தற்காப்பு முறையிலும், எதிர்ப்பு யுத்த முறையிலும், ருஷ்யச்சேனை காட்டிய சாச்வதமான தீரத்துக்கும், அபாரமான கஷ்ட நிஷ்டூரங்களைச் சகித்துக்கொண்டு விடாமுயற்சியுடனிருந்ததற்கும், எல்லாவற்றையும்விட அதன் தலைவருக்கும் உலகத்தார்கள் தங்களுடைய மனமார்ந்த புகழுரையைத் தெரிவிக்கிறார்கள். யுத்த சரித்திரம் நிலைபெற்றிருக்கும்வரையிலும் அப்புகழுரையை உலகம் அனுபவித்துக்கொண்டுதானிருக்கும். அங்கே உண்டாகியிருக்கும் சம்பவங்கள் மானிட சரித்திரத்தின் எதிர்காலப் போக்கை விசேஷமாக பாதிக்கக்கூடும்.

நமது வெடிவிமான வீச்சுமுறைகள் பலமடைந்துவருவதால் அடுத்த 12 மாதங்களுக்குள்ளாக ஜெர்மனியிலுள்ள முக்கியமான நிலயங்கள் அழிவுபட்டு மறைந்துவிடும். ஜெர்மனி சிதைவுபடாமலும் யுத்தக் கொடுமைகளையும் அனுபவிக்காமலும் இருந்தபொழுது 1918-ம் வருஷத்தில் ஜெர்மன் மக்களின் மனோதிடம் குறைந்துவிட்டதென்றால் முப்பது வருஷ யுத்தத்தின் கொடுமைகளைவிட அதிகமான நாசம் விளைவிக்கக்கூடிய நடவடிக்கைகளை ஜெர்மனி எவ்வாறு தாங்கி நிற்கக்கூடும். இரவிலும், பகலிலும் நடைபெறும் விமானத் தாக்குதலின் பயனாக ஐரோப்பிய அரண் தவிடுபொடியாகி நொருங்கிவிடும். அரண்களின் நாசத்தைவிட அவைகளின் நாசம் பொதுமக்களின் மனோதிடத்தைத்தான் விசேஷமாக பாதிக்கக்கூடும். பொறுமைக்கும் எல்லையுண்டு. ஆக்கிரமிப்பு நாடுகளிலும், ஜெர்மனிக்கு உதவியளிக்கும் நாடுகளிலுமுள்ள மனித பலமும், இயற்கைப் பொருள்களும் உணவுப் பொருள்களும் அழிக்கப்படுகின்றன.

உள்நாட்டுக் கலவரம்.

உள்நாட்டில் கலவரம் அதிகரித்துவருகிறது. அதை ஹிம்லர் பலாத்கார முறையில் அடக்கியாண்டுவருவதால் அது இன்னும் பயங்கரமாகக் கிளம்பிவிடக்கூடும். ஹிட்லரிடமும், புதிய உலக அமைப்பிலும் நம்பிக்கை குறைந்துவிட்டது. கொடுமைகளை இழைத்தும் மானிட வர்க்கத்தை அக்கிரமமாக கொடுந்துன்பப்படுத்தியதுமான ஜெர்மானியர்களை ஆமோதனம் செய்தவர்கள் இன்று நரகாவஸ்தையைப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஹிட்லரும், அவருடைய கொள்ளைக்கூட்டத்தார்களும் ஜனங்களுக்கு இழைத்த அவமானங்களை நாகரீகம் படைத்த ஒரு மனிதனும் பொருத்துக்கொள்ள முடியாது. அவைகளும் நிலைத்துநிற்கமுடியாது.

ஜெர்மனியில் பலமான புரட்சி உண்டாகப்போகிறது. அதன் விளைவுகள் பகல், இரவு விமானத் தாக்குதல்களின் விளைவுகளைவிட ஹிட்லருக்கும் நாஸிஸத்துக்கும் கோரமான நாசத்தை உண்டுபண்ணும்.

ஹிட்லரையும், நாஸிஸத்தையும் நாசம் செய்ய முற்பட்டிருக்கும் ஏராளமான படைபலத்துடன் ஜெர்மனியின் உள்நாட்டு புரட்சிக்காரர்களடங்கிய ஐந்தாம் படையும் சேர்ந்துகொள்ளும்.

இறுதியில் வெற்றிபெற குறைந்த பக்ஷம் ஒரு வருஷமாவது பிடிக்கும். இந்த வருஷத்தில் நாம் முன்னைவிட அதிக முயற்சி செய்யவேண்டும். பலமான நஷ்டங்களும், நமக்கு ஏற்படக்கூடும் ஐரோப்பிய கோட்டையைத் தாக்குவதுதான் நமது முக்கிய நோக்கம். அதுதான் நம்முடைய யுத்த முயற்சியின் உச்சநிலை. ஆகிலும் காலஹரணம் செய்வது கூடாது.

1943-ம் வருஷத்தில் ஜெர்மனிக்கு ஏராளமான தோல்விகள்.

அச்சு நாடுகளின் கீர்த்தி அழிந்துவிட்டது.

(டைம்ஸ் பத்திரிகை).

1939-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 2-ம் தேதியில் 55 அல்லது 60 வயது வரும்பொழுது யுத்தம் ஆரம்பிப்பதைவிட 50-வது வயதில் யுத்தம் துவக்க ஆசைப்படுகிறேனென்று ஹிட்லர் ஸர் நெவில் ஹெண்டர்ஸனிடம் சொன்னபொழுது, அவனுடைய திவ்ய திருஷ்டி சக்தியானது அவன் உறுதியுடன் ஆரம்பித்த யுத்தமானது அவனுக்கும் அவனைச் சேர்ந்த ஜெர்மனிக்கும் நான்கு வருஷங்களுக்குப் பின் என்ன விளைவிக்கப்போகிறதென்பதை முன்கூடி மதிக்கப் போதுமான அறிவை அளிக்கவில்லை.

ஐம்பதாவது வயதில் ஹிட்லரின் அதிகாரமும், புகழும் உச்சஸ்திதியிலிருந்தன. யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பே அவன் வர்ஸெயில்ஸ் ஒப்பந்தத்தைக் கிழித் தெறிந்துவிட்டான். ஆஸ்திரியாவை ஜெர்மனியுடன் சேர்த்துக்கொண்டான். ஸெகோஸ்லாவியாவை தேசபடத்திலிருந்து அழித்துவிட்டான். இந்த நடவடிக்கைகளில் மற்ற பெரிய வல்லரசுகள் போல் ராஜ தந்திர முறையில் கீர்த்தி வாய்ந்த வெற்றிகளையும் பெற்றுவிட்டான். தன்னுடைய நாட்டையும் ஐரோப்பாவையும் யுத்தத்தில் புகுத்திவிட்ட பின்னரும் அவனுடைய புகழ் ஓங்கிநின்றது.

முதல் வருஷ யுத்த முடிவில் போலந்து, டென்மார்க், நார்வே, ஹாலந்து, பெல்ஜியம் பிரான்ஸ் முதலிய நாடுகள் முறியடிக்கப்பட்டன அல்லது நாஸி ஜெர்மனி அவைகளை ஆக்கிரமித்துவிட்டது. பிரிடனுக்கு வெளியேயிருந்த உலகத்தின் பெரும் பாகமும், பிரிடனும் மற்ற தேசங்களின் வழியைப் பின்பற்றிவிடுமென்று நினைத்தார்கள். பிரிடனுக்காக விமான யுத்தமும், பிரிடனிலுள்ள நகரங்களை ஜெர்மன் விமானங்கள் தாக்குவதும் நடைபெற்றன. ஜெர்

மன் விமானப்படைக்கு பிரிடனில் சிறிது தடங்கல் ஏற்பட்ட போதிலும் அது அங்கிருந்து பூராவாகத் துறத்தியடிக்கப்படவில்லை. 50-வது வயது வந்தபொழுது யுத்தம் துவக்கவேண்டுமென்று ஹிட்லர் முடிவுக்கு வந்த பிரகாரம் 1940-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் முடிவில் அவன் தன்னைப் பாராட்டிக் கொள்ள ஞாயமிருக்கிறது.

1941-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் முடிவில் பிரிடனை அவன் படையெடுத்து தோற்கடிக்க முடியாமலிருந்த போதிலும் ஹிட்லர் மிகவும் சக்தியுள்ளவனென்றும்; அவன் தோற்கடிக்க முடியாதவனென்றும் பீத்திக்கொள்ள அவனுக்கு முகாந்திரங்களிலிருந்தன. ஜூன் மாதம் 22-ம் தேதி ருஷ்யாவைத் தாக்கினான். இரண்டு மாதங்களுக்குள் அவனுடைய படைகள் ருஷ்யாவுக்குள் வெகுதூரம் ஊடுருவிச் சென்றன. மாஸ்கோவுக்கும், லெனின்கிராட்டுக்கும் ஆபத்து வரும் போலிருந்தது. அந்த வருஷம் வசந்த காலத்தில் பால்கன் நாடுகள் ஜெர்மனியின் ஆதிக்கத்துக்குட்பட்டுவிட்டன. ரோமலுடைய ஆபிரிக்கப் படைகள் லிபியாவில் இறங்க ஜெனரல் வேவலை எகிப்துக்குப் பின்வாங்கும்படி செய்தன. வேவல் மார்ஷல் கிராஸியானியை இதற்கு முந்திய மாரிகாலத்தில் முறியடித்தது தான் இந்த யுத்தத்தில் தரையில் பிரிடனுக்கு ஏற்பட்ட முதல் வெற்றி. பூர்ணமான வெற்றி கிடைக்காத போதிலும் ருஷ்யப் படைகள் அழிந்துவிட்டனவென்றும், யூ படகுகளால் விரட்டியடிக்கப்பட்டு பிரிடன் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறதென்றும், ஜெர்மானியர்கள் பறை சாற்றி வந்தார்கள். "பிரிடனை அநேகமாக ஒழித்துவிட்டோம்" என்று ஜெர்மானியர்கள் மனப்பால் குடித்தார்கள்.

1942-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்திலேயே நிலைமை மாறுதலடைந்துவிட்டது. 1943-ம் வருஷ ஸெப்டம்பர் மாத ஆரம்பத்தில், ஜெர்மனிக்கு ஏராளமான தோல்விகளும் ஏற்பட்டுவிட்டதென்பதைக் காண்கிறோம். இவ்விதமாக தோல்விகள் ஜெர்மனிக்கு 1806-ம் வருஷத்திலும், 1918-ம் வருஷத்திலும் ஏற்கனவே ஏற்பட்டிருக்கின்றன. கிழக்குப் போர்முனையில் 1941-ம் வருஷம் மாரிகாலத் தோல்விகளுக்குப்பின் ஜெர்மனிக்கு சென்ற வேனிர் காலத்தில் மறுபடியும் வெற்றிகள் கிடைத்தன. அவர்கள் முன்னேறி காகஸஸ் மலைகளின் அடி வாரத்திற்கும் ஸ்டாலின்கிராட்டுக்கும் சென்றனர். அவர்களுடைய வெற்றியின் எல்லை வந்துவிட்டது. ஸ்டாலின்கிராட்டிலிருந்து, ராணுவ சரித்திரத்திலேயே காணக்கூடாத மகத்தான தோல்வி பெற்று ஜெர்மன் துருப்புகள் திக்குத்திசை தெரியாமல் துறத்தியடிக்கப்பட்டன.

இந்த வருஷம் ஜூலை மாதத்தில் குர்ஸ்க் போர்முனையில் ஜெர்மானியர்கள் முன்னேறித் தாக்குதல் செய்தது பயன்படவில்லை. ஏராளமான நஷ்டம் ஏற்பட்ட போதிலும் ருஷ்யப் படைகள் சமாளித்து நின்றன. ஒரு மாதத்துக்குள்ளாக அவர்கள் இழந்த பிரதேசத்தைத் திரும்பப் பிடித்ததுடன் முன்னேறித் தாக்க ஆரம்பித்தார்கள். சமீபகாலத்தில் இந்த முன்னேற்ற யுத்தத்தின் முதல் படியாக கார்கோவ் திரும்பவும் ருஷ்யர் வசமாகிவிட்டது. ஜெர்மானியர்கள் பின்வாங்கிக்கொண்டே போகிறார்கள். ஒரு வருஷத்துக்கு முன் ஜெர்மன் படைகள் கிழக்குப் பக்கமாக முன்னேறின. இன்று நிலைமை தலை கீழாக மாறிவிட்டது. ருஷ்யர்கள் மேற்கு நோக்கி முன்னேறுகிறார்கள். வட ஆபிரிக்காவிலிருந்தும், ஸிஸிலியிலிருந்தும் ஜெர்மானியர்கள் வெளியேற்றப்பட்டுவிட்டார்கள். இதாலியை நாம் படையெடுத்துவிட்டோம். ஜெர்மனியிலுள்ள முக்கியமான நகரங்கள் வெடி விமானங்களால் நொருக்கப்படுகின்றன. பெர்லின் எதிர் காலத்தில் நடைபெறப்போகும் விமானத் தாக்குதல்களை முதல் முதலாக அனுபவித்துவிட்டது. அது போல் மற்ற நகரங்களும், எந்த நிமிஷத்திலும் தாக்குதலுக் குட்படலாம். இப்பேர்ப்பட்ட தோல்விகளிலிருந்தும் ஜெர்மன், பொதுமக்களின் மனப்பான்மைக்கும், தேசீய உயர்தர கோஷ்டியாருக்கும் என்ன மாறுதல்கள் ஏற்படுமென்பதை ஊகித்துக்கொள்ளலாம்.

இப்பேர்ப்பட்ட அவகேடு வந்திருக்கும் சமயத்தில் கெட்ட நடத்தையுள்ள ஹிம்லர் அதிகாரத்துக்கு வந்துவிட்டான். நான்கு வருஷங்களுக்கு முன் ஹிம்லர் அபார சக்தி வாய்ந்தவனாகயிருந்தான். ஆகிலும் அவனைவிட அதிகப்புகழும் செல்வாக்கு முள்ளவர்கள் ஹிட்லரைத் தவிர அநேகர் ஜெர்மனியில் இருந்தார்கள். இருந்தாலும், ஹிம்லரிடம் அவர்களுக்கு அச்சம் அதிகம்.

இப்பொழுது ஹிட்லர் பின் சென்றுவிட்டான். மறைமுகமாகயிருந்து வேலை செய்து வந்த ஹிம்லர் நாடகமேடைக்கு வந்துவிட்டான். ஹிம்லரைப் போன்ற குணாதிசயங்களுள்ள ஒருவரை நியமித்து உள்நாட்டுக் கலகங்களை அடக்குவதற்காக அவருக்கு அளவற்ற அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறதென்பது கவனார்கமுள்ளது. ஜெர்மானியர்களுக்கு சகிக்க முடியாத நிலைமை இன்னும் வரவில்லை. இந்த நிலைமை உண்டாகிவிடுமென்றும் நாஸித் தலைவர்கள் எதிர்பார்த்து அதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்கள். இதை எதிர்பார்த்து மயங்கி நேசநாடுகள் சும்மாவிருக்கவில்லை. எதிரியின் கவசம் பூண்ட துருப்புகள் முறியடிக்கப்பட்டாலொழிய ஜெர்மனியில் கலவரம் ஏற்படாதென்று நேசநாடுகள் அறிவார்கள்.

கியூபெக் மகாநாட்டின் முடிவையொட்டி நடவடிக்கைகள்.

(விக்ஹாம் ஸ்டீட்).

கியூபெக் மகாநாடு முடிவடைந்துவிட்டது. அதன் தீர்மானங்களை நடவடிக்கைகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

உலகத்தின் இரண்டு பிராந்தியங்களில் ஜப்பானையும், ஜெர்மனியையும் வளைத்துக் கொள்ளுவதற்கு நடவடிக்கைகள் ஆரம்பமாகிவிட்டன. இந்த இரண்டு எதிரிகளின் யுத்த லக்ஷியங்கள் கைகூடவில்லை. முன்னேறித்தாக்கும் முறைகளைவிட்டு தற்காப்பு திட்டத்தை அவர்கள் மேற்கொண்டுவிட்டார்கள்.

வட பஸிபிக்கிலுள்ள கிஸ்காவை அமெரிக்கப்படைகளும், கனேடியப்படைகளும் ஆக்கிரமித்ததும் வடக்கு போர்னியோவையும், நியூகினியாவையும் ஜெனரல் மாக் ஆர்தரின் விமானப்படைகள் வெற்றிகரமாகத் தாக்கியதும் எல்லைப்புறத்திலுள்ள தற்காப்பு நிலயங்களைத்தாக்கியதென்று வைத்துக்கொண்டாலும், அவைகள் ஜப்பானுக்கு அபாயம் விளைவிக்கக்கூடியவைகள். தென்மேற்கு பஸிபிக்கிலுள்ள ஜப்பானிய ஸ்தானங்களுக்கு அவைகள் சவால் விடுக்கின்றன.

வட அமெரிக்காவைத் தாக்குவதற்கு அலூஷியன் தீவுகளையும், ஆஸ்திரேலியா மீது படையெடுப்பதற்கு தென் மேற்கு பஸிபிக் தீவுகளையும் முக்கிய தளங்களாக உபயோகிப்பதற்கு பதிலாக ஜப்பான் அலூஷியன் தீவுகளைக் கைவிடும்படியாகவும் குறைவடைந்து வரும் கடற்படை பலத்துடன் தென்மேற்கு பிஸிபிக்கிலுள்ள தீவுகளையும் கடைசி பிரயத்தனமான தற்காப்பு செய்யவேண்டியதாகவும் ஏற்பட்டுவிட்டது. ஜெர்மானியரைப்போலவே ஜப்பானும் தாய் நாட்டிலிருந்து வெகு தூரத்தில் போர்புரிய திட்டம் போட்டது. ஜெர்மானியரைபோல் ஜப்பான் நேசதேச விமானங்களின் பலமான குண்டுவீச்சின் விளவுகளை அனுபவிக்காதபோதிலும் வடக்கு பஸிபிக்கிலும், தெற்கு பஸிபிக்கிலும் பெற்ற அனுபவத்தை யொட்டி, விமானத்தாக்குதல் ஏற்படுமென்றும் அது மிகவும் பலமாகயிருக்குமென்றும் ஜப்பான் அறிந்திருக்கும்.

ஜெர்மன் யுத்த தந்திரிகளின் கவலை.

கார்கோவில் ருஷ்யர்களின் வெற்றியும், அஸாவ் கடலுக்கு ருஷ்யர்களின் முன்னேற்றமும் சேர்ந்து கிழக்கு ஐரோப்பாவிலுள்ள ஜெர்மன் படை வரிசைகளுக்கு அபாயம் உண்டாகிவிட்டன. இதாலியையும், நேசதேச விமானஙகள் தாக்குவதையும் ஹிட்லரின் ஐரோப்பிய அரணில பலஹீனமான ஸ்தானங்களில் படைகளை இறக்குவதற்காக அவர்கள் தயாரித்து வருவதையும் கண்டு ஜெர்மன் யுத்த தந்திரிகளுக்கு பெருங்கவலை உண்டாகிவிட்டது. உள்நாட்டிலும் கவலைக்கிடமான நிலைமை உண்டாகிவிட்டது. ஆகையினால்தான் அதிருப்தியினால் உண்டாகும் கலவரங்களை அடக்கியாள ஹிம்லர் நியமிக்கப்பட்டிருக்கிறான். ஜெர்மனிக்குப் பூர்ணமான தோல்வி வராமல் செய்வதற்கும் அல்லது அந்த நாளை ஒத்திவைப்பதற்கும்தான் ஜெர்மன் தலைவர்கள் முயற்சிசெய்து வருகிறார்கள். ஜெர்மன் ராணுவம், தோற்கடிக்க முடியாதது என்ற பழங்கதையை நிலைநாட்டும் எண்ணத்துடன் ஒவ்வொரு தோல்வியையும் வெற்றி யென்று ஜெர்மன் மக்களிடம் தலைவர்கள் சொல்லிவருகிறார்கள். ஸிஸிலியைக் காலி செய்தது முதல்தரமான தற்காப்பு வெற்றி யென்று சொல்லப்படுகிறது. கார்கோவை யிழந்ததைப்பற்றிச் சொல்லும் பொழுது திட்டப்படி யுத்தத்திலிருந்து விலகிக்கொண்ட உயர்தரமான நடவடிக்கை யென்று விளக்கிச் சொல்லப்படுகிறது.

நேசதேச விமானப்படைகள் ஜெர்மன் பொதுமக்களின் மனோதிடத்தை நிலை குலைத்து விட்டாலும், பிரசார முறையில் புகழ் சொல்லி சென்ற யுத்தத்தைப்போல இந்த யுத்தத்திலும் யுத்த களத்தில் ஜெர்மனி தோற்கடிக்கப்பட வில்லை யென்றும், நாட்டிலுள்ள பொது மக்கள் முதுகில் குத்திவிட்டார்களென்றும் சொல்ல ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் தயாராக யிருக்கிறார்கள். இந்த கட்டுக்கதையை அடிப்படையாக வைத்துத்தான் ஜெர்மனியின் ஆயுத சேமிப்பும், நாஸி தத்வமும் அபிவிருத்தி யடைந்தன. இந்தக் கதையை நிரந்தரமாக சின்னா பின்னம் செய்து அழித்துவிட வேண்டுமென்று நேசதேசத்தார்கள் தீர்மானித்து விட்டார்கள்.

நேசதேச விமானங்களின் நடவடிக்கை மூலம் அழிவுபட்டு வரும் ஜெர்மன் தொழிற்சாலைகளுள்ள பிரதேசங்களிலுள்ள பொதுமக்களிடம் நடுநிலைமை வகிக்கும் தேசத்தார்களும் மற்ற அன்னிய நாடுகளும் அனுதாபம் காட்டவேண்டுமென்று ஜெர்மானியர்கள் இனிமேல் பிரயத்தனம் செய்தாலும் அது பிரயோஜனப்படாது. ஜெர்மன் மக்களுக்குள்ள யுத்த வெறியானது ஜெர்மன் நாட்டிலேயே யுத்தக் கொடுமைகளை அவர்கள் பூராவாக அனுபவித்தால்தான் மறந்து விடக்கூடும்.

வினையிட்ட ஜெர்மானியர்கள் அதன் பயனை அனுபவிக்கிறார்கள்.

பெர்லினை பலமாகத் தாக்கியதுபோல் ஜெர்மனியிலுள்ள எல்லா யுத்த தளவாட உற்பத்திசாலைகளையும் போக்குவரவு மார்க்கங்களையும் பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கும். இரண்டு மூன்று வருஷங்களுக்குமுன் வார்ஸாவையும், ராட்டர்டாமையும், பெல்கிரேட்டையும் காவண்ட்ரியையும் லண்டனையும் ஜெர்மன் விமானங்கள் தாக்கி அதன் மூலம் அவர்கள் விதைத்த விதைகள், அவ்விதமான கொடுமைக்குக் காரணமாகயிருந்தவர்களுக்கு நாசத்தை விளைவிக்கக்கூடிய அறுவடையைத் தந்துவிட்டது. ஜெர்மன் பூமியிலிருந்து ராணுவப் பூண்டையே அழித்துவிடுவதின் மூலம் ஜெர்மன் மக்களிடமுள்ள யுத்த வெறியையும் நிர்மூலமாக்க நேசநாடுகள் தீர்மானித்திருக்கிறார்கள். இதேவிதமாகத்தான் ஜப்பானிலும் நடைபெறும்.

பிரிட்டனிலும், கனடாவிலும் அமெரிக்காவிலும் ஏராளமாக விமானங்களும், கப்பல்களும் பீரங்கிகளும், எல்லாவிதமான யுத்த தளவாடங்களும் உற்பத்தி செய்யப்படுவதின் நோக்கமும் இதுதான். ஜப்பானிய ராணுவ அதிகாரிகளைப்போல ஹிட்லரும் அவனுடைய சேனையும் பலாத்காரத்தை பிரயோகித்தார்கள். அதே பலத்காரத்தினால்தான் அவர்கள் அழியப் போகிறார்கள். பிறருடைய அனுதாபத்தை சம்பாதிக்க ஜெர்மனி செய்யக்கூடிய பிரயத்தனங்களெல்லாம் பயன்படாது.

மிலியன்கள்கணக்கான போலிஷ் ஜனங்களையும், யூதர்களையும், ருஷ்யர்களையும் கொலை செய்தவர்களிடமும்,ஸெகோஸ்லாவோகியா, யூகோஸ்லாவியா, கிரீஸ் முதலிய தேசங்களிலுள்ளவர்களை சித்ரவதை செய்து அடிமைப்படுத்தியவர்களிடமும், ஐரோப்பாவில் பாதிபாகத்தை அக்கிரமமாக அடிமைப்படுத்தியவர்களிடமும் ஒருவரும் பச்சாதாபம் காட்டமாட்டார்கள். இந்தக் குற்றங்களில் ஜெர்மன் துருப்புகள் ஈடுபட்டவர்கள். ஜெர்மனியிலுள்ள பொது மக்கள் அவைகளுக்கு உடந்தையாயிருந்தவர்கள். திட்டப்படி கொடுமைக்குட்பட்ட ஜனங்களிடம்தான் நமக்கு அனுதாபம் உண்டாகும்.

ருஷ்யாவில் ஜெர்மானியர்கள் செய்த அக்கிரமங்களுக்கு அவர்கள் ஈடு கொடுக்க வேண்டும். பின் வாங்கும் பொழுது ஜெர்மன் துருப்புகள் ஒவ்வொரு நகரத்தையும் கிராமத்தையும் அழித்து வருகிறார்கள். அங்குள்ள ஜனங்களையும் அடிமைப்படுத்திவருகிறார்கள். நார்வேயிலிருந்து கிரீஸ் வரையிலுமுள்ள திக்கற்ற பொதுஜனங்களை அவர்கள் வதைத்து வருகிறார்கள். அவர்களுக்குத் தகுந்த சிக்ஷை கிடைத்து வருகிறது. அக்கிரமங்கள் பயன்படாதென்று தோன்றினால்தான் ஒழுக்கத்தின் மேன்மை அவர்களுக்குப் புலப்படும்.

யுத்த நோக்கங்களை இவ்விதமாக நுட்பமாக அறியவேண்டும். பாஸிஸம் இதாலியர்களை எங்கு கடத்திச் சென்றுவிட்டது என்று இப்பொழுதுதான் இதாலியர்கள் அறிந்து கொள்ளுகிறார்கள். முன்யோசனைப்படி செய்த அக்கிரமங்களுடையவும் இறக்கமற்ற அக்கிரம யுத்தத்தினுடையவும் விளைவுகளை ஜெர்மானியர்களும், ஜப்பானியர்களும் கூடிய சீக்கிரம் அறிந்து கொள்ளுவார்கள். நாகரீக உலகத்தின் வருங்காலத்திய க்ஷேமத்திற்கு அவர்களைப் பலி கொடுக்க வேண்டியது அவசியமாகும்.

நேசதேசங்கள், சங்கீதக் கச்சேரிகளிலுள்ள வித்வான்கள் போல.

ஒன்றுபட்ட யுத்த முற்போக்கு கோஷம்.

(லெப்டினன்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக்.)

கார்கோவின் வீழ்ச்சியிலிருந்து நாஸிகள் மறுபடியும் தலை தூக்க முடியாது.

இந்த வருஷ ஆரம்பத்தில் கார்கோவ் விழுந்தபொழுது "நமது சரித்திரத்திலேயே நடைபெறாத தோல்வி ஜெர்மன் சேனைக்கு ஏற்பட்டது" என்று ஜெர்மன் பிரசாரர்கள் ஒப்புக் கொண்டார்கள். மார்ச்சு 14-ம் தேதி அதை ஜெர்மனி திருப்பித் தாக்கிப் பிடித்துக் கொண்டதைப்பற்றி அவர்கள் பிரமாதமாகப் பீத்திக்கொண்டார்கள். இடைவெளியான ஐந்து மாதத்திற்குள்ளாக கார்கோவ் ராணுவ முறையிலும், தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்டமட்டிலும் போக்குவரவு மத்யஸ்தலமாகவும் முற்றிலும் உபயோகமற்றதென்று ஜெர்மானியருக்குப் புலப்படும்படியாக என்ன நேர்ந்திருக்கக்கூடும்.

கார்கோவின் முக்யத்வம் போக்குவரவு மார்க்கங்களின் மத்யஸ்தலமாகயிருப்பதுதான். அந்த நகரத்தையும், அதன் சுற்றுப் புறங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டவர் தாராளமாக

இருப்புப்பாதைகள் வழியாக எல்லா திசைகளுக்கும் போகக்கூடும். மேலும் யூக்ரேனுக்கு அது ஹிருதயம் போன்றது. மனிதர்களும், யுத்த தளவாடங்களும், கார்கோவுக்குக் கொண்டு வரப்பட்டு அங்கிருந்து இருப்புப்பாதைகளாகிய இரத்தக் குழாய்கள் மூலமாக யுத்தம் செய்யும் படைகளுக்கு அனுப்பப்படுகின்றன.

கார்கோவ் வழியாகச் சென்றுகொண்டிருந்த உடைபட்ட போக்குவரவு சாதனங்களை ருஷ்யர்கள் மறுபடியும் திருத்தியமைப்பதற்கு சிறிது காலம் செல்லும். காலி செய்யும் முன் ஜெர்மானியர்கள் மனதார அதற்கு நாசம் விளைவித்ததுடன், இருப்புப்பாதைகளை ருஷ்யர்கள் மறுபடியும் முன்போல் அமைப்பதுடன் எதிரிகளைத் துறத்திக் கொண்டுபின் செல்லுவதில் எதிரிகள் பரவலாக வீசியிருக்கும் சுரங்கவெடிகளையும் தாண்டிச்செல்ல வேண்டும். ஜெர்மானியர்களுக்கு சிறிது அவகாசம் கிடைத்துவிடும். இதற்குள் அஸாவ் கடலை நோக்கி ருஷ்யர்கள் முன்னேறினால் அதன் விளைவு என்ன ஆகுமென்று ஹிட்லர் யோசித்துப் பார்க்க வேண்டும். இந்தப் பிராந்தியத்தில் ருஷ்யாவுக்கு வெற்றிகிடைத்தால் டானட்ஸ் பகுதியிலுள்ள ஜெர்மன் ஸ்தானங்களுக்கு ஆபத்து வந்துவிடும். ருஷ்யாவுக்குச் செல்லுவதற்கு ஒரே ஒரு இருப்புப் பாதை உள்ள கிரிமியா தீபகற்பத்தை ரக்ஷிப்பதும் சிரமஸாத்யமாக ஆகிவிடும்.

இந்தப் பிராந்தியத்தில் ருஷ்யரின் முன்னேற்றத்தைக் கண்டு தான் ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் அதிகமாகப் பயப்படவேண்டும். ருமேனிய எண்ணெய் பிரதேசங்கள் ஸெபாஸ்டபோலுக்கு 300 மைலுக்குள்ளிருக்கின்றன. 1,000 மைல்களுக்கப்பாலிருந்து வந்த விமானங்கள் எண்ணெய் சுத்திகரிக்கும் ஆலைகளை ஏற்கனவே ஒரு தடவை தாக்கியிருக்கின்றன. 300 மைல்களிலிருந்து தாக்குதல் ஏற்பட்டால் அதன் விளைவுகள் அபரிமிதமாகயிருக்கும்.

நேசதேசத்தார்களை சங்கீத கோஷ்டியிலுள்ள சங்கீத வித்வான்களுக்கு ஒப்பிடலாம். பல மூலைகளில் பலவிதமான சங்கீத வாத்யங்கள் கோஷிக்கின்றன. இந்த சங்கீத கோஷ்டிக்குப் பின் விமானப்படை பலமிருந்து வருகிறது. அது இல்லாவிட்டால் தனிப்பட்ட நடவடிக்கைகள் நடப்பது இயலாது. இந்த இசைக் கச்சேரி முடிவையும்பொழுது எல்லா வாத்யங்களும் பலமாக கோஷிக்க ஆரம்பித்து உன்னத ஸ்திதியை அடைந்துவிடும். அதன் பிறகு இசை இனிது முடிவு பெற்று அமைதி உண்டாகும்.

கோயபல்ஸ் கடலில் தடுமாறி விழுந்துவிட்டான்.

(*A. J.* மாக்வின்னி.)

அநேக மாதங்களாகவும், அநேக வருஷங்களாகவும், யூ படகுகளின் கம்மாண்டர்களும் விமானப்படை அப்ஸர்வர்களும் சொல்லிக்கொண்டிருந்த அபாரமான கப்பல் நஷ்டக் கணக்குகளை ஜெர்மனி பலமாக நம்பிவந்தது. ஜெர்மானியர்கள் மூழ்கடித்துவிட்டதாகச் சொல்லிவந்த அநேக கப்பல்கள் கம்பீரத்துடன் பழுதுபடாமல் கடலில் சஞ்சாரம்செய்து வருகின்றன. பழுதுபடாமல் நடமாடும் ஒவ்வொரு கப்பலும் நேசதேசப் படையெடுப்புக் கப்பற்படையின் சங்கியையை ஓரளவு அதிகப்படுத்துகிறது. மிலியன்கள்கணக்கான கப்பல்களின் உதவியால்தான் வட ஆபிரிக்காவிலும், ஸிஸிலியிலும், நமக்கு வெற்றிகள் கிடைத்தன. புதிதாகக் கட்டப்படும் ஏராளமான கப்பல்களையும் சேர்த்துக்கொண்டு அடுத்த படியாக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

ஜெர்மனி மூழ்கடித்த அநேகம் கப்பல்கள் சஞ்சாரம் செய்கின்றன.

அநேக சமுத்திரங்களில் நடமாடும் அநேக பிரிடிஷ் சஞ்சாரிகளும், நீர்மூழ்கிகளைத் தாக்கும் கப்பல்களும், நாசகாரிகளும், சாமான் கப்பல்களும் மூழ்கிவிட்டதாக ஜெர்மன் ஒலிபரப்பில் சொல்லப்பட்டது. பதினாயிரக்கணக்கான பிரிடிஷ் மாலுமிகள் ஜெர்மானியர் செய்துவரும் கடற்படை சம்பந்தமான பிரசாரத்தை தாமாஷா என்று நினைக்கிறார்கள். ஆகிலும் ஜெர்மானியர்களைப்போல அவர்களை எதிர்த்து நிற்கும் படைபலத்தின் சக்தியை குறைவாக அவர்கள் மதிப்பதில்லை.

வட ஆபிரிக்காவில் துருப்புகள் இறங்குவதற்கு 24 மணி நேரத்திற்கு முன்னால்கூட ஜெர்மன் ஒலிபரப்பு வியாக்யானிகள், ஏராளமான பிரிடிஷ் கப்பல்கள் மூழ்கிவிட்டதால் படையெடுப்பு எந்த இடத்திலும் நடைபெறாதென்று சொல்லி வந்ததை ஜெர்மனியிலுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் அறிவார்கள். ஒலிபரப்பில் இவ்விதமான பிரசாரம் நடந்து கொண்டிருந்தபொழுது பிரிடிஷ் படையெடுப்பு கப்பல்கள் புறப்பட்டுவிட்டன. அப்

பொழுது ஜனங்களுக்கு ஊக்கமூட்டுவதற்காக ஐரோப்பாவைச் சுற்றியுமுள்ள இரும்பு வளையம் பலமானதென்று சொல்லும்படி வியாக்யானிக்கு கோயபல்ஸ் உத்தரவிட்டான். இரும்பு வளையத்தை ஸிஸிலி யுத்தம் முறித்துவிட்டது. அப்பொழுதும்கூட, யூ படகு களுக்கு பிற்போக்குகள் கிடைத்தபோதிலும் அவைகள் தோல்வி பெருதென்று கோயபல்ஸ் ஜனங்களிடம் சொல்லிவந்தான். யூ படகுகளின் அட்டகாசமும் குலைந்துவிட்டது. ஒவ்வொரு மாதத்தின் யூ படகு அழிவுகளிலிருந்தும் நமது கடற்படையின் சங்கியை அதிகரித்து வருகிறது.

ஜெர்மனியின் கடற்படைபலம் குறைந்துவிட்டது.

பிரிடனுக்கு ஏராளமான கப்பல் நஷ்டங்கள் ஏற்பட்டபொழுது பிரிடன் உண்மையை உறைத்து வந்தது. கப்பல் யுத்தம் பயஙகரமாகயிருந்தது. ஜனங்கள் சிக்கன முறையை அனுஷ்டிக்கவேண்டியிருந்தது. நிலைமை அபிவிருத்தியடைந்து, யூ படகு நஷ்டங்கள் அதிகரித்து, பிரிடிஷ் கப்பல் நஷ்டங்கள் குறைவு பட்டபொழுதும், பிரிடன் பொது மக்களிடம் நிலைமை சாதகமாயிருக்கிறதென்றும் ஆகிலும் சில பிற்போக்குகளை எதிர்பார்க்க வேண்டுமென்றும் எச்சரிக்கை விடுத்தது. இதே விதமாக ஜெர்மனியின் பலஹீனமான கப்பற்படை நிலைமையைப்பற்றி பொதுமக்களிடம் கோயபல்ஸ் உண்மையான பிரசாரத்தை இப்பொழுதாவது செய்தால் நலமாயிருக்குமென்று நினைக்கிறேன். ஜெர்மனியின் சிலாக்ய மான, மகத்தான துறைமுகமான ஹாம்பர்க்கின் பேரில் குண்டுகள் வீசப்பட்டதை ஜெர்மன் மக்களிடமிருந்து மறைத்துவிட முடியாது. அப்பொழுதும்கூட ஹாம்பர்க்கில் ஏற்பட்ட குண்டுவீச்சு ஜெர்மனியின் கடற்படை நிலைமையை பாதிக்கக்கூடியதென்று பெர்லின் ஒப்புக்கொள்ளவில்லை.

ஹாம்பர்க்கை முதல் தடவை வெடி விமானங்கள் தாக்கியபொழுது துறைமுகத்தில் $2\frac{1}{2}$ லக்ஷம் டன்கள் எடைமானமுள்ள கப்பல்கள் நின்றுகொண்டிருந்தன. இன்று ஹாம்பர்க்கில் ஒரு கப்பல்கூட கிடையாது.

எதிர்கால நிகழ்ச்சி.

ஹாம்பர்க் துறைமுகத்துக்குச் சென்ற சில கப்பல்கள் எம்டன், பிரெமன் துறை முகங்களுக்குச் செல்லுமென்று நான் நினைக்கிறேன். மற்றவைகள் நார்வேக்குச் செல்லு வதற்காக லூபெக்குக்கு போய்ச்சேரும். மற்றவைகள் ராட்டர்டாமுக்குச் செல்லும். மேலே சொல்லிய எல்லா துறைமுகங்களையும் நாம் இதற்குமுன் வெடி விமானங்கள் மூலமாக தாக்கியிருக்கிறோம். மறுபடியும் அவைகளைத் தாக்குவோம். அதே சமயத்தில் ஜெர்மன் கப்பல்களைக் கடலிலும் ஆகாயத்திலும் நாம் முற்றுகை செய்துவருகிறோம். ஜெர்மன் சரித்திரத்திலேயே இப்பொழுதுதான் ஜெர்மனிக்கு அதிக கப்பல்கள் தேவை. பலமாகச் சண்டை நடைபெறும் போர்முனைகளுக்குத் துருப்புகளை ஏற்றிச்செல்ல வேண்டிய அவசியம் அதிகரிக்கும்பொழுது ஜெர்மனியின் கப்பற்படையின் குறைவு ஜெர்மனியின் கஷ்டத்தை அதிகரித்துவிடும். வரப்போகும் சில வாரங்களில் ஜெர்மன் கடற்படை பலமான தாக்குதலுக்குட்படுமென்ற ஹேஷ்யங்கள் தோன்றுகின்றன.

ஹிம்லர்.

(டெயிலி எக்ஸ்பிரஸ்).

ஜெர்மனியிலிருந்து கிடைத்த தகவலின்படி ஜெர்மன் மக்களுக்கு பயங்கரமான காலம் வந்துவிட்டது. டாக்டர் பிரிக்குக்குப் பதிலாக உள்நாட்டு மந்திரியாக ஹிம்லர் நியமிக்கப் பட்டுவிட்டான். ஜனங்களை அடக்கியாளும் அதிகாரம் அவனுக்கு அளிக்கப்பட்டுவிட்டது. ஜெர்மன் ரகசியப் போலீஸாரின் தலைவரும், வாப்பன் துருப்புகளின் தலைவரும், ஹிட்லருக்கு அடுத்தபடியாக ஜெர்மனியில் அதிக சக்திவாய்ந்த மனிதருமான ஹிம்லர், உள்நாட்டில் சர்வாதிகாரியாக நியமிக்கப்பட்டுவிட்டான்.

ஹிம்லருக்கு இவ்விதமான புதிதான அளவற்ற அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதின் காரணம் தெளிவானது. உள்நாட்டுப் போர்முனை நொருங்கிவிடுமென்று ஜெர்மன் தலைவர்கள் அஞ்சுகிறார்கள்.

1918-ம் வருஷம் நடைபெற்றதுபோல் இப்பொழுதும் பொதுமக்கள் நடத்தக்கூடாது என்று சமீபகாலத்தில் அவர்கள் பிரசாரம் செய்துவருகிறார்கள். தேசபக்திக்கு வேண்டு

கோள் செய்வதும்மட்டும் போதாதென்று அவர்களுக்கு நிச்சயமாய்த் தெரியும். ஆகையால் நாஸிகளுக்கு ருசிகரமான முறைகளான, பயமுறுத்தலையும், கொடுமையையும் அவர்கள் கையாளுகிறார்கள். இந்த குணங்கள் ஹிம்லரிடம் குடிகொண்டிருக்கின்றன. அதிகரித்துவரும் யுத்தத்தின் கொடுமைகளைப்பற்றி அவர்கள் முணுமுணுத்தாலும் அவர்களைக் கைதிசெய்து காவல் முகாமில் அடைத்து கொடுந்துன்பத்துக்குள்ளாக்கி விடுவார்களென்றும் சரித்திரத்திலேயே இதுவரையில் காணக்கூடாதவிதமாக காட்டுமிராண்டிகளைப்போல் அவர்களை சித்ரவதை செய்வார்களென்றும் ஜெர்மன் மக்கள் நிச்சயமாக இப்பொழுது அறிந்து விடுவார்கள்.

கொடுந்துன்பம் விளைவிப்பதில் ஹிம்லருக்கு அதிக ஆசை உண்டு. ஜெர்மானியராகயிருந்தாலும், யூதராகயிருந்தாலும் அவனுடைய முறைகளைப் பிரயோகம் செய்வதில் அவனுக்கு ஒரு ஆக்ஷேபமும் கிடையாது. அவனுடைய ரகசியப் போலீஸ்காரர்கள் தங்களுடைய வேலையில் சிறிது பின் வாங்கியபோதிலும், தானே கசையடிகள் அடித்திருப்பதாக அவன் அடிக்கடி பீத்திக்கொண்டிருக்கிறான். அவன் வெளியில் செல்லும்பொழுதும் கையில் கசையுடன்தான் செல்லுவான். அவன் அநேக ஆள்களைக் கொலை செய்திருக்கிறான். இவனுடன் ரோப்ஸ்பியரை ஒப்பிடவே முடியாது. அப்பேர்ப்பட்ட ஹிம்லர் இப்பொழுது ஜெர்மன் உள்நாட்டிலாகா மந்திரியாக நியமிக்கப்பட்டுவிட்டார்.

யூதர்களைப் பூராவாகிலும் அழித்துவிடுவதுதான் அவனுடைய முக்கியமான அலுவல். ஜெர்மனியில் ஏற்பட்டிருக்கும் ஒவ்வொரு கொலைக் களத்தையும் அவன் நேர்முகமாகயிருந்து நிர்மாணம் செய்திருக்கிறான். அவனுடைய திட்டப்படிதான் போலந்திலுள்ளவர்கள் ஆயிரக்கணக்காகவும், பதினாயிரக்கணக்காகவும் கொலை செய்யப்பட்டார்கள்.

ஒரு சமயம் அவன் பின்வருமாறு எழுதினான் "சந்ததியை அபிவிருத்தி செய்பவன் நல்ல வர்க்கத்தை உண்டுபண்ணுவதுபோல் நாம் ஜெர்மன் ஜாதியைப் பெருக்கவேண்டும். நாம் நல்ல ஜாதியார்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுடன் நட்புவைத்துக்கொள்ளுவோம். மற்றவர்கள் இனிமேல் ஜீவித்திருக்கமுடியாது."

ஜெர்மன் ஸ்திரீகளுக்கு விவாகம் ஆகவில்லையென்ற குறையைச் சொல்லக்கூடாதென்றும் அவர்கள் தாய் நாட்டின் க்ஷேமத்திற்காக குழந்தைகளை உண்டுபண்ணவேண்டுமென்றும் சொன்னது ஹிம்லர்தான். ஜெர்மன் ஸ்திரீகள் இறந்துவிடுமுன் புதிய திட்டத்தை உஜ்ஜீவிக்கும்படி செய்வது அவர்களுடைய கடமையாகும் என்று அவன் சொல்லியிருக்கிறான்.

ராஜீய முறையிலும் ஹிம்லரின் நடவடிக்கை கவனிக்கத் தகுந்தது. அநேக வருஷங்கள் வரையில் அவனும், பீல்ட் மார்ஷல் கோயரிங்கும் பரம விரோதிகள். இருவரும் ஜெர்மன் போலீஸ் தலைவராக வேண்டுமென்று விரும்பினார்கள். விரோதிக் கொள்ளைக் கூட்டத்தார்களைப் போல் அவர்கள் ஒருவரை ஒருவர் ஆழ்ந்த அருவருப்புடன் விரோதித்தார்கள். ஆகிலும், ஹிம்லர் வெற்றிபெற்றான். 1936-ம் வருஷத்தில் அவனுக்கு அந்த உத்தியோகம் ஸித்தித்தது. அப்பொழுது பருமனாக உள்ள கோயரிங்கின் அக்கிரமச் செய்லைகளைத்தான் ஜனங்கள் சந்தோஷத்துடன் வரவேற்றார்கள். அவனைப்போல ஹிம்லர் அவ்வளவு அபாயகரமானவனென்றும் அப்பொழுது ஹிட்லர் மதிக்கவில்லை. இன்று ஹிட்லரையும், அடக்கி ஆளும் சக்தியை அவன் பெற்றுவிட்டானென்றுதான் சொல்லவேண்டும்.

அவனுடைய சம்மதத்தின் பேரில்தான் ஹிட்லர் அமுல் நடத்திவருகிறானென்பதில் சந்தேகமில்லை. ஜெர்மன் ரகசியப் போலீஸார் ஹிம்லருக்கு உட்பட்டவர்களே ஒழிய ஹிட்லரின் ஏற்பாட்டின்படி உண்டானவர்களல்ல. அந்தப் படையினருக்கு அவனிடம் உள்ள விசுவாசம் குறைந்து வருகிறதென்று அறிகுறிகள் ஏற்பட்டவுடன் அவன் அந்தப்படையைக் களைத்து சுத்திசெய்துவிடுவான். தாய் தந்தையர்களை அவமதித்துப் பேசிய குழந்தைகளுக்கு வெகுமதியளித்ததுபோல் ரகசிய போலீஸ் படையில் கோள்சொல்லுகிறவர்களுக்கும் அவன் ஏராளமான பரிசுகள் வழங்கி வந்தான்.

ஹிம்லரின் வருங்கால கதி என்ன ஆகும். அவன் நோய்க்கூறுள்ள தேகமுள்ளவன். கிரெட்டின் ஜாதியாரைப்போல் வக்ரஸ்வபாவமுள்ளவன். தென் அமெரிக்காவிலும், பின்லாந்திலும் 5 லக்ஷம் பவுன் மூலதனத்தை அவன் சேர்த்துவைத்திருக்கிறான். அவனுடைய மனோநிலை எவ்விதமிருப்பினும், ஒரு சமயத்தில் அவனுடைய அதிகாரம் முறிவுபட்டுவிடுமென்றும், அக்ரமங்கள் செய்த பூமியிலிருந்து அவன் தப்பி ஓடவேண்டுமென்றும் அவன் மனதில் தோன்றிவிட்டது. அவனுடைய அக்கிரமச் செய்கைகளின் பயனாக அவனை ஜனங்கள் இகழ்ச்சி செய்கிறார்கள். அவனுக்கு மனோ வியாதியை நிவர்த்திக்கும் சிகிச்சை பிரயோஜனப்படாது. அவனைத் தூக்கிலிடுவதுதான் சிறந்த தண்டனையாகும்.

ஜெர்மன் நார்டிக் ஜாதிக்கொள்கைக்கு நாசம்.

டென்மார்க்கில் புதிய உலக திட்டத்தின் தோல்வி.

(டைம்ஸ் பத்திரிகை.)

டென்மார்க்கில் நீண்டகாலமாக குழப்பம் உண்டாகி அது சமீப காலத்தில் வேலை நிறுத்தத்திலும், நாசவேலையிலும், சட்ட மறுப்பு இயக்கத்திலும் பரிணமித்திருந்தது. இப்பொழுது கலகமாக முற்றிவிட்டது.

அதிக சக்தி வாய்ந்த கொடுங்கோல் மன்னர்களை கதியற்ற கையளவு ஜனங்கள் எதிர்த்து நிற்கப் பிரயத்தனம் செய்வது பிரயோஜன மற்றதாகிலும், எதிர் காலத்தில் நடை பெறப்போகும் கலவரங்களுக்கு அது முற்போக்கான தீரச்செய்கையாகும்.

யுத்தத்துக்குமுன் பூகோள அமைப்பினால் அது தன்னுடைய கெட்ட எண்ணமுள்ள அயல் வீட்டானின் அபரீதமான படைகளின் தாக்குதலை வெற்றிகரமாக எதிர்த்து நிற்க முடியாதென்று நினைத்து டென்மார்க் மிதமான ஆயுதங்களைத்தான் சேகரித்து வைத்திருந்தது. அதனுடைய அயல் நாட்டு நடவடிக்கைகளும், பிறருக்கு அபாயமளிக்கக்கூடியதில்லை. அதனுடைய நிர்வாகமும், பொது ஜனங்களுள் க்ஷேமத்திற்காக நவீன ஏற்பாடுகளைச் செய்வதிலும் ஒருவரும் தன்னை எதிர்க்காதபடி பார்த்துக் கொள்ளுவதற்கான முறைகளைக் கையாளுவதிலும் கவனம் செலுத்திவந்தது. 1940-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் ஒரு இரவில் ஜெர்மானியர்கள் துரோகமாக எதிர்த்து அதைக் கைவசப்படுத்தி விட்டார்கள்.

ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு நடைபெற்ற மூன்று வருஷங்களுக்குப்பின் டென்மார்க்கு மக்களின் யுத்த முஸ்தீப்புகள் முன்னிருந்ததைவிட அதிகமாக யிருக்கமுடியாது. அடிமைப் பட்டிருக்கும் இதர நாடுகளைப்போல் அவர்கள் நேசதேசத்தார்களின் வெற்றிகளில் ஸ்வதந்திரம் உலகத்தில் உற்பவிக்கும் சின்னங்களைக் கண்டுவிட்டார்கள். தாங்கள் விடுதலை பெறும் வரையில் அவர்கள் மௌனமாக யிருக்க முடியவில்லை. ஸ்வதந்திரம் பெறுவதற்காக பகிரங்கமாகக் கலவரம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். அவர்களை பலமான படைகள் எதிர்த்து தலைகிளப்பாமல் அடித்து விடுமென்றும் அவர்களுக்குத் தெரியும். ஆகிலும் நேச நாட்டாருக்கு பூர்ணமான வெற்றி வரும்பொழுது ஜன சமூகத்துக்காக அவர்கள் மனதாரச் செய்த ஆத்ம தியாகத்தை உலகம் ஞாபகப்படுத்திக் கொள்ளுமென்று அவர்கள் பூர்ணமான நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

இந்த நடவடிக்கைகளெல்லாம் ஒரே ஒரு அடிப்படையான காரணத்தை உடையவை அதாவது நாஸிகளின் அந்திய காலம் வந்துவிட்டது, என்று ஐரோப்பாவிலுள்ளவர்கள் நன்றாய் அறிந்துவிட்டார்கள். முதல் முதலாக, இதாலியர்களின் மாயமும், கதியின்மையும் சேர்ந்து முஸோலினியின் வீழ்ச்சியில் முடிந்தது. அதை ஒட்டி ஜெர்மனியுடன் சகவாசம் கொண்ட நாடுகளிலெல்லாம், மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலிலிருந்து தப்பித்துக் கொள்ள வழி தேடும் முறையில் ராஜ தந்திரிகள் கிளர்ச்சிசெய்ய ஆரம்பித்தார்கள். டென்மார்க்கின் நடை வேறு விதமானது. அது அச்சுநாட்டுக்கு உடந்தையாக யிருக்கவில்லை. அதன் மக்கள் ஸ்வதந்திர உணர்ச்சியுள்ளவர்கள். நேசக்கக்ஷியிடம் அன்பு பாராட்டுகிறவர்கள். சமீபத்தில் நடந்த பொதுத் தேர்தலில் டென்மார்க்கிலுள்ள நாஸி வாக்காளர்கள் இரண்டு சதவிகிதமேதான் ஓட் கொடுத்தார்களென்பதிலிருந்தே இது வெளிப்படுகிறது. டென்மார்க்கின் எதிர்ப்புக்கு:ஸ்வீடனில் உடன்காலத்தில் எதிரொலி உண்டாகியிருக்கிறது. டென்மார்க்கை விட்டுத்தப்பி ஓடிவந்த யுத்தக் கப்பல்களை ஸ்வீடன் வரவேற்று ரக்ஷணை யளித்தது. நடு நிலைமை வகிக்கும் நாட்டின் நடவடிக்கைக்கு ஒத்ததுதான். ஆகிலும் ஸ்காண்டிநேவியாவில் ஜெர்மன் ஆதிக்கம் பலமாக விருக்கும்பொழுது துணிவுகரமாக ஸ்வீடன் செய்தது நம்முடன் அதன் சிநேகபாவத்தைக் குறிப்பிடுகிறது. எதிர்ப்பை நிறுத்திவிடாமலிருந்து வரும் நார்வே மக்கள் தங்களுடைய எதிர்ப்பை பலப்படுத்தி விடுவார்கள். எதிரியுடன் கெடுதல் விளைவிக்கக்கூடிய நட்புக்கொண்டபின் சொந்த ஜனங்களும் உறவை உதறித்தள்ளிவிட சந்தர்ப்பத்தை பிரதீக்ஷித்து வருகிறார்கள்.

ஆக்கிரமிப்பு நாடுகளில் டென்மார்க்கின் நடவடிக்கையானது சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து நிற்கும் தீரமுள்ள மனிதர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் உத்சாகம் ஊட்டக்கூடும். ஆகிலும், அவர்கள் கொஞ்சகாலம் பொருத்திருக்கவேண்டும்.

டென்மார்க்கு ஜனங்களின் கலகமானது ஜெர்மனியின் புதிய உலக திட்டம் பிரயோஜன மற்றது என்பதை மறுபடியும் வெளிக்காட்டிவிட்டது. இந்த தேசமக்கள் சுத்தமான நார்டிக் ஜாதியாரைச் சேர்ந்தவர். கொஞ்சம்கூட மனித நஷ்டமில்லாமல் அந்த நாட்டை ஜெர்மானியர்கள் திடீரென்று பூராவாக ஆக்கிரமித்துக் கொண்டார்கள். ஆகையால் நாஸிகளின் அட்டூழியங்களை நினைவு மூட்ட யாதொரு முகாந்திரமும் இல்லை. நாஸிகள் சரியான முறையில் ஆட்சிபுரியக்கூடுமானால் அது இங்குதான் நடைபெற்றிருக்கக்கூடும். நாஸிகளின் மூன்று வருஷ ஆட்சிக்குப்பின்னும் ஜெர்மன் ஆதிக்கத்தை அப்புறப்படுத்த சந்தர்ப்பமேயில்லாதபொழுது டென்மார்க் மக்கள் கலவரம்செய்ய ஆரம்பித்தார்களென்பது ஐரோப்பிய ஸ்வதந்திர மக்கள் ஜெர்மனியின் புதிய உலக திட்டத்தை சாச்வதமாக ஒப்புக்கொள்ள மாட்டார்களென்பதைத் தெளிவாக விளக்கிக்காட்டியது.

யுத்தப்போக்கு ஜப்பானுக்குப் பாதகமாக ஆரம்பித்துவிட்டது.

நேசதேசப் படைகள் சாவதானமாக முன்னேறுகின்றன.

(ஸ்காட்ஸ்மன் என்னும் பத்திரிகையில் தென்மேற்கு பஸிபிக்கில் அமெரிக்கப்படைகள் சாவதானமாக முன்னேறி வருகின்றன என்று எழுதப்பட்டிருக்கிறது).

தனிப்பட்ட இடங்களில் கிடைத்த வெற்றிகளைப்பற்றி மிகையாக நாம் மதிக்கக்கூடாது. ஆகிலும் அவைகள் ஜப்பானுக்குத் தோல்விகள் ஆரம்பமாகிவிட்டதைக் குறிப்பிடுகின்றன என்பது மட்டும் கவனிக்கதுள்ளது. ஒரு வருஷத்துக்கு முன்னால ஜப்பானியர்கள் முன்னேறிக் கொண்டிருந்தார்கள். இந்தியாவுக்கு அபாயம் உண்டாகும் போலிருந்தது. ஆஸ்திரேலியாவுக்கு உடன் காலத்தில் அபாயம் உண்டாகிவிடும் போலிருந்தது. பிரிடிஷ் மலேயா, பர்மா, கிழக்கிந்தியத்தீவுகள், பிலிப்பைன்ஸ் தீவுகள், போர்னியோ, இந்தியாவின் எல்லைச் சரகம், ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும் வாசற்படி முதலிய இடங்களுக்கு இரக்கமன்னியிலும் அதிவேகமாகவும் முன்னேறிவிட்ட ஜப்பானியப்படைகளைத் தடுத்துப் பின் தாக்கும்படி செய்ய நேசதேசத்தின் படைகள் போதுமானதல்ல வென்றும், பலமற்றதென்றும் தோன்றிற்று. ஆனால் ஆச்சரியப்படத்தக்க முறையில் ஜப்பானிய முன்னேற்றம் தடைபட்டு விட்டது. இச்சமயத்தில் இந்தியாவின் பேரில் ஜப்பானின் படையெடுப்பும் ஆஸ்திரேலியாவின் எந்த பாகத்திலும் ஜப்பானின் ஆக்கிரமணமும் நடை பெறக்கூடுமென்று ஒருவரும் எதிர்பார்க்க வில்லை. ஆகிலும் ஜப்பானியர்கள் பிடித்துக்கொண்டிருக்கும் நகரங்களிலிருந்தும், ஜப்பானியர்கள் கிடைத்த லாபங்களை ஒழுங்குப் படுத்தி பலப்படுத்திக் கொண்டிருக்கும் நாடுகளிலிருந்தும் அவர்களைத் துறத்தியடிப்பது சுலபமென்று ஒருவரும் தவறான அபிப்பிராயம் கொள்ளக்கூடாது. ஜப்பான் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளிலுள்ள சகல விதமான ஐச்வரியங்களையும் பயன்படுத்திக் கொள்ளும் படியாக ஜப்பானுக்கு அவகாசம் கொடுத்துவிட்டால் யுத்தத்தை நடத்துவதற்கும், சமாதான காலத்திற்கும் பிறர் ஒத்தாசையை எதிர்பார்க்காமல் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளும் நிலைமையை ஜப்பான் அடைந்துவிடும். அதற்கு ரப்பரும், எண்ணெயும், தகரமும், இரும்பும், நிலக்கரியும் அபரிமிதமாகக் கிடைத்துவிடும். ஜப்பானிலிருக்கும் தொழிற்சாலைகளுடன் சைனாவிலும், கிழக்கிந்தியத் தீவுகளிலுள்ள தொழிற்சாலைகளும், முஸ்தீப்புகளும், கப்பல் கட்டும் தளங்களும், கப்பல் பழுதுபார்க்கும் நிலயங்களும் ஜப்பானுக்குக் கிடைத்துவிடும். ஜெர்மானியர்களைவிட பரிஷ்காரமாக அநேக வருஷங்களாக யுத்தம் நடத்துவதற்காக ஜப்பானியர்கள் தயார்செய்து வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்னதேவை யென்று அவர்கள் அறிந்து விட்டார்கள். எதிரிகள் முற்றிலும் தயாராக இல்லாத சமயத்தில் அவர்கள் திட்டப்படி நடவடிக்கைகளை ஆரம்பித்து அபாரமான வேகத்துடனும், வெற்றியுடனும் முன்னேறிவிட்டார்கள். கிடைத்த லாபங்களை பொருளாதார முறைப்படி திருத்தியமைக்கும் முறைகள் இப்பொழுது துரிதமாகக் கையாளப்படுகின்றன. ஜப்பான் மிகவும் பயங்கரமான எதிரி. யுத்த ஆரம்பத்திலிருந்ததைவிட ஜப்பானுக்கு ஏராளமான ஐச்வரிய லாபம் கிடைத்து விட்டதால் அது வலுவடைந்து விட்டது. இப்பொழுது அமெரிக்காவிலிருந்து தென்மேற்கு பஸிபிக்கில் மனித பலமும், தளவாடங்களும் குவிந்து வருவதால் கடலிலும், ஆகாயத்திலும், தரையிலும் தனிப்பட்ட சச்சரவுகளில் ஜப்பான் தோல்வியடைந்து வருகிறது.

—நியூ கினியாவிலும், ஸாலமன்ஸ் தீவுகளிலும், நியூ ஜார்ஜியாவிலும் வனாந்திரச் சண்டைகளிலேயே ஜப்பான் முறியடிக்கப்படுகிறது. வனாந்திரச் சண்டையில் ஜப்பான் மேன்மை யடைந்

திருந்ததால்தான் ஆரம்பத்தில் அதற்கு அபாரமான வெற்றிகள் கிடைத்தன. விமானப்போரில் அது தோல்வியடைந்து விட்டது. அதற்கு கப்பல் நஷ்டங்களும் ஏராளமானவை. ஆகிலும் ஏற்கனவே சொன்ன பிரகாரம், தனிப்பட்ட வெற்றிகளை நாம் மிகைப்படுத்திச் சொல்லக்கூடாது. எதிரியைவிட நம்முடைய யுத்த நடவடிக்கை உயர்வான தென்று வெளிப்பட்டாலும், இறுதியில் வெற்றி பெறுவதற்கு அவைகள் போதுமானவையல்ல.

ஜப்பானுடைய உற்பத்தி போதுமானதல்ல.

அமெரிக்காவின் அபரிமிதமான உற்பத்தியைக்கண்டு பயந்து சில மாதங்களுக்கு முன் ஜப்பானியர்கள் தங்களுடைய ஆத்மீக வலுவின் மேன்மையைப் பற்றியும், அமெரிக்காவின் இகலோக ஐச்வர்யத்தைவிட ஆத்மீக வலு தான் வெற்றி பெருமென்றும் சொல்லிவந்தார்கள். இச்சமயத்தில் அவ்விதமான பேச்சுகள்பயன்படாது. கடற்படையைச் சேர்ந்த காப்டன் குரிஹரா என்பவர் டோகியோவில் விரிவாகப்பேசியதை ஆகஸ்டு 10-ம் தேதி டோமி பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கிறது. அதன் சாராம்சம் பின்வருமாறு "தெற்கு பஸிபிக்கில் சாமான்கள் கொண்டுபோகும் மார்க்கங்களுக்காக நடைபெறும் சண்டைகளின் முடிவுகள் யுத்த முன்னணியில் நடைபெறும் போர்களைப் பலமாக பாதிக்கக்கூடும். ஆகையால் போக்கு வரவு மார்க்கங்களைப் பத்திரமாகக் காப்பாற்ற வேண்டியது அவசியம்." "விமான ஆதிக்கமும், கடலாதிக்கமும் பெற்றுவிட வேண்டும். தாய் நாட்டில் உள்ள யுத்த தளவாட உற்பத்திகள் போர்முனையிலுள்ள கவசம் பூண்ட படைகளின் போர் புரியக்கூடிய சக்தியையும் யுத்தப் போக்கையும் விசேஷமாக பாதிக்கக்கூடும்." ஆகையால் பொதுமக்களின் யுத்த முயற்சிகளை இரட்டிக்கவேண்டு மென்று அவர் வற்புறுத்தினார்.

ஜனவரி மாதம் வெளிவந்த சுபோகோரான (மத்திய ரெவ்யூ) என்னும் பத்திரிகையில் உற்பத்தியின் அதிகரிப்பு அவசியம் என்று எழுதும்பொழுது டாரோ டாபி எழுதியிருக்கிறார். நம்மிடம் ஆத்மவிசாரம் செய்கிறவர்கள் அநேகரிருக்கிறார்கள். சைனா சம்பவத்திற்குப் பின் ஆத்ம சக்தியைப்பற்றி அதிகமாக பேசப்படுகிறது. தளவாட உற்பத்தியை அதிகப்படுத்தும் அவசியத்தை ஸ்பஷ்டமாய் அறிந்துகொள்ளவில்லை. அருசிகரமாகவும் க்ஷேமக் குறைவாகவும் ஏற்பட்ட சில சம்பவங்களுக்குப்பின் தான் சமீப காலத்தில் அந்தப் பிரச்னை நமது கவனத்துக்கு வந்திருக்கிறது. ஆகிலும் அதன் பூரா பாகங்களையும் நாம் சரிவர அறிந்திருக்கிறோமா என்பது சந்தேகாஸ்பதமானது. பிரிட்டனையும், அமெரிக்காவையும் நம்முடைய ஊக்கத்தினால் அழித்துவிடலாமென்றும், அவர்கள் எவ்வளவு அபரிமிதமாக தளவாடங்களை உற்பத்தி செய்தாலும் அவர்களுடைய ஆயுதங்கள் எவ்வளவு சிறந்தவைகளாகயிருந்தாலும் தங்கள் நாட்டிற்காக உயிர் துறக்க அவர்களுடைய சேனைகளிடம் ஊக்கமில்லையென்றும் அதனால் அவர்கள் ஆயுதங்களைப் பயன்படும் முறையில் உபயோகிக்க மாட்டார்களென்றும் நாம் சொல்லிவந்திருக்கிறோம். இந்த நம்பிக்கை யூட்டும் அபிப்பிராயங்கள் என்னுடைய வாதங்களை ருஜுப்பிக்கின்றன. ஊக்கம் மிகவும் முக்கியமான தென்பதில் சந்தேகமில்லை. ஜப்பானியர்கள் சொல்லுகிறபடி அதற்கு அபார சக்தியுண்டென்று நினைத்தால் ரோமன் ஹானிலும், டோயர் சுவாங்கிலும், குடால்கனாலிலும் நமக்குத் தோல்வி ஏற்பட்டிருக்காது. ருஷ்ய-ஜப்பானிய யுத்தத்திலும் ஆயுதங்கள் இப்போதிருக்கும் பரிஷ்காரத்தை அடையாத போதிலும் நம்முடைய 26 ஸெண்டிமீடர் வாயுள்ள பீரங்கிகளின் உதவியில்லாமல் ஆர்தர் துறைமுகத்தைப் பிடித்திருக்க முடிந்திருக்காது.

பிரதம மந்திரியும், அவனுடைய சகாக்களும் குறிப்பிட்ட காலத்துக்குள், அதாவது ஒரு வருஷத்திற்குள், உற்பத்தியை அதிகரித்து விடாவிட்டால், தோல்வியுற்ற ஜெனரலைப்போல அவர்கள் தற்கொலை செய்துகொள்ளவேண்டியது தான் என்றும் டாபி சொல்லுகிறார்.

வல்டி வெஞ்சன்ஸ் பருந்துப்பாய்ச்சல் விமானங்கள்.

பர்மாவிலுள்ள ஜப்பானிய போக்குவரவு மார்க்கங்களையும் துருப்பு சேமிப்பு ஸ்தலங்களையும் சமீபத்தில் தாக்கிய வல்டி வெஞ்சன்ஸ் பருந்துப் பாய்ச்சல் விமானங்கள் எதிர்கால முன்னேற்ற யுத்தத்தில் முக்கியமான நடவடிக்கைகளை நடத்தக்கூடும். 1940-ம் வருஷத்தில் நடைபெற்ற யுத்தத்தில் ஜெர்மன் பான்ஸர் டிவிஷன் துருப்புகளுக்கு ஒத்தாசை செய்த ஜெர்மன் ஸ்டுகா பருந்துப் பாய்ச்சல் விமானங்களைப்போல் அமெரிக்காவும் இந்த விமானங்களைக் கட்டியிருக்கிறது.

வல்டி வெஞ்சன்ஸ் விமானம் அதிக வேகமும், சக்தியும், ஒரு என்ஜினும் உள்ளது. உலகத்திலேயே சிறந்தது என்று அது கீர்த்திபெற்றது. அதன் நிகழ்ச்சிகள் ரகசியமானவை. 1,600 H. P. ரைட் ரேடியல் என்ஜினுள்ளதும், 2,000 ராத்தல் குண்டுகளை ஏற்றிச்செல்லும் சக்தியும், வெகுதூரம் பறந்து செல்லக்கூடியதுமான சக்தியுள்ள இந்த விமானம் எதிரி ஆக்கிரமித்திருக்கும் எந்தப் பிரதேசத்தையும் பலமாகத் தாக்க சக்தியுள்ளது.

இந்தப் பருந்துப்பாய்ச்சல் விமானத்திலுள்ள உயர்தர பீரங்கிகள் இறக்கைகளிலமைக்கப்பட்டிருக்கின்றன. பின்புறத்திலும் இரண்டு பீரங்கிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எதிர்த்து அடிப்பதற்கு இவைகள் பயங்கரமான பீரங்கிகள். கனமான தகடுகளால் விமானம் அமைக்கப்பட்டிருப்பதால் விமானத்துக்கும், விமானிக்கும், பீரங்கியாளுக்கும் பலமான ரக்ஷணை ஏற்பட்டிருக்கிறது. விமானத்தில் நூதனமான மின்சார சக்தியால் ஓட்டப்பட்ட பிரேக்குகளிருக்கின்றன. கீழே பாய்ந்து செல்லும்பொழுது விமானத்தை ஓட்டுவதற்கு அவைகள் வசதியளிப்பதுடன் குறிதவறாமல் அடிப்பதற்கும் அவைகள் சாதகமளிக்கின்றன.

ஹங்கேரிய அபத்தப் பஞ்சாங்கம்.

தென் அமெரிக்க ஸமஸ்தானத்தின் தலைவரிடம் ஒரு புதிய ஹங்கேரிய அயல்நாட்டு மந்திரி தன்னுடைய நற்சாக்ஷிப் பத்திரங்களை சமர்ப்பித்தார்.

“நீ எந்த தேசத்தின் பிரதிநிதி” என்று தலைவர் கேட்டார்.

“ஹங்கேரிய ராஜ்யத்தைச் சேர்ந்தவன்” என்று மந்திரி பதிலுரைத்தார்.

“ஓஹோ, உங்களுக்கு மன்னர் இருக்கிறாரா” என்றார் தலைவர்.

“இல்லை. நாங்கள் கடற்தளபதி ஹார்தியின் ஆளுகைக்குட்பட்டிருக்கிறோம்” என்றார் மந்திரி.

“அப்படியானால் உங்களிடம் கடற் படையிருக்கிறதா” என்றார் தலைவர்.

“இல்லை. எங்களிடம் கடற்படை கிடையாது” என்றார் மந்திரி.

“சரிதான். உங்கள் நாடு யுத்தத்தில் நடுநிலைமை வகிக்கிறதா” என்றார் தலைவர்.

“இல்லை. நாங்கள் ருஷ்யாவுடன் போர்புரிகிறோம்” என்றார் மந்திரி.

“அதற்குக் காரணம் யாது” என்று தலைவர் வினவினார்.

“டிரான்ஸல்வேனியாவை நாங்கள் திரும்பவும் அடையவேண்டும்” என்றார் மந்திரி.

“ஓஹோ, டிரான்ஸல்வேனியா ருஷ்யரிடமிருக்கிறதா” என்றார் தலைவர்.

“இல்லை. அது ருமேனியரிடமிருக்கிறது” என்றார் மந்திரி.

“ஆகையால் நீங்கள் ருமேனியருடன் போர் புரிந்துவருகிறீர்களா” என்றார் தலைவர்.

“இல்லை. ருமேனியா எங்களுடைய நண்பன்” என்றார் மந்திரி.

தலைவர் டெலிபோன் கருவியை எடுத்து இவனைப் பயித்தியக்கார முகாமுக்கு அனுப்புங்கள் என்று பேசினார்.

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

'வி' டயரி-1944.

(குறிப்பு புஸ்தகம்).

(அக்டோபரில் வெளிவரும்).

லினன் ரூ. 1—8—0; ஷீப்ஸ்கின் ரூ. 1—12—0; மொராக்கோ ரூ. 2—4—0.

தபால் செலவு (பிரத்தியேகம்) :—ரிஜிஸ்தர் புக் போஸ்ட்டில் முதல் காபிக்கு ரூ. 0—4—3
அத்துடன் சேர்த்து அனுப்பும் ஒவ்வொரு காபிக்கும் ஒவ்வொரு அணா.

காபிகளுக்கு முந்துங்கள்!

கீழ்க் கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம்.—

காரியதரிசி,
தேசீய யுத்த முன்னணி நிலையம்,
புதுக்கோட்டை (தென் இந்தியா).

புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலையத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 163. (3-வது பிரிவு).

11- 9-43	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00
12- 9-43	நீர்ப்பழனி	... ,,	7.00
,,	ஆலூர்	... ,,	7.30
13- 9-43	காரையூர்	... ,,	7.00
,,	இடையாத்தூர்	... ,,	7.30
14- 9-43	வடவாளம்	... ,,	7.00
,,	செம்மட்டிவிடுதி	... ,,	7.30
15- 9-43	C. S. M. பள்ளிக்கூடம்	... காலை	10.00
,,	ராணி பெண் பாடசாலை	... ,,	10.45
15- 9-43	காலேஜ் A இங்கிலீஷ்	... காலை	10.45
,,	காலேஜ் B தமிழ்	... ,,	10.45
,,	நார்த்தாமலை	... மாலை	7.00
,,	உப்பிலியக்குடி	... ,,	7.30
16- 9-43	அண்டக்குளம்	... ,,	7.00
,,	கிள்ளனூர்	... ,,	7.30
17- 9-43	கொடும்பாளூர்	... ,,	7.00
,,	விராலூர்	... ,,	7.30

பிரஸங்கம் 164. (4-வது பிரிவு).

18- 9-43	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00
19- 9-43	ஆலங்குடி	... ,,	7.00
,,	ராசியமங்கலம்	... ,,	7.30
20- 9-43	திருமயம்	... ,,	7.00
,,	மேலூர்	... ,,	7.30
21- 9-43	பள்ளிவாசல்	... ,,	7.00
,,	பில்லமங்கலம்	... ,,	7.30
22 -9-43	C. S. M. பள்ளிக்கூடம்	... காலை	10.00
,,	ராணி பெண் பாடசாலை	... ,,	10.45
22- 9-43	காலேஜ் A இங்கிலீஷ்	... காலை	11.00
,,	காலேஜ் B தமிழ்	... ,,	11.00
,,	கொப்பனாபட்டி பள்ளிக்கூடம்.	மாலை	7.00
,,	பொ. புதுப்பட்டி	... ,,	7.30
23- 9-43	வெள்ளனூர்	... ,,	7.00
,,	செம்பாட்டூர்	... ,,	7.30
24- 9-43	புலியூர்	... ,,	7.00
,,	கண்ணங்குடி	... ,,	7.30

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

11— 9—43	பொன்னமராவதி.
12— 9—43	கொடும்பாளூர்.
13— 9—43	விராலிமலை.
14— 9—43	வடகாடு.
15— 9—43	கிழாநிலை—புதுப்பட்டி.
16— 9—43	ஆலங்குடி.
17— 9—43	புதுக்கோட்டை.
18— 9—43	திருமெய்யம்.
19— 9—43	மருதன்கோன்விடுதி.
20— 9—43	கொன்னையூர்.
21— 9—43	ராமச்சந்திரபுரம்.
22— 9—43	கரம்பக்குடி.
23— 9—43	கிழாநிலைக்கோட்டை.
24— 9—43	புதுக்கோட்டை.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,800—16-9-43

புதுக்கோட்டை ஸமஸ்தான
தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] • 1943-ம்௵ ஸெப்டம்பர்மீ 18உ [ந. 164

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

பிரஸங்கம் CLXIV.

ஞாபகார்த்தமாக.

பிரிடனுக்காக நடைபெற்ற யுத்தம்—ஸெப்டம்பர் 15.

அநேகரைக் காப்பாற்றிய கையளவு ஜனங்களுக்கு நன்றி செலுத்துங்கள்.

(விமானப்படை கம்மோடார் P. H. மாக்வொர்த்தின் பிரசங்கம்).

1940-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 15-ம் தேதியன்று அதாவது மூன்று வருஷங்களுக்குமுன் ஜெர்மன் விமானப்படை பிரிடிஷ் விமானப்படையின் தற்காப்பு பலத்தை அழித்து லண்டனுக்கு அபரிமிதமான நஷ்டத்தை உண்டுபண்ண முயன்றது. அன்றைய தின நடவடிக்கைகளில் பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த 20 பகுதிகள் 250 ஜெர்மன் விமானங்களை காலையில் எதிர்த்தன. பிற்பகலில் 21 பிரிடிஷ்படை பகுதிகள் 250 ஜெர்மன் விமானங்களை எதிர்த்தன. அன்றையதின நிகழ்ச்சிகளின் முடிவில் 185 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன என்று ஊர்ஜிதமாகிவிட்டது.

அதே அளவில் மற்ற மூன்று மாதங்களில் அநேகம் தடவைகளில் ஜெர்மனிக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. எதிரிகளின் ஏராளமான விமானங்களின் ஜ்வாலையும், எதிரிக்கு ஏற்பட்ட மகத்தான தோல்வியையும் உத்தேசிக்கும் பொழுது இன்றைய வெற்றியானது விசேஷமாக பாராட்டத்தகுந்தது. ஆகிலும், பிரிடனுக்காக நடைபெற்ற யுத்தமானது மானிட சரித்திரத்திலேயே மிகவும் முக்கியமான யுத்தமென்று நாம் அறிவோம். விமானச் சண்டையின் முடிவைவிட அந்த யுத்தத்தில் எதிர்காலத்துக்குச் சாதகமளிக்கக்கூடிய அநேக விளைவுகளும் ஏற்பட்டன.

பிரிடனுக்காக நடைபெற்ற யுத்தத்தில் ஏற்பட்ட வெற்றியைப்பற்றி மழுப்பிச்சொல்ல முடியாது. அல்லது குறைத்துச்சொல்ல முடியாது. அல்லது சொல்லாமல் புரக்கணித்துவிட முடியாது. ஒரு சிலர் இந்த உலகத்தையே காப்பாற்றிவிட்டார்கள். 1940-ம் வருஷத்தில் தோன்றுத வெற்றிச் சின்னங்கள் இன்று சமீபத்தில் புலப்படுகின்றன. அப்பொழுது இருந்ததுபோல இன்றைக்கும், நாம் நிலைத்து வாழ்வதற்கும், எதிரியை முடிவாக முறியடித்து அழித்து விடுவதற்கும் நாம் செய்துவரும் யுத்தத்தில் பிரிடிஷ் விமானப்படைதான் முக்கியமான சாதனம். பிரிடனுக்காக நடைபெற்ற யுத்தத்தில் நமக்கு ஏற்பட்ட தொந்தரவுகளுக்கும், நஷ்டங்களுக்கும் பதிலாக இன்று பிரிடிஷ் வெடி விமானப்படைகள் திருப்திகரமாக எதிரியின் நகரங்களை அழித்து வருகின்றன. இந்த யுத்தம் இடைவிடாது நடைபெற்று வரும்.

வார யுத்தச் செய்திகள்.

முக்கியமான சம்பவங்கள்.

9—9—43 (வியாழக்கிழமை).	நேசதேசப் படைகள் இதாலியில் அநேக முனைகளிலிறங்கின.
	பாரசீகம் ஜெர்மனிபேரில் போர் தொடுத்தது.
10—9—43 (வெள்ளிக்கிழமை).	ருஷ்யர்கள் பாகீமாக்கையும், பார்வேன்கோவாவையும், மரியபோலையும் பிடித்துவிட்டார்கள்.
	நேசநாடுகள் இதாலியின் குதிபாகத்திலுள்ள டாரன்டோவைப் பிடித்துவிட்டார்கள்.
	அமெரிக்க 5-ம் படை ஸாலர்னோ பகுதியில் இறங்கிவிட்டது.
	ஜெர்மன் துருப்புகள் ரோம் நகரத்தை ஆக்கிரமித்து போப்பாண்டவர் இருக்கும் நகரத்தின் ரக்ஷணையை ஒப்புக்கொண்டுவிட்டனர்.
	இதாலியக் கடற்படை மால்டாவுக்குத் தப்பி ஓடிவிட்டது.
11—9—43 (சனிக்கிழமை).	நேசநாடுகள் நேபிள்ஸுக்குத் தெற்கேயுள்ள ஸாலர்னோ துறைமுகத்தைப் பிடித்துக் கொண்டனர்.
	இன்னும் அநேக இதாலியக் கப்பல்கள் மால்டாவுக்கு வந்துவிட்டன.
12—9—43 (ஞாயிற்றுக்கிழமை).	இதாலியுடன் செய்துகொண்ட சமாதான ஒப்பந்த நிபந்தனைகள் பிரசுரிக்கப்பட்டன.
	பிரிடிஷ் எட்டாம்படை இதாலியில் காடான்ஸாரோவையும், ஸான்இபூமியாவையும் லாமேஸியாவையும் பிடித்துக்கொண்டன.
	நேசதேசத்தார்கள் நியூ கினியாவிலுள்ள ஸலாமூவா விமான தளத்தை ஆக்கிரமித்தனர்.
13—9—43 (திங்கட்கிழமை).	நேசநாடுகள் இதாலியிலுள்ள குரோடோனையும் ஆல்டாமுரையும் பிடித்துவிட்டார்கள்.
	இதாலியின் பாக்கியுள்ள கடற்படை மால்டாவுக்கும் இதர துறைமுகங்களுக்கும் சென்றது. ஜெனராலிஸ்மோ சியாங்-கே-ஷேக் சைனாவின் தலைவராக நியமிக்கப் பட்டிருக்கிறார்.
14—9—43 (செவ்வாய்க்கிழமை).	நேசநாடுகள் நியூ கினியாவிலுள்ள ஸலாமுவாவை ஆக்கிரமித்துவிட்டார்கள்.
	பிரிடிஷ் 8-ம் படை கோஸன்ஸாவையும் பாரியையும் பிடித்துக்கொண்டது.
15—9—43 (புதன்கிழமை).	ருஷ்யர்கள் நேழினை ஆக்கிரமித்தார்கள்.
	நேசதேசத்தார்கள் இதாலியிலுள்ள பேல்வேடிரைப் பிடித்துவிட்டார்கள்.

இதாலி.—சமாதான ஒப்பந்தம் ஸெப்டம்பர் 3-ம் தேதியன்று கையொப்பமிடப்பட்டது. 8-ம் தேதியன்று வெளியிடப்பட்டது. இதாலிய நிர்வாகம் அன்றையதினம் நிபந்தனையற்ற சரணாகதி செய்தது. மற்றெவரும் எதிர்த்தாலும் அதை சமாளித்து நிற்பதாகவும் வாக்குறுதி செய்தது.

ஸெப்டம்பர் 9ம் தேதியன்று ஹிட்லர் யுத்த சபையைக்கூட்டி போ நதிப் பிரதேசத்திற்கு ஏராளமான படைகளை அனுப்பி இதாலியில் யுத்தம் நடத்துவதென்று முடிவு செய்தான். முஸோலினியின் தலைமையின்கீழ் வடக்கு இதாலியிலுள்ள கிரெமொனி என்னுமிடத்தில் குயிஸ்லிங்க் பாஸிஸடு நிர்வாகத்தை அவன் அமைத்திருக்கிருன். ரோம், ஜெனேவா, மிலான், டூரின், பொலோனு, வெரோனு, டிரஸ்டி முதலிய இடங்களை அவன் பிடித்து விட்டான்.

ஜெர்மன் துருப்புகளின் உதவியுடன் குரோட் துருப்புகள் டால்மோஷியாவை ஆக்கிரமித்துவிட்டன. ஆல்பேனியாவும், மாண்டினீக்ரோவும் சுயேச்சைபெற்றுவிட்டதாக வெளிப்படுத்தி விட்டன. ஸாமாஸிலுள்ள இதாலியர்கள் கிரேக்கர்களின் ஆட்சிக்குட்பட்டுவிட்டார்கள்.

சரண்புகவேண்டுமென்றும் ஆயுதங்களைக்கொடுத்துவிட வேண்டுமென்றும் வேண்டப்பட்ட இதாலிய ஸோல்ஜர்கள் எல்லா இடங்களிலும் ஜெர்மானியர்களை எதிர்த்து நிற்கிருர்கள். இதாலியில் உள்நாட்டுக்கலகம் ஏற்படும்போல் தோன்றுகிறது.

இதாலியக் கடற்படை தப்பி ஓடிவந்து நேசதேசப்படையுடன் சேர்ந்துகொண்டது. அநேகம் கப்பல்கள் மால்டாவுக்கு வந்துசேர்ந்தன.

நேசதேசப்படைகள் ரெக்கியா, டாரண்டோ, நேபிள்ஸ் பிராந்தியங்களில் இறங்கி தீபகற்பத்தின் குறுக்கே முன்னேறி ஒன்று சேருவதற்காகப் போர்புரிகின்றன.

ரெக்கியாவிலிறங்கிய 8-ம் படை பிஸோவையும், காடான்ஸாரோவையும், ஸான் ஈபெமியாவையும், கோகோனேயும், கோஸன்ஸாவையும் கைப்பற்றிற்று. நேபிள்ஸுக்கு 50 மைலுக்குள் 8-ம் படை வந்துவிட்டது.

டாரண்டோவிலிறங்கிய பிரிடிஷ் துருப்புகள் பிரிண்டிஸியையும், பாரியையும் பிடித்துக் கொண்டு மேற்குமுகமாக முன்னேறுகின்றன.

நேபிள்ஸுக்கு சமீபத்திலிறங்கிய அமெரிக்க 5-ம் படை பீல்ட் மார்ஷல் கெஸ்ஸல்ரிங்கின் படைகளுடன் கோரமான யுத்தம் செய்துவருகிறது. ஸாலர்மோவுக்குத் தென்மேற்கிலுள்ள ஸெலி நதிப் பகுதியில் கோரமான யுத்தம் நடைபெற்றது. இப்பொழுது பிரிடிஷ் 8-ம் படை அமெரிக்கப் படையுடன் சேர்ந்துவிட்டது. இதற்கு முன்னதாக 5-ம் படை ஸாலர்னேவிலுள்ள கேந்திர ஸ்தானத்தைப் பிடித்துவிட்டது.

ருஷ்யா.—செம்படைக்கு வெற்றிக்குமேல் வெற்றிகிடைத்துவருகிறது. ஸ்மொலன்ஸ்க்கிலிருந்து ஒடெஸ்ஸாவரையில் 600 மைல் நீளமுள்ள போர்முனையில் 50, அல்லது 100 மைல்கள் வரையில் ஜெர்மானியர்கள் துரத்தியடிக்கப்பட்டார்கள். ஓரல், பெயலோகிராட், கார்கோவ் வெற்றிகளுக்குப்பின் 55 பெரிய நகரங்களையும், எஃகு நிலக்கரி உற்பத்தி நிலயமான ஸ்டாலினேவையும் செம்படை பிடித்துவிட்டது. இன்னும் பின்கண்ட அநேக ஊர்களும் பிடிபட்டன. ஸெப்டம்பர் 6-ம் தேதியன்று கோனுடாப், ஸெப்டம்பர் 10-ம்தேதி கியாவுக்குப் போகும் வழியிலுள்ள முக்கியமான ரயில்வே ஜங்ஷனுன பாக்மாக்கு, அதன்பின் பார்வென்கோவாவும், மெரியபோலும், வால்னேவாகாவும் பெட்ரோவ்ஸ்காயாவும். ஜெர்மன் தளமாகிய பிரியான்ஸ்க்கை ஜெர்மானியர்கள் ஸெப்டம்பர் 13-ம் தேதியன்று காலிசெய்துவிட்டார்கள். ருஷ்யர்கள் நோவோராஸிஸ்க்கைப் பிடித்துவிட்டார்கள்.

தென்மேற்கு பஸிபிக்.—ஸலாமூவா விமான தளமும், ஸலாமூவா நகரமும் அடுத்தடுத்து ஸெப்டம்பர் 12-ம் தேதியிலும், 13-ம் தேதியிலும் விழுந்தன. லே ஸெப்டம்பர் 12-ம் தேதி பிடிக்கப்பட்டது. ஸெப்டம்பர் 13-ம் தேதியன்று ஜப்பானுக்கு வடக்கேயுள்ள குரைல் தீவுகளைச் சேர்ந்த வடக்குக்குக் கோடியிலுள்ள தீவான பாராமூஷிரை நேசதேச விமானங்கள் தாக்கின. அங்கிருந்த எதிரியின் கப்பல்களின் பேரிலும், தரையிலிருந்த சேமிப்புகளின் பேரிலும் குண்டுகள் நேராக விழுந்தன.

சைனு.—ஜப்பானியர்கள் போர்ச்சுகீஸ் மாக்கோவுக்கருகிலுள்ள பிரதேசங்களுக்கு துருப்புகளை அனுப்பி மாகோவைப் பிடித்துக்கொள்ளுவதாக பயமுறுத்துகிருர்கள். தான் நடுநிலைமை வகிக்கும் நாடென்று போர்ச்சுகல் ஜப்பானுக்கு ஞாபகப்படுத்தியிருக்கிறது.

பர்மா.—கீழ்க்கண்ட விமான நடவடிக்கை நடைபெற்றது.

ஸெப்டம்பர் 6.—ரெங்கூனிலுள்ள கப்பல்கள்.

ஸெப்டம்பர் 7.—மத்திய பர்மாவிலுள்ள யூவாடங்க் ஜங்ஷன்.

ஸெப்டம்பர் 9.—மாண்டலேக்கும், லாஷியோவுக்கும் மத்தியிலுள்ள கோக்ஷீக் கால்வாய்.

ஸெப்டம்பர் 10.—ஸெடொகியோ வளைகுடாவிலுள்ள எண்ணெய் இறக்குமிடம், அக்யாப், சௌக்கிலுள்ள எண்ணெய்க் கிணறுகள். யெனுங்கியாங்கிலுள்ள நதியில் செல்லும் படகுகள்.

ஸெப்டம்பர் 11.—ஸாகெயிங்கியிலுள்ள இருப்புப்பாதை, ரஸ்தா, தளங்கள், கப்பல் நிலயங்கள்.

ஸெப்டம்பர் 12.—பயின்மாவுக்கும், மின்ஜானுக்கும்போகும் இருப்புப்பாதை மார்க்கங்கள். ஸினேவிலுள்ள ஜப்பானியத் துருப்புகள், காலடான் நதியிலுள்ள ஸப்ளை படகுகள்.

சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

6—9—43. (திங்கட்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—துறைமுகம்—பிரான்ஸிலுள்ள பொலோன் (Boulogne).

சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேமித்துமிடங்கள்—ஸெர்குவெக்ஸ் (Serquex), அப்பிவில்லி (Abbeville), ஆமீன்ஸ் (Amiens), ரோவென் (Roven).

தாக்குதல்கள்—வடக்கு பிரான்ஸ் (Northern-France).

விமான நிலயங்கள்—ஆர்லீயான்ஸ் (Orleans), காஞ்சஸ் (Conches). (20 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன. 37 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இரவு.—ஒரு தகவலும் இல்லை.

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரி விமான நிலயங்கள், போக்குவரத்து ஸாதனங்கள்.—இதாலியிலுள்ள நேபிள்ஸ் (Naples) பிரதேசம்.

போக்குவரத்து ஸாதனங்கள்—இதாலியில் உள்ள ஆல்டாமூரா (Altamura)வின் மத்திய பாகத்தில்.

ரயில்வே தளங்கள்—இதாலியிலுள்ள பட்டிபாக்ளியா (Battipaglia).

ருஷ்யா (Russia).

(115 அச்சு விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியச் சைனியங்கள்.—நியூ கினியாவிலுள்ள ஹீத் (Heath) பிரதேசங்கள், மார்க்ஹாம் (Markham) சமவெளி.

ஜப்பானிய பீரங்கி ஸ்தாபனங்கள்.—ஸலாமூவாவிலும், ஸலாமூவாவைச் சுற்றிலும்.

ரயில்வே தளங்கள்—பிரெஞ்சு இந்தோ—சைனவிலுள்ள லாகோ (Laokay).

கப்பல்கள்.—ரங்கூன் (Rangoon).

பர்மா (Burma).

நீராவி யந்திரங்கள், இஞ்சின் ஷெட்டுகள்.—பின்மானு (Pyinmana).

ஸப்ளைப் படகுகள்—ஐராவதி (Irrawaddy), மாயூ (Mayu) நதிகள்.

ஜப்பானியச் சைனியங்கள்—ராதிடாங் (Rathedaung), பூதிடாங் (Buthedaung).

ஸப்ளைக் குவியல்கள்—கான்ஸான் (Kwanzon), ராணுவ நிலயங்கள்—மேமியோ (Maymyo).

7—9—43. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல், இரவு.—ஒருதகவலும் இல்லை.

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமான நிலயம்.—நேபிள்ஸ் (Naples).

ரயில்வே தளங்கள்—இதாலியிலுள்ள பெனிவெண்டோ (Benevento), மெடாபோண்டோ (Metaponto), பொடென்ஸோ (Potenzo).

ருஷ்யா (Russia).

(118 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன.)

விமானச் சண்டைகளும், தரையிலுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியச் சைனியங்கள்—ஜாகோபென் (Jacoben) பிரதேசம், மலஹாங் (Malahang) பிரதேசம்.

டிமோரிலுள்ள டிலோ (Dilo) அடாம்போயென (Atamboena), டானிம்பரிலுள்ள ஸெராரு (Seraru), நியூ ஆர்லியான்ஸிலுள்ள செயிண்ட் ஜார்ஜ் முனை (Cape st. George), ஸாலமன்ஸிலுள்ள கோலம்பங்கரா (Kolombangara), போகேய்ன்வில்லி (Bougainville).

பர்மா (Burma).

ரயில்வே ஜங்ஷன்—யுவாடாங் (Ywataung).

ராணுவ நிலயங்கள்—ஷுவேபோ (Shwebo).

ஸப்ளைப் படகுகள்—ஐராவதி (Irrawaddy), கலடான் (Kaladan) நதிகள்.

8—9—43. (புதன்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

மாலை.—இலக்குகள்—பிரான்ஸிலுள்ள பொலோன் (Boulogne).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).
ஜெர்மன் தலைமைக் காரியாலயம்.—பிராஸ்காடி (Frascati).
ரஸ்தாக்கள் பாலங்கள்.—டிரெபிஸாக்கி (Trebisacce), லாரியா (Lauria), ஸாப்ரி (Sapri).
விமான நிலயங்கள்.—நேபிள்ஸ் (Naples) பிரதேசம்.

ருஷ்யா (Russia).
(30 ஜெர்மன் விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).
ஜப்பானியச் சைனியங்கள்—நியூ கினியிலுள்ள லே (Lae), ஸாலமூவா (Salamaua).

பர்மா (Burma).
ஜப்பானியச் சைனியங்கள்.—மாங்டா (Maungdaw).
படகுகள்.—சிண்ட்வின் (Chindwin).

9—9—43. (வியாழக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).
பகல்.—விமான நிலயத் தொழிற்சாலைகள்—பாரிஸிற்கு (Paris) அருகில்.
இலக்குகள்.—பொலோன் (Boulogne), செயிண்ட் ஓமர் (St. Omer) பிரதேசங்கள்.
விமான நிலயங்கள்.—பிரான்ஸிலுள்ள போவாய்ஸ் (Beauvais), லில்லி (Lille), பீ ஆமான்ட் ஸ்வராய்ஸ் (Be Aumont-Swroise), லில்லி (Lille), நாட் (Nord), அப்பிவில்லி டிரகாட் (Abbeville, Drucat).
ரயில்வேக்கள்.—பிரான்ஸிலுள்ள மாஞ்சிபிரிடன் (Monchybreton), பிரேயஸ்ஸட் (Brayssud), மெர்வில்லி (Merville), பெல்ஜியத்திலுள்ள காஸிடி (Cosyde).
(16 எதிரிவேட்டை விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன. 2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).
(11 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன. 7 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
விமானமிறங்குமிடங்கள்.—ஸான் நிகோலா (San Nicola), டார்டோடெல்லா (Tortotella).
பாலங்கள் ரஸ்தாக்கள்.—காபா (Capua), கான்ஸெல்லோ (Cencello).
பாலங்கள் போக்குவரத்து ஸாதனங்கள்.—பொடென்ஸா (Potenza).
விமான நிலயங்கள்.—ஸ்கான்ஸனோ (Scanzano).
துறைகள்.—நேபிள்ஸ் (Naples) பிரதேசம்.
தாக்குதல்கள்.—ஸார்டீனியா (Sardinia).
ரயில்வே தளங்கள்.—குரோஸெட்டோ (Grosetto).

ருஷ்யா (Russia).
(24 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

பர்மா (Burma).
ஜப்பானியச் சைனியங்கள்—பூதிடாங் பிரதேசம் (Buthedaung).
படகுகள்.—சிண்ட்வின் (Chindwin).

10—9—43. (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).
பகல், இரவு.—ஒரு தகவலும் இல்லை.

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).
ரயில்வேக்கள், பாலங்கள், விமானநிலயங்கள்.—நேபிள்ஸ் (Naples) பிரதேசத்தைச் சுற்றிலும்.
மோட்டார் வண்டிகள்.—லாகோனிக்ரோ (Lagonegro)விற்கு வடக்கிலுள்ள ரஸ்தா.
ரஸ்தா சந்திப்புகள்.—பார்மியா (Formia).
விமான மிறங்குமிடங்கள்.—போகியா (Foggia).
(27 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

ருஷ்யா (Russia).
(49 அச்சு விமானங்கள் சுட்டு தள்ளப்பட்டன).
விமானச் சண்டைகளும், தரையிலுள்ள விமானங்களும்.—ருஷ்யப் போர்முனை பூராவிலும்.

தூரக்கிழக்கு (Far East).
ஜப்பானியச் சைனியங்கள்.—லே (Lae) ஸலாமூவா (Salamaua) நியூ கினியிலுள்ள மீராக் (Merauke).
கடற்படை தளம்.—டச்சுக் கிழக்கு இந்தியத் தீவுகளிலுள்ள அம்பாய்னா (Amboina), நியூ பிரிடனிலுள்ள காரோவ் (Garove), தீவு.
எண்ணெய் ஏற்றி இறக்குமதி செய்யும் துறை.—அக்யாபிற்கு (Akyab) அருகில்.
படகுகள்.—ராம்ரீத் தீவிற்கருகில்.
எண்ணெய்க் கிணறு.—சாக் (Chauk).
சிறிய படகுகள்.—யெனங்யாங் (Yenangyaung).
கோக்திக் (Gokteik) பாலம்.

11—9—43. (சனிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).
பகல்.—விமான நிலயம்—போமாண்ட் லி ரோஜர் (Beaumont-Le-Roger).
இலக்குகள்.—வடக்கு பிரான்ஸ் (Northern France).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).
ரயில்வே தளம்.—பெனிவெண்டோ (Benevento).

ரஸ்தா சந்திப்புகள்.—நேபிள்ஸ் (Naples) பிரதேசம்.
பிரிவுகள்.—ஸாலெர்னோ (Salerno) பிரதேசம்.
ரஸ்தாக்கள், பாலங்கள்.—ஸாலெர்னோ (Salerno) பிரதேசங்களுக்கருகில்.
விமான நிலயம்.–பிராஸினோன் (Frosinone). (16 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன. 7 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

ருஷ்யா (Russia).

(28 அச்சு விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியச் சைனியங்கள்.–லே (Lae), ஸலாமூவா (Salamaua).

பர்மா (Burma).

ரயில் ரோட் தளங்கள்.–ஸாகெய்ங் (Sagaing), ஙாபாயின் (Ngapayin).
படகு போக்குவரத்து முடிவு.—ஐராவதி முதல் மாண்டலே (Mandalay) வரையிலும்.
பின்மானு (Pyinmana).

12—9—43. (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல், இரவு.—ஒரு தகவலும் இல்லை.

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரி ரஸ்தாப் போக்குவரத்துகள்.—நேபிள்ஸிற்கு (Naples) அருகில்.
விமான நிலயங்கள்.—ரோட்ஸிலுள்ள மாரிட்ஸா (Maritza), காலடோ (Calato).
எதிரிக் கப்பல்கள்.—கிரீட் (Crete).
ரஸ்தாக்கள், பாலங்கள்.—ஸாலர்னோவில் ஜெர்மன் சேனைகளுக்குப் பின்.

ருஷ்யா (Russia).

(18 அச்சு விமானங்கள் நாசமாக்கப்பட்டன).
விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் பூராவிலும்.
விமான நிலயம்.—நியூ கினியிலுள்ள ஸலாமூவா (Salamaua).
ஸ்தாபனங்கள்.—லாங் (Long) தீவு, ஹான்ஸ (Hansa) குடா.
ஜப்பானியச் சைனியங்கள்.–நியூ கினியிலுள்ள லே (Lae).
காஹிலி விமான நிலயம்.—ஸாலமன்ஸிலுள்ள பொகெய்ன்வில்லி (Bougainville), கொலம்பங்காராவிலுள்ள விலா (Vila).

பர்மா (Burma).

ரயில்வேக்கள்.—புரோம் (Prome).
எண்ணெய்க் கிணறு.—பாடிகான் (Padigon).
இலக்குகள்.—ராம்ரீ (Ramree) தீவு.
படகுகள்.-மாயூ (Mayu), கலடான் (Kaladan) நதிகள்.
ரயில் போக்குவரத்துக்கள்.—பின்மானு (Pinmana), மிங்யான் (Myingyan).
அக்யாப் (Akyab).
ஜப்பானியச் சைனியங்கள்.—மாங்டா (Maungdaw).

விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

7—9—43. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—ஸ்டாலினோ (Stalino).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

8—9—43. (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

பல இடங்கள்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia), தென் கிழக்கு இங்கிலாந்து. (3 ஜெர்மன் விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.–ஸ்டாலினோ (Stalino) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

விமானச் சண்டைகள்.—ஹுவான் குடா (Huon gulf). (7 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. 2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

9—9—43. (வியாழக்கிழமை.)

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

10—9—43. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—மாரியாபோல் (Mariupol) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

11—9—43. (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—கீவ் (Kiev) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

12—9—43. (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—கீவ் (Kiev).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

13—9—43. (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

ஒரு தகவலும் இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய விமான நடவடிக்கை இல்லை.

யுத்தக் குறிப்புகள்.

சாபக்கேடு. எண்பத்திமூன்று வருஷங்களுக்குமுன் பிரிடன் இதாலிக்கும் அதன் தலைவரான காரிபால்டிக்கும் உதவி செய்து ஆஸ்திரியாவின் ஆதிக்கத்தை ஒழித்தபொழுது, இதாலிய மக்களின் ஸ்வபாவத்தை அறிந்த காரிபால்டி, பிரிடனுக்கு இதாலியின் நன்றியறிவை மறந்து பிரிடனை காட்டிக் கொடுக்கக்கூடிய இதாலியர்களுக்கு சாபம் கொடுத்தான். அந்த சாபம் இப்பொழுது பலிதமாகிவிட்டது. இதாலியில் உள்நாட்டு கலகம் உண்டாகிவிட்டது. ஆஸ்திரியர்களைவிட மிகவும் கொடுமையான மற்றொருவரின் ஆதிக்கம் ஏற்படும் போலிருக்கிறது. இந்த சங்கடத்திலிருந்து பிரிடன் தான் இதாலியைக் காப்பாற்றப்போகிறது. முன்போல தரை மூலமாகவும், கடல் மூலமாகவும் படையெடுத்து இதாலியை பிரிடன் விடுவிக்கப்போகிறது. சரித்திரம் திருப்பித் திருப்பி ஒரேமாதிரியாக நடைபெற்று வருகிறதென்பது ஆச்சரியம்.

மேலும் மற்றொரு சாபமும் இப்பொழுது பலித்துவிட்டது போலிருக்கிறது. ஒரு விதமான சச்சரவுமில்லாத பிரான்ஸை 1940-ம் வருஷம் ஜூன் மாதம் 11-ம் தேதியன்று இதாலி முதுகில் கபடமாகத் தாக்கியபொழுது இந்தச் சாபம் ஏற்பட்டது. பருத்த சரீரமுள்ள முஸோலினி ரோமாபுரியிலுள்ள தன்னுடைய அரண்மனையில் நின்றுகொண்டு சர்வதேச கௌரவத்தையும், நீதி முறைகளையும் புறக்கணித்து நேசதேசத்தாருடன் அன்று போர் தொடுப்பதாகப் பிரகடனம் செய்தான்.

வி வி வி வி வி

சரணாகதி. இந்த அக்கிரமங்களுக்கு அழிவு காலம் வந்துவிட்டது. சண்டை போட சக்தியற்றும், தங்களுடைய பயித்தியம் பிடித்த யதேச்சாதிகாரியின் கீர்த்தியை நிலை நாட்டுவதற்காக உயிரைக் கொடுக்க சக்தியற்றும், 1 மிலியன் ஸோல்ஜர்களையும், கடற்படை, விமானப்படையின் பெரும் பாகத்தையும், $2\frac{1}{2}$ மிலியன்கள் டன்கள் எடைமானமுள்ள கப்பல்களையும் இழந்தும், தொழிற்சாலைகள் குண்டுகளுக்கிரையாகியும், தொழிலாளர்கள் அடிமைப்பட்டும், இதாலியைப் போல பத்து மடங்கு விஸ்தாரமுள்ள சாம்ராஜ்யத்தையும் இழந்தும், இதாலியானது நேச தேசத்தாரின் அபாரமான சக்தியைக்கண்டு நிபந்தனையற்ற சரணாகதி செய்வதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? ஆகையால், இதாலி சரணடைந்ததென்பது தேசாபிமானமுள்ளவர்கள் செய்த சிறந்த காரியம், நியாய மார்க்கத்தை ஒப்புக்கொண்ட நடவடிக்கை. ஆகிலும் பழிவாங்கும் தேவதைகள் இன்னும் திருப்தியடையவில்லை.

வி வி வி வி வி

நாஸி முயற்சிகள். சாபத்தின் பலன்கள் பூராவும் பலிதமாகவில்லை. இதாலியர்கள் சந்தோஷமாக யுத்தத்தை நிறுத்தி விட்டார்கள். ஆகிலும், இதாலி யுத்தத்தில் மாட்டிக்கொண்டிருக்கிறது. நாஸிகளின் பிடிப்புக்குட்பட்டு இதாலி யுத்த அரங்கமாக மாறிவிட்டது. எமானுவல் மன்னரும், படாக்ளியோவும் சென்ற இடம் தெரியவில்லை. இதுவரையில் முஸோலினி ஒழிந்தானென்று நாம் நினைத்தோம். ஸார்டினியாவுக்கருகாமையிலுள்ள ஒரு தீவில் ஆறு வாரங்களாக சிறையிலடைபட்டிருந்தவன் மறுபடியும் புத்துயிர் பெற்றுவிட்டான். அவன் உதவியால் ஒரு குயிஸ்லிங் நிர்வாகம் ஜீவனற்ற பாஸிஸ்ட் தேசியக் கக்ஷியின் ஆதரவில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு பாரினுக்கி என்பவர் தலைமை வகிப்பார். பாரினுக்கி என்பவர் மாஜி ஸ்டேஷன் மாஸ்ட்டர், கார்லோ ஸ்கோர்ஸாவுடன் சேர்ந்த கொள்ளைக்கூட்டக்காரர். லக்ஷக்கணக்கான பொருளை யுத்த காலத்தில் சம்பாதித்திருக்கிறவர். சமீப காலத்தில் அவர் பெர்லினுக்கு ஓடியபின் இதாலிய போலீஸ்காரர்கள் கெயிடாவிலுள்ள அவனுடைய வீட்டில் திராக்ஷா ரசமுள்ள 2,000 குப்பிகளைக் கண்டு பிடித்தார்களாம். பாஸிஸ்ட் நிர்வாகத்தின் சார்பில்

அதிகமாகச் சேமித்து வைப்பவர்களைத் தூக்கிலிடவேண்டுமென்று கடுமையாகவும், மிகவும் பலமாகவும் பிரசாரம் நடத்தியவன் பாரினுக்கி என்பதை மதித்தால் இந்த அதிசயம் ஆச்சரியகரமாகயிருக்கிறது.

வி வி வி வி வி

ஆக்கிரமணம். ஏற்கனவே ஏராளமான ஜெர்மானியர்கள் இதாலிக்குள் குடியேறிவிட்டார்கள். வட இதாலியிலுள்ள அநேக நகரங்களை அவர்கள் கைப்பற்றி விட்டார்கள். முக்கியமாக மிலான், பாவியா, வெரோனா, கிரெமோனா, டிரிஸ்டி முதலிய இடங்கள் பிடிபட்டுவிட்டன. ஜெர்மானியர்கள் ஏட்ரியாடிக் கடற்கரையிலும், வடக்கு இதாலியில் மத்தியதரைக்கடலை நோக்கியுள்ள துறைமுகங்களிலும் உள்ள கேந்திர ஸ்தானங்களைப் பிடித்துக்கொண்டு போ நதியை ஒட்டியுள்ள ஒரு பிரதேசத்தை தற்காப்பு செய்ய முயன்றுவருகிறார்கள். வடக்கு இதாலியில் பீல்ட் மார்ஷல் ரோமல் சேனாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இதாலியப் படைகளைச் சரணடையும்படி அவர் செய்துவிட்டு லிகூரியாவையும் அதைச்சேர்ந்த ஜெனோவா, ஸ்பீஸியா, அடேஜர் பள்ளத்தாக்கு முதலியவற்றையும் அவர் கைப்பற்றி விட்டார். ஜெர்மன் அறிக்கை பிரகாரம் பிரென்னர் கணவாயிலும், டால்மேஷியாவிலுள்ள ஸ்பாலடோவிலும், டிரானாவிலும், ஆதென்ஸிலும், ஆல்பேனியாவிலும், ரோட்ஸ் தீவிலும், உள்ள இதாலியப் படைகள் சரணடைந்துவிட்டனவாம்.

வி வி வி வி வி

ரோம். தெற்கு இதாலியில் ரோம் நகரம் பீல்டு மார்ஷல் கெஸ்ஸல்ரிங்கிடம் சரண் புகுந்தது. நகரத்தை ஜெர்மானியர்கள் ஆக்கிரமித்துக்கொள்ளாவிட்டாலும் நகரத்திலுள்ள துருப்புகளை ஜெர்மானியர்கள் நிராயுதபாணிகளாகச் செய்துவிட்டார்கள். போப்பாண்டவர் இருக்கும் பிரதேசத்துக்கு ரக்ஷணை கொடுப்பதாகச் சொல்லிவிட்டார்கள்.

வி வி வி வி வி

இதாலிய எதிர்ப்பு. இதாலிய எதிர்ப்பு துர்ப்பலமாகயிருந்தபோதிலும் நாடெங்கும் பரவியிருக்கிறது ஜெர்மானியர்கள் ஒப்புக்கொள்ளுகிறபடி பெல்கிரேட்டைப்போல் ரீன் அழிவு பெற்றபின்தான் அது விழுந்ததாம். வடக்கு இதாலியில் டார்டோனாவிலும், வாகேராவிலும், பாவியாவிலும், ஸெர்டோஸிலும் இதாலியத் துருப்புகளும், ஜெர்மன் துருப்புகளும் தெருக்களில் சண்டை போடுகிறார்களாம். ஏட்ரியாடிக் கடலில் கோடாவ் என்னும் யூகோஸ்லாவியா துறைமுகத்தில் கடும் போர் நடைபெற்று வருகிறது. ஸெர்பியாவில் ஏதாவது கலகம் நேரிட்டால் அங்குள்ள 40,000 பிணையாளிகளின் உயிரை வாங்கிவிடுவதாக எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. இதேசமயத்தில் ஆல்பேனியாவும் மாண்டிநிக்ரோவும் சுயேச்சையை அடைந்துவிட்டதாகப் பறை சாற்றிவிட்டன. சாமாஸ் தீவின் நிர்வாகம் கிரேக்கர்களுடன் சேர்ந்துவிட்டது. ஸைப்ரஸை விட்டு இதாலிய விமானப் படைகள் நேசநாட்டாரிடம் சரண் புகுந்துவிட்டன.

வி வி வி வி வி

அதிர்ச்சிகள். பிரான்ஸ் குதூகலமாகயிருக்கிறது. பிரான்ஸிலுள்ள வடக்கு சாவாய் மாகாணத்திலுள்ள பொதுஜனங்கள் தெருக்கள் வழியாக ஊர்வலம் சென்றும் மாதாக்கோவில்களில் மணிகளை ஒலித்தும் இதாலியின் வீழ்ச்சியின் சந்தோஷச் செய்தியைக் கொண்டாடினார்கள். ஜெர்மன் தேசிய சங்கமானது ஹிட்லர் ராஜீனாமா செய்யவேண்டுமென்று கோரிவிட்டது. பெர்லின் தெருக்களில் கலவரம் பலமாகயிருப்பதால் S. S. துருப்புகள் ரோந்து செய்து கொண்டிருக்கின்றன. மூனிக்கிலுள்ள நாஸித் தலைமை காரியாலயத்தின் முன் சில்லரைச் சச்சரவுகள் ஏற்பட்டன. ஜெர்மனியில் வேலை செய்து கொண்டிருக்கும் இதாலியத் தொழிலாளர்களிடையே உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி

நேசநாடுகளின் அறிக்கை. மத்தியக் கிழக்கில் சேனாதிபதியாகயிருக்கும் ஜெனரல் ஸர்ஹென்ரி மெயிட்லாந்து வில்ஸன், பால்கன் நாடுகளிலும், யூகோஸ்லாவியாவிலும், ஈஜியன் கடலிலும் உள்ள துருப்புகள் சண்டையை நிறுத்திவிட்டு ஜெர்மானியர்களைத் தாக்கவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார். இதாலிய மாலுமிகள் தங்களுடைய கப்பல்களை நேசதேசத் துறைமுகங்களுக்கோ அல்லது நடுநிலைமை வகிக்கும் துறைமுகங்களுக்கோ நடத்திச் செல்லவேண்டுமென்று ஸர் ஆண்ட்ரூ கன்னிங்காம் அறிக்கை செய்திருக்கிறார்.

இதே சமயத்தில் இதாலியர்களுக்கு சர்ச்சிலும், ரூஸ்வெல்டும் கூட்டறிக்கை விடுத்திருக்கிறார்கள்.

"பாஸிஸ்ட் அடிமைத்தனத்திலிருந்து உங்கள் நாட்டை விடுவித்து விட்டீர்கள். உங்கள் நாட்டிலுள்ள ஜெர்மன் துருப்புகளை அப்புறப்படுத்தும் முக்கியமான வேலை பாக்கியிருக்கிறது.

"ஹிட்லரும், அவனுடைய கூட்டாளியுமான முஸோலினியும் இதாலிக்கு நாசத்தை உண்டுபண்ணிவிட்டார்கள். எகிப்திய பாலைவனங்களிலும் ருஷ்ய பனிக்கட்டிகளிலும் துருப்புகளைச் சண்டைக்கு அனுப்பி அவைகளுக்கு அழிவு உண்டுபண்ணிவிட்டான். போர் முனைகளில் ஜெர்மானியர்கள் இதாலியத் துருப்புகளைக் கைவிட்டுவிட்டு அவர்களைப் பலி கொடுத்துக்கொண்டே பின்வாங்கி பத்திரமாக வந்து விட்டார்கள். இதர நாடுகளில விளைவித்து வரும் கொடுமைகளை இதாலிய மக்களுக்கும் விளைவிக்கவேண்டுமென்று ஹிட்லர் எண்ணம் கொண்டிருக்கிறான்.

"ஒவ்வொரு இதாலியனும், ஜெர்மானியர்களைத் தாக்க இதுதான் தகுந்த தருணம். உங்களை ரக்ஷிக்க மேற்கு உலகத்திலுள்ள விடுதலைப் படைகள் வந்துகொண்டிருக்கின்றன. இதாலியில் ஜெர்மானியரின் அக்கிரமம் நீடித்திருக்காது. ஒவ்வொருவரும் பலமாகவும் வெற்றிகரமாகவும் தாக்குங்கள். ஸ்வதந்திரத்துக்கும், நியாயத்திற்கும், சமாதானத்திற்கும் பாடுபடும் இந்த மகத்தான உலக ஏற்பாட்டில் ஈடுபட்டிருக்கும் அமெரிக்கர்களுடனும் பிரிடிஷார்களுடனும் கலந்து நின்று போர் புரியுங்கள்."

வி வி வி வி வி

நேசதேச நடவடிக்கை. பேச்சோடு மட்டும் நின்றுவிடாமல் நேசநாடுகள் நடவடிக்கையிலும் ஜெர்மானியர்களின் பலமான எதிர்ப்புள்ள நேபிள்ஸ் பாலர்மோ பகுதியில் கடும் போர் நடத்திவருகிறார்கள். தெற்குப் பகுதியில் பிரிடிஷ் படைகள் டாரண்டோ, பிரிண்டிஸி, பாரியைப், பிடித்தார்கள். நேபிள்ஸ்ஸிலிருக்கும் நேசதேசப் படைகளுடன் சேர்ந்துகொண்டு 8-வது படையினர் துறத்தியடிக்கும் ஜெர்மானியப் படைகள் பின் வாங்கவொட்டாமல் வழி மறித்து விடுவதுதான் நேசதேசப் படைகளின் நோக்கம். 8-வது படை ஸாலர்னோவிலுள்ள படைகளுடன் சேர்ந்துவிட்டது.

வி வி வி வி வி

இதாலியர்களின் நல்லெண்ணம். நேசநாடுகளிடம் உள்ள விஸ்வாசத்தைக் காண்பிக்கும் முறையில் இதாலியக் கடற்படை டிரேனியன் கடல் மார்க்கமாக வந்து மால்டாவிலும், மேஜர்காவின் தலைநகரமான பால்மாவிலும், கார்ஸீகாவின் தலைநகரமான மாட்ரனிலும் மேனிஸியாவிலுள்ள போனிலும் நுழைந்து விட்டதென்பது இதாலியர்களின் கௌரவமான நடவடிக்கையாகும்.

இந்த நகரங்களைத்தான் ஜெர்மன் விமானப்படை உபயோகமில்லாமல் குண்டுகளால் தாக்கிற்று. டாரண்டோ வளைகுடாவில் பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் காபந்து புரிந்து வந்தன. மால்டாவிலிருந்து கிடைத்த செய்திகளிலிருந்து ஸெப்டம்பர் 13-ம் தேதியன்று 27 யுத்தக் கப்பல்கள் மால்டாவுக்கு வந்து சேர்ந்தன. ஜெர்மானியர்கள் மீன் வெடி மூலம் மூழ்கடித்த ஒரு யுத்தக் கப்பலைத் தவிர பாக்கி இதாலியக் கடற்படை பூராவும் தப்பி ஓடி விட்டது.

வி வி வி வி வி

இதாலிய கடற்படையின் சரணாகதி. மூன்று வருஷங்களுக்குப் பின் மத்தியதரைக்கடலில் கடற்சண்டை ஓய்ந்துவிட்டது. மத்தியதரைக்கடலில் எதிரியின் கடற்படையின் நடமாட்டம் நின்று விட்டது. சமாதான உடன்படிக்கையின் ஷரத்துக்களின்படி இதாலி ஜெர்மனியுடனும், ஜப்பானுடனும் யுத்தம் செய்ய ஆரம்பிக்காவிட்டாலும் இதாலிய கடற்படையின் சரணாகதியிலிருந்து மத்தியதரைக்கடலிலுள்ள நேசதேசக் கடற்படைகள் வேறு இடங்களுக்கு இதர அலுவல்களுக்குச் செல்லக்கூடும். முக்கியமாக பஸிபிக்கில் அவசரமான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவேண்டும். இதாலிய சாமான் கப்பல்கள் இதாலியர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களையும் சாமான்களையும் கொண்டுவரக்கூடும். இதாலியக் கடற்படை புகழ் பெறாவிட்டாலும் அது மகத்தான கடற்படைதான். அதைத் தாக்குவதற்காக மத்தியதரைக் கடலில் பிரிடிஷ் கடற்படை ஒன்று அவசியம் இருக்கவேண்டியதாகயிருந்தது. இப்பொழுது இங்கிருக்கும் கடற்படையானது ஜப்பானைத் தாக்கத்தயாராகயிருக்கும் நேசதேசக்கடற்படையுடன் சேர்ந்துகொள்ளும்.

மத்தியதரைக்கடல். இதுவரையில் போக்குவரவுக்கு அபாயகரமாகயிருந்த மத்தியதரைக்கடலில் இப்பொழுது கப்பல்கள் பத்திரமாக நடமாடலாம். அட்லாண்டிக் கடலைவிட இந்தக் குறுகலான கடலில் யூ படகுகளின் நடமாட்டத்துக்கு அதிக சிரமம் ஏற்பட்டுவிடும். அவைகள் தீவுகளுக்கு மத்தியில் சென்றால் அவைகளை ஆகாயத்திலிருந்து சுலபமாகக் கண்டுபிடித்துவிடலாம். இந்து மகா சமுத்திரத்தில் தலை காட்டும் ஜப்பானியக் கப்பல்களை—வடக்குப் பக்கத்திலிருந்தும், மத்தியதரைக்கடல் பக்கத்திலிருந்தும் நாம் தாக்கி மூழ்கடித்து விடலாம்.

வி வி வி வி வி

பேர்லினுக்குப் போகும் மார்க்கம். கடல் மார்க்கமாக ஜப்பானுக்கு உண்டாகப்போகும் ஆபத்தைக் குறித்து ஜப்பானிய மந்திரிகள் தங்களுடைய சக்ரவர்த்தியுடன் மந்திராலோசனை செய்துவரும்பொழுது ஹிட்லர் தன்னுடைய சகாக்களுடன் ஸெப்டம்பர் 9-ம் தேதியன்று சதியாலோசனை செய்து போ நதி பிராந்தியத்தை கடைசி வரையில் காப்பாற்றிவிடுவதென்று முடிவு செய்துவிட்டான். இதுவும் ஞாயம்தான். இதாலியின் சரணுகதிக்குப் பின் நேசதேசத்தார்கள் மத்திய, தெறகு இதாலியிலுள்ள விமான தளங்களையும் துறைமுகங்களையும் ஆக்கிரமித்துவிட்டதால் அவர்கள் ஜெர்மனியின் தலைநகரத்துக்கு 500 மைல்கள் சமீபத்தில் வந்துவிட்டார்கள். ஏட்டிரியாடிக் கடலும் போக்குவரவுக்கு லாயக்காகி விட்டது. அங்கிருந்து பல்கேரியா, ருமேனியா, ஆஸ்திரியா, போலஸ்தி, வார்ஸா, பெர்லின் முதலிய இடங்களின் பேரில் குண்டுகளை வீசலாம். ஆக்கிரமிப்பு ஐரோப்பாவின் தெற்கு பாகத்திற்கு மாற்றப்பட்ட ஜெர்மன் தொழிற்சாலைகளுக்கு பத்திரக்குறைவு உண்டாகிவிட்டது. லம்பார்டியிலிருந்து கோபன்ஹேகனையும், பிரெஸ்டையும் வெடி விமானங்கள் தாக்கலாம்.

இதாலி சரணடைந்ததிலிருந்து ஜெர்மன் படை பலத்திலிருந்து 65 இதாலிய டிவிஷன் துருப்புகள் போய்விட்டன. இதாலியர்களை அடக்கி ஆளுவதற்கும், இதாலியர்கள் காபந்து செய்து வந்த தேசங்களில் காபந்து செய்து வருவதற்கும், இதாலியப் போர்முனையில் போர் புரிவதற்கும், ஜெர்மன் துருப்புகள் அவசியமாகும். இதே சமயத்தில் கிழக்குப் போர் முனையில் ருஷ்யர்கள் வெற்றிகரமாகப் போர் புரிந்து வருகிறார்கள். உதவிப்படை வந்து சேராததால் ஜெர்மானியர்கள் பின் வாங்குகிறார்கள்.

இதன் விளைவுகள் பால்கன் நாடுகளிலும் மற்ற இடங்களிலும் புலப்படுகின்றன. 4,00,000 இதாலியர்கள் பால்கன் நாடுகளில் காபந்து வேலையிலீடுபட்டிருந்தார்கள். பின்லாந்தும், ஹங்கேரியும், ருமேனியாவும் ஜெர்மனியுடன் உறவை ரத்து செய்யக்கூடும். கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் அனுப்பி வரும் உதவியை நிறுத்திவிடும். பல்கேரிய பிரதம மந்திரியும் தீவ்ரமான நாஸியுமான பிலாப் என்பவர் பல்கேரிய சேனையை நிபந்தனையின்றி ஜெர்மானியரிடம் ஒப்புவித்துவிடவேண்டுமென்று ஜெர்மனி கோரியபொழுது ராஜீனமா செய்து விட்டார். அவருக்குப் பதிலாக தீவ்ரமான நாஸிக் கொள்கையில்லாத ஒரு மந்திரி சபை அமைக்கப்பட்டிருக்கிறது. ஹிட்லர் இப்பொழுது தன்னுடைய சொந்த பலத்தைக் கொண்டுதான் போர் புரியவேண்டும். கடைசி பிரயத்தனமாக அவன் 60 வயதுள்ள விருத்தர்களையும் சேனையில் சேவைக்குச் சேரவேண்டுமென்று உத்தரவு போட்டுவிட்டான்.

வி வி வி வி வி

ஒப்பந்தம் நடைபெற்ற விதம். இந்தக் கதை சுருக்கமானது. முஸோலினி உத்தியோகத்திலிருந்து விலகிய பின் இதாலிய ராஜதந்திரிகள் இதாலிய நிர்வாகத்தின் ஆக்ஞைப்படி நடுநிலைமை வகிக்கும் இரண்டு நாடுகளிலுள்ள பிரிடிஷ் தூதர்களுடன் கலந்து ஆலோசனை செய்தார்கள். ஆகஸ்டு மாதத்தின் மத்தியில் நேசதேசத்தார்கள் இதாலியில் இறங்கியவுடன் இதாலி நேசதேசத்தாருடன் சேர்ந்துவிடுமென்று படாக்ளியோவின் தூதர் பிரிடிஷ் அரசாங்கத்தாரிடம் சொல்லிவிட்டார். இந்த சம்பாஷணைகள் முக்கியமாக லிஸ்பனில் நடைபெற்றன. நேசநாடுகள் நிபந்தனையற்ற சரணுகதி செய்யவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். சமாதானம் நிலைப்பதற்கும் கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ளுவதற்கும் இதுதான் வழி என்று நினைத்து படாக்ளியோ ஒப்புக்கொண்டு ஸெப்டம்பர் 3-ம் தேதியன்று ஒப்பந்தத்தில் கையெழுத்துச் செய்தான். நேசதேசத் துருப்புகள் நேபிள்ஸிலிறங்குமுன் ஸெப்டம்பர் 8-ம் தேதியன்று அது பிரசுரிக்கப்பட்டது.

வி வி வி வி வி

ஹிட்லரின் பிரசங்கம். இந்த துரதிருஷ்டத்துக்கு படாக்ளியோ தான் காரணமென்று ஹிட்லர் தன்னுடைய ஆத்திரத்தை வெளியிட்டான். படாக்ளியோ துரோகியென்றும், அவன் சரண் புகுந்தது தன்னைக் காட்டிக் கொடுத்தது என்றும் ஹிட்லர் சொல்லுகிறான். எல்லா நாடுகளையும் துரோக புத்தியுடன்

தாக்கியவனும், நட்புக்கொண்டவன் என்று டம்பமாகப் பேசிவந்த ருஷ்யாவுடன் போர் தொடுத்தவனுமான ஹிட்லர் பிறரை துரோகி என்று சொல்லுவது பொருத்தமாகயிருக்கிறது. இதாலியைக் காப்பாற்றுவதற்காகவும் தேசாபிமானத்திற்காகவும் சரணடைந்த படாக்ளியோவை நிந்தித்தது மட்டுமல்லாமல் இதாலியின் துரோகியான முஸோலினியை "பிராசீனமான ரோமன் சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிகுப் பின் இதாலியிலேயே முஸோலினி தான் புகழ் பெற்றவன்" என்று ஸ்தோத்திரம் செய்கிறான். அவன் தன்னுடைய அபிப்பிராயத்தை வெளியிடுவதில் ஒருவரும் ஆக்ஷேபிக்க முடியாது. ஆகிலும், முஸோலினியின் நண்பர்களின் யோக்கியதையையும், சர்வதேச சத்தியத்தையும் புறக்கணித்த அவனுடைய சரிதையையும் நாம் நன்கு உணருவோம். படாக்ளியோ முன் கூடியே சரணடைவதாகத் தன்னிடம் சொல்லவில்லையென்றுதான் ஹிட்லர் துக்கிக்கிறான். எதிரிக்கு ஒத்தாசை செய்வதுதான் இதாலியின் கடமை என்று ஹிட்லர் நினைக்கிறான் போலும்.

வி வி வி வி வி

தோல்வியை ஒப்புக்கொள்ளுதல். மனிதர்களின் யோக்யதாம்சத்தை மதித்து பேசுவதைத் தவிர, தேசத்துக்கும் தனக்கும் ஆபத்து நெருங்கி விட்டதென்பதை ஹிட்லா அறிந்துவிட்டானென்று அவனுடைய சொற்பொழிவு வெளியிடுகிறது. முதல்முதலாக இப்பொழுதுதான் விமானத்தாக்குதல் பலமாகயிருக்கின்றன வென்று அவன் ஒப்புக்கொள்ளுகிறான். ஜெர்மனியின் தலைநகரான பெர்லினே யுத்த அரங்கமாக ஆகிவிட்டதென்று அவன் துக்கிக்கிறான். இதாலியிலுள்ள நகரங்களை அவசரமாக அவன் ஆக்கிரமித்து வரும்பொழுதும்கூட இதாலியின் வீழ்ச்சியானது ராணுவ அபிப்பிராயப்படி பிரமாதமான காரியமில்லையென்றும் தைரியமாகச் சொல்லுகிறான். ருஷ்யாவில் ஒவ்வொரு இடமாகக் காலி செய்துகொண்டு வரும்பொழுது இது ராணுவ அவசியமென்றும் சில சமயங்களில் சில இடங்களை இழந்து விடுவதும் சில இடங்களிலிருந்து பின்வாங்குவதும் அவசியமென்றும் அவன் சொல்லுகிறான். அவ்விதம் செய்துவந்தாலும் அவனுடைய எஃகுக் கோட்டை பலமாகயிருக்கிறதென்றும் அவன் நினைத்து வருகிறான். ஜெர்மனியில் துரோகிகளே கிடையாதென்று அவன் சொல்லுவது விந்தையாகயிருக்கிறது. ரகசியப் போலீஸாரின் தலைவரான ஹிம்லரை உள்நாட்டு மந்திரியாக நியமித்ததிலிருந்தே உள்நாட்டின் நிலைமை திருப்திகரமாகயில்லையென்று வெளிப்படுகிறது.

வி வி வி வி வி

ஆச்சரியமானது, பரிகசிக்கத் தக்கது இப்பொழுது அச்சுநாடுகள் செய்துவரும் பிரசாரம் பரிகசிக்கக்கூடியதாகவும் விந்தையாகவுமிருக்கிறது. ஜெர்மன் படைகள் ருஷ்யப்படைகளை இடைவிடாது வளைத்து வருகிறார்களென்றும் அவர்களை நிர்மூலமாக்கி வருகிறார்களென்றும் சொல்லப்படுகிறது. ஏதாவது ஒரு சமயத்தில் ஒரு சிறிய பிரதேசத்தைக் காலி செய்துவிடுவோம். இது பிரமாதமில்லை. வட ஆபிரிக்காவில் ரோமல் மேற்கு முகமாக ஓடி வெற்றிபெற்றது போல் ருஷ்யாவிலும் ஜெர்மனிக்கு வெற்றிகள் கிடைத்து வருகின்றன. இந்த முறைகளெல்லாம் மகத்தான யுத்தத்தில் திருத்தியமைத்துக்கொள்ளக்கூடிய யுத்த தந்திரத்தை ஒத்த முறியடிக்கமுடியாத முறையாகும். ஹாஹா பிரபும் வழக்கப்படி சொல்லுகிறார். "கிழக்குப் போர்முனையிலிருந்து ஜெர்மனியின் ராணுவ சக்திகள் வேறுபக்கம் திரும்பி விடவில்லையென்பது தெளிவானது. நேசநாடுகள் ஸிஸிலியைத் தாக்கி கிழக்கேயிருக்கும் ஜெர்மனிக்குச் சங்கடம் உண்டுபண்ணவேண்டுமென்று உத்தேசித்திருந்தால் அந்த எண்ணம் பூர்த்தியடையவில்லையென்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது".

வி வி வி வி வி

அசைவு கொடுக்கக்கூடிய யுத்த தந்திரம். ருஷ்யாவில் செம்படையின் தொடர்ச்சியான வெற்றிகளுக்கு சமாதானம் சொல்லும் முறையில் ஜெர்மன் பிரசாரர்கள் இந்தப்புதிய யுத்த தந்திரத்தை பிரகடனம் செய்துவருகிறார்கள். ஜெர்மன் ராணுவ வியாக்யானியான ஜெனரல் டிட்மார் இதைப்பற்றி தன்னுடைய அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார்.

"கிழக்குப் போர்முனையில் எந்த முக்கியமான ஸ்தானத்தையும் காப்பாற்றுவதைவிட இத்தருணத்தில் மற்ற முக்கியமான காரியங்கள் கவனிக்கப்படவேண்டுமென்பதை ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். அவசியமான காரியங்கள் என்னவென்று நான் விளக்கிச் சொல்லுகிறேன். ருஷ்யர்கள் நமது படை வரிசைகளைப் பிளந்துவிட்டார்களென்பதுதான் முக்கியமானது".

இதன் அர்த்தத்தை விசாரம் செய்தால் ஜெர்மன் சேனைகள் மேற்கு முகமாக முன்னேறிக்கொண்டிருக்கின்றனவென்று கோயபல்ஸ் சொல்லும் கட்டுக்கதையின் அர்த்தம் விளங்கவில்லை. டாகன்ராக்கும், பிரியான்ஸ்கும் விழுந்துவிட்டாலும் ஜெர்மன் சேனைகள்

தப்பி ஓடிவிட்டன. டாகன்ராக்கிலிருந்து ஜெர்மன் சேனைகள் பின்வாங்கினதைப்பற்றி விவரிக்கும்பொழுது "ஜெர்மன் துருப்புகள் ருஷ்யப் படை வரிசைகளையும் பிளந்துகொண்டு மேற்கு முகமாக முன்சென்றன" என்று கோயபல்ஸ் சொல்லுகிறான்.

புதிய ஜெர்மன் யுத்த தந்திர முறைப்படி உபயோகமற்ற பிரதேசத்தைக் காலி செய்து விட்டு ஜெர்மனியின் யுத்த முஸ்தீப்புகளைப் பத்திரப்படுத்திக்கொள்ளுவதுதான். ஆகிலும் ருஷ்யர்கள் புதிதான ஸ்தானங்களை ஆக்கிரமித்துக்கொண்டு ஜெர்மன் படை வரிசைகளைப் பிளந்துவிடுவதால் குறைவுபடுவதற்கு பதிலாக யுத்த அரங்கம் விஸ்தரிக்கப்படுகிறது.

"கிழக்குப் போர்முனையில் தற்காப்பு யுத்தம் நடத்துவதற்குப்போதுமான அதம பக்ஷமான துருப்புகள்தான் நம்மிடமிருக்கின்றன" வென்று ஜெனரல் டிட்மார் உண்மையை உரைத்துவிட்டார். "கடைசி வரையில் யுத்தம் செய்யுங்கள்" என்றுதான் ஐந்தாம் வருஷ யுத்தத்தில் ருஷ்யாவிலுள்ள துருப்புகளுக்கு ஹிட்லர் உத்தரவிட்டிருக்கிறார்.

வி வி வி வி வி.

யூ படகு யுத்தம். ஆகஸ்டு மாதத்திலும், யூ படகுகளின் யுத்தம் நமக்கு வெற்றிகரமாக முடிந்துவிட்டது. சென்ற சில மாதங்களிலிருந்ததைவிட இந்த மாதத்தில் யூ படகுகளின் நடமாட்டம் குறைந்துவிட்டது. கப்பல் நஷ்டமும் குறைவு. சாமான் கப்பல்களைக் காட்டிலும் அதிகமான யூ படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. யூ படகுகளின் தளமான பிஸ்கே விரிகுடாவில் மட்டும் சென்ற சில நாட்களுக்குள்ளாக 7 யூ படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. இதுதான் மகத்தான வெற்றியென்று சொல்லப்படுகிறது.

வி வி வி வி வி

தூரக்கிழக்கு செய்திகள். ஸெப்டம்பர் 14-ம் தேதியன்று ஸலாமூவா விழுந்தது. லே ஸெப்டம்பர் 17-ம் தேதி விழுந்தது.

வி வி வி வி வி

ஜப்பானியர்களின் சமாதானப் பேச்சு. பஸிபிக்கில் நேசதேசத்தாரின் பலம் ஓங்கிவருவதையும், இதாலிய சரணாகதியையும், ருஷ்யர்களின் வெற்றிகளையும் கண்டு சாத்யமானால் சைனாவுடன் சமாதானம் செய்துகொள்ள வேண்டுமென்று ஜப்பான் ஆசைப்படுகிறது. மேல்நாட்டு வல்லரசுகளுக்கு எதிர்த்த கக்ஷியில் சைனா சேர்ந்துகொள்ளும் பக்ஷத்தில் சைனாவைக் காலி செய்துவிடுவதாக ஜப்பான் பலமாக சமாதானப்பேச்சுகளை சைனாவுக்கு விடுத்திருக்கிறது. அதற்குப் பதிலுரைக்கும் முறையில் குவாமிண்டாங்கிலுள்ள மத்திய கமிட்டியானது ஸெப்டம்பர் 15-ம் தேதியன்று ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. உதயமாகியிருக்கும் வெற்றியைப் பெறுவதற்கு சீனர்கள் தயார் செய்துகொள்ளவேண்டுமென்று சொல்லுவதுபோல அதில் த்வனிக்கிறது.

"நாஸி ஜெர்மனி இப்பொழுது தன்னந்தனியே நிற்கிறது. வெகு காலம் அது நிலைபெற்றிருக்க முடியாது.

"ஜப்பானும் பலஹீனமடைந்துவிட்டதாகத் தோன்றுகிறது. நேசதேசத்தார்கள் முன்னேறித்தாக்க ஆரம்பித்துவிட்டால் ஜப்பான் எவ்வளவு பலமாகச் சண்டை போட்டாலும் அது தோல்வியடைவது நிச்சயம்.

"நேசதேசத்தார்களுக்கு வெற்றி நிச்சயமென்றாலும் நம்முடைய யுத்த முயற்சிகளை இரட்டிக்கவேண்டும் நமக்கு வாய்த்திருக்கும் சந்தர்ப்பத்தைக் கடைப்பிடித்து இறுதியில் நாம் வெற்றிபெற வேண்டும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி

இந்தியாவிலிருந்து எதிர்ப்பு யுத்தம். ஜப்பானிய தேசங்களைத் தாக்குவதற்கு நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் காலம் வந்துவிட்டது. மகத்தான பிரயத்தனங்களும் செய்யப்பட்டு வருகின்றன. பிரிடனுக்காக நடைபெற்ற யுத்தத்தின் ஞாபகார்த்தமாக படைகளின் அணிவகுப்பு நடைபெற்ற பொழுது விமானப்படை உயர்தர அதிகாரியான ஸர் ரிச்சர்ட்பியர்ஸ் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்.

"இந்தியா பூராவிலும் விமானக்கூடங்களையும், பயிற்சி அளிக்கும் ஸ்தாபனங்களையும், விமானங்களின் ரக்ஷணை, பழுதுபார்ப்பது, உத்தாரணம் முதலிய வேலைகளைச் செய்வதற்கும் ஏராளமான ஸ்தாபனங்களையும் நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். நாம் நான்கு திசைகளிலும் விமான மார்க்கங்களை அமைத்திருக்கிறோம். ஒவ்வொரு திசையிலும், போக்குவரவு, யந்திர சாதனங்கள், மற்றும் விமான நடவடிக்கைகளுக்கு வேண்டிய சகலவிதமான ஏற்பாடுகளையும்

அமைத்திருக்கிறோம். நாம் இன்று யுத்தத்துக்கு தயாராகியிருக்கிறோம். எதிரி இங்கு வந்தால் அவனைத் தாக்குவதுடன் வெளியே சென்று எதிரியைக் கண்டுபிடித்து அடிப்பதற்கும் நாம் தயாராகயிருக்கிறோம். மஞ்சள் வர்ணமுள்ள அநாகரீகமற்ற எதிரியை நாம் அழித்துவிடவேண்டும்."

வி வி வி வி வி

சில்லரை விஷயங்கள். 1 சியாங்-கே-ஷேக் சைனாவில் தலைவராகவும் சேனாதிபதியாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

2 பாரஸீகம் ஜெர்மனிபேரில் போர் தொடுத்துவிட்டது.

பிரென்னர் கணவாய் இதாலியிலிருந்து ஜெர்மனிக்குச் செல்ல குறுக்கான வழி.

அதன் பிராசீன சரித்திரம் துக்ககரமானது.

நேசதேசத்தார்கள் பிரென்னர் கணவாயை வெடிகுண்டுகளால் தாக்கியதைப்பற்றி வியாக்யானம் செய்யும்பொழுது டெயிலி மெயில் பத்திரிகையில வார்டுபிரைஸ் என்பவர், இதாலி யுத்தத்தில் இறங்கியது முதற்கொண்டு பிரென்னர் கணவாய்தான் போக்குவரவு மார்க்கமாயிருந்துவருகிறதென்று எழுதுகிறார்.

இதாலியிலிருந்து ஜெர்மனிக்குச் செல்லுவதற்கு இதுதான் நேரான ரஸ்தா. இதன் வழியாகத்தான் ஜெர்மனி, இதாலிக்கு நிலக்கரியையும், எண்ணெயையும் ஸப்ளை செய்தது. இரவு பகலாக, பத்து நிமிஷத்துக்கொரு தடவை இதன் வழியாக ரெயில்வண்டித் தொடர்கள் போய்க்கொண்டிருந்தன. இந்த இருப்புப்பாதையைத் தாக்கவேண்டிய அவசியம் யாதெனில் இதன் பெரும்பாகமான 75 மைல்கள் நீளமுள்ள இருப்புப்பாதை சமவெளிகளில் அமைக்கப்பட்டிருக்கிறது. மற்ற இருப்புப்பாதைகள் ஆல்பைன் கணவாய்கள் வழியாக இதாலிக்குச் செல்லுகின்றன. பிரென்னர் கணவாய் கொஞ்சம்கொஞ்சமாக உயர்ந்துவருகிறது. அதன் உன்னதமான பிரதேசம் 5,000 அடிக்கு மேலில்லை.

நான் அதன்வழியாக கால்நடையாகவும், மோட்டாரிலும் ரெயில்வண்டியிலும் சென்றிருக்கிறேன். அநேக இடங்களில் இருப்புப்பாதைக்கு விலாப்பக்கத்தில் ஆயிரக்கணக்கான அடிகள் உயரமுள்ள செங்குத்தான பாறைகளிருக்கின்றன. இந்த மலைச் சரிவுகளில் குண்டுகளைப் பொழிந்தால் கற்கள் உருண்டுவிழுந்து இருப்புப்பாதையை அழித்துவிடும். இருப்புப்பாதை பூராவிலும் மின்சார விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. மின்சார ஸப்ளை செய்யும் உற்பத்திசாலைகளில் சிலவற்றை பறக்கும் கோட்டை விமானங்கள் நொருக்கியிருக்கலாம். தெற்கே டிரெண்டோவிலுள்ளதும், எயிஸாக் நதியிலுள்ள இருப்புப்பாதை பாலமும் உடைபட்டுவிட்டது. அடிச் நதியின் மேலுள்ள பாதை மூடப்பட்டுவிட்டது.

இதாலியர்களுக்கு பிரென்னர் கணவாயின் சரித்திரம் துக்ககரமான தோற்றமுள்ளது. ஆஸ்திரியாவின் ஸ்வதந்திரத்துக்கு இதாலியர்கள் பிரென்னர் கணவாயில் காவல் புரிவதுதான காரணமென்று முஸோலினி பீத்திக்கொண்ட காலமுமுண்டு. சான்ஸலர் அடால்ப்ஸ் குத்திக் கொல்லப்பட்டபின் 1934-ம் வருஷம் ஜூலை மாதத்தில் முஸோலினி நான்கு டிவிஷன் துருப்புகளை அனுப்பி நாஸிகள் ஆஸ்திரியாவைப் பிடித்துக்கொள்ளாதபடி தடுப்பதற்கும் அவன் முயன்றான்.

1940-ம் வருஷத்தில் பிரென்னர் கணவாயில்தான் முஸோலினியும், ஹிட்லரும் சந்தித்துப் பேசினார்கள். இந்த சம்பாஷணையில்தான் பிரான்ஸை முதுகில் அடிப்பதற்கு ஜெர்மானியர்கள் செய்திருக்கும் திட்டத்தை முஸோலினிக்கு ஹிட்லர் வெளியிட்டிருக்கக் கூடும்.

இந்தக் கணவாயில்தான் பிரான்ஸின் முதுகில் குத்துவதற்கு இதுதான் தகுந்த சந்தர்ப்பமென்று முஸோலினி முடிவுசெய்து, யுத்தத்தில் இறங்கினான். அதன்மூலம் அவனுடைய நாசமும் ஏற்பட்டுவிட்டது. இரண்டு சர்வாதிகாரிகளும், இங்கே அநேகம் தடவைகள் கூடிப் பேசினார்கள். ஒவ்வொரு தடவையிலும், இதாலியின்பேரில் நாஸிகளின் ஆதிக்கம் வலுவடைந்தது.

இதாலியக் கடற்படை.

இதாலி யுத்தத்திலிறங்கியது முதல் அதற்கு 10 சஞ்சாரிகளும், 48 மீன் வெடிப்படகுகளும், நாசகாரிகளும், 35 சிறிய கப்பல்களும், ஏராளமான நீர்மூழ்கிகளும் நஷ்டமாகிய பின்னும் இதாலியக் கடற்படை மிகவும் பலமானது. யுத்தத்தில் முக்கியமாகக் கருதப்பட வேண்டிய அம்சமுமாகும்.

1940-ம் வருஷத்தில் கடலில் நடமாடிக்கொண்டிருந்த 6 யுத்தக் கப்பல்களில் இரண்டான விட்டாரியோவும், காவூரும் 1940-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் டாரண்டோவில் ஏற்பட்ட கடல் விமானப்படையின் தாக்குதலால் பழுதுபட்டு துறைமுகத்திற்குச் சென்றுவிட்டன. யுத்தக் கப்பல்களில் விட்டாரியோ மிகவும் சக்தியுள்ளது. அது பழுது பார்க்கப்பட்டு மறுபடியும் கடலில் சஞ்சாரம் செய்து வந்திருக்கிறது. யுத்தத்துக்குமுன் திருத்தியமைக்கப்பட்டு பழுதுபட்ட காவூர் என்ற கப்பலையும் சமீபத்தில் பழுதுபார்த்துவிட்டார்களென்று தோன்றுகிறது. விட்டாரியோ வகுப்பைச் சேர்ந்த ரோமா, இம்பீரோ என்ற இரண்டு புதிய கப்பல்களும் கட்டி முடிக்கப்பட்டு கடலில் நடமாடுகின்றனவென்றும் எதிரி சமீப காலத்தில் வெளியிட்டான். இது அசம்பாவிதமில்லை. ஆகிலும், ஒன்றுக்கு மேற்பட்ட கப்பலைக் கட்டி முடித்திருக்கக் கூடுமென்று தோன்றவில்லை.

ஏற்கனவே இருந்த 19 சஞ்சாரிகளில் 9 தான் பாக்கியிருக்கின்றன. அவைகளில் இரண்டு கப்பல்கள் 10,000 டன் எடைமானமுள்ளவை. 8 அங்குல பீரங்கியுள்ளவை. இதாலிக்கு நஷ்டமான 48 நாசகாரிகளும், மீன் வெடிப்படகுகளும் எல்லாம் இதாலி யுத்தத்தில் இறங்கிய பொழுது அதனிடம் இருந்த 104 கப்பல்களின் ரகத்தைச் சேர்ந்தவைகளல்ல. அவைகளில் சில கப்பல்கள் சென்ற யுத்தத்தில் ஈடுபட்டு கியாதிபெற்றவைகள். சில்லரை கடற்படை வேலைகளுக்கு அவைகள் உபயோகப்படுத்தப்பட்டன. சிலவற்றை சென்ற மூன்று வருஷங்களில் இதாலியக் கடற்படையில் சேர்த்திருக்கக்கூடும்.

இதாலிய யுத்தக் கப்பற்படைக்கு என்ன நேரிடுமென்று உலகம் பூராவிலும் ஊகித்துக் கொண்டிருக்கும்பொழுது ஜனங்கள் இதாலிய சாமான் கப்பல்களின் முக்கியத்வத்தை மறந்துவிட்டார்கள்.

யுத்தம் ஆரம்பமானபொழுது இதாலியரிடம் 35,00,000 டன்கள் எடைமானமுள்ள சாமான் கப்பல்களிலிருந்தன. நேசதேசக் கடற்படையும், விமானப்படையும் கப்பல்களின் கணக்கைக் குறைத்துவிட்டன. இன்று இதாலியிடம் 1 மிலியன் டன்கள் எடைமானமுள்ள கப்பல்களிருக்கின்றனவாவென்றுகூட சந்தேகிக்கவேண்டிய நிலைமை! ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கணக்கில் ஹிட்லர் தெற்கு பிரான்ஸை ஆக்கிரமித்த பொழுது இதாலியர் வசமான விஷி ஸர்க்காரைச் சேர்ந்த 8,35,000 டன்கள் எடைமானமுள்ள கப்பல்களும் சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்த சமயத்தில் விஷி கப்பல் அச்சு நாட்டாருக்குக் கிடைத்தது மகத்தான லாபம் தான். ஆகிலும், நேசநாடுகள் ஏராளமான கப்பல்களை அழித்துவிட்டதால் அந்த லாபம் பிரயோஜனப்படவில்லை.

மிலானில் ஆச்சரியம்.

மிலானிலுள்ள ஜனங்கள் ஒரு ஆச்சரியத்தைக் கண்டுபிடித்துவிட்டார்கள்.

ரோம் ரேடியோவில் வெளிவந்த ரிப்போர்ட்டை ஸ்விஸ் ஒலிபரப்பில் வெளியிட்டிருக்கிறது. அதில் சில வருஷங்களுக்குமுன் முஸோலினி பாலத்தில் முஸோலினியின் கௌரவார்த்தமாக ஒரு நான்கு முகமுள்ள தூண் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது.

அந்த ஸ்தம்பத்தைச் சுற்றிலும் சொக்கத் தங்கத்தினால் கவசம் போட்டிருக்கிறதென்றும், அன்பு மிகுந்த இதாலிய ஸ்திரீகள் தங்களுடைய நகைகளையும், கல்யாண மோதிரங்களையும் இதற்காக நன்கொடையளித்தார்களென்றும் ஒரு அறிக்கை விடுவிக்கப்பட்டது.

64 ராத்தல் எடைமானமுள்ள தங்கம் உபயோகப்படுத்தப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

முனிஸிபல் சபையின் உத்தரவின் பிரகாரம் அந்த ஸ்தம்பத்தை இப்பொழுது அப்புறப்படுத்தினார்கள்.

ஆச்சரியம் இது தான். தொழிலாளர்கள் தங்கக் கவசத்தை அப்புறப்படுத்தி பரிசோதித்தப்பொழுது அது சொல்ப விலையுள்ள கலப்புள்ள பித்தளை என்று கண்டுபிடித்தார்கள்.

தேசாபிமானமுள்ள மிலானைச் சேர்ந்த ஸ்திரீகள் நன்கொடையளித்த தங்கமெல்லாம் ஸ்தம்பத்தின் கவசத்திற்கு உபயோகப்படவில்லை. பாஸிஸ்ட்சகூடியின் காரியதரிசியும், தலைவரும் அதை அபலாபப்படுத்திவிட்டார்கள்.

எதிரிகளுக்குள்ள பத்து அசௌகரியங்கள்.

ஐந்தாம் வருஷ யுத்தத்தில் ஜெர்மனிக்குள்ள அசௌகரியங்களை கீழ்கண்டபடி விவரிக்கலாம் :—

1. மனித பலம் ஐந்தில் இரண்டு பாகம் குறைந்துவிட்டது. முஸ்தீப்புகள் செம்பாதி போய்விட்டன.
2. உற்பத்தி 40 சத விகிதம் குறைவுபட்டுவிட்டது.
3. மறுபடியும் ஆகாய ஆதிக்கம் பெற முடியாதபடி ஜெர்மன் விமானப் படையின் நிலை குலைந்துவிட்டது.
4. இதாலியின் ராணுவ பலம் போய்விட்டதால் யுத்த பளுவை ஜெர்மனி மட்டும் வகிக்க வேண்டியிருக்கிறது.
5. தரைச் சண்டைகளில் ஏற்பட்ட தோல்விகள் ஜெர்மன் மக்களின் மனோதைரியத்தைக் குறைத்துவிட்டன. வெடிகுண்டுத் தாக்குதல்கள் பொதுஜனங்களின் தைரியத்தைக் குலைத்துவிட்டன.
6. உள்நாட்டு போக்குவரவுகள் நாசமாகிவிட்டன. இதிலிருந்து அடிமைப்பட்ட நாடுகளை அடக்கியாளுவது கஷ்ட சாத்தியமாகிவிட்டது.
7. ருமேனியா, ஹங்கேரி, பின்லாந்து முதலிய நாடுகள் அரை மனதுடன் யுத்தம் நடத்துகிறார்கள். பல்கேரியாவின் நிலைமை நம்பக் கூடியதாகயில்லை.
8. ஜெர்மன் முன்னேற்ற யுத்தம் போய்விட்டது.
9. கடல் யுத்தம் ஜெர்மனிக்கு லாபாகரமாகயில்லை.
10. ஜப்பான் தண்டிக்கப்பட்டுவிட்டது. தன்னைக் காப்பாற்றிக்கொள்ள அது யுத்தம் நடத்திவருகிறது.

டாக்கன்ராக்கின் ஆக்கிரமணம்.

ஹிட்லரின் பேராசையின் முடிவு.

(லெப்டினெண்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக்).

சமீபகாலத்தில் ருஷ்யர்கள் டாகன்ராக்கை வெற்றிகரமாகக் கைப்பற்றிவிட்டார்கள். ஜெர்மானியர்கள் கைப்பற்றியதுமுதல் இதைத் தீரமாகக் காப்பாற்றிவந்தார்கள். இந்த வருஷ ஆரம்பத்திலே இது ருஷ்யர் வசமாகிவிடுமென்று தோன்றிற்று. தற்சமயத்தில் ஜெர்மானியர்கள் உதவிப்படைகளை அனுப்பி பதில் தாக்குதல் செய்து கார்கோவ் நகரத்தை திரும்பவும் கைப்பற்றினார்கள். இதனால் தெற்கு யூக்ரேனுக்கு ஏற்பட்டிருந்த அபாயம் நீங்கிவிட்டது. டாகன்ராக் ஜெர்மானியர் வசமிருந்து வந்தது.

குர்ஸ்க் முன்னணி ஸ்தானத்தில் ஜெர்மானியர்கள் வேனிர் காலத்தில் தாக்குதல் செய்தது ஒரு வார யுத்தத்துக்குள்ளாகவே முறியடிக்கப்பட்டது. அதற்குப்பின் மேற்கு முகமாக பல பாகங்களில் ருஷ்யர்கள் முன்னேறிவிட்டார்கள். இப்பொழுது ஒரு சமயத்தில் ஒரு முனையில் முன்னேறுவதைவிட விரிவான பல யுத்த முனைகளில் ஒரே சமயத்தில் செம்படை முன்னேறித் தாக்கும் கட்டம் வந்துவிட்டது.

டாகன்ராக் வீழ்ச்சியை மாஸ்கோவில் பீரங்கி குண்டுகளைப் போட்டும், மணிகளை இடைவிடாது சப்தித்துக் கொண்டாடினார்கள். ருஷ்யர்கள், டாகன்ராக்கைவிட பெரிய நகரங்களைப் பிடித்தபொழுது அந்த வைபவங்களைக் கொண்டாடாமல் இதைமட்டும் ஏன் கொண்டாடி

னார்கள்? டாகன்ராக்கின் வீழ்ச்சி மூலம் ஜெர்மனியின் பேராசை முறியடிக்கப்பட்டதென்றும், அது சாதாரண வெற்றியில்லையென்றும் அவர்கள் மதிக்கிறார்கள் போலும்.

தெற்குக் கடற்கரை வழியாக முன்னேற ஆரம்பித்தால் ருமேனியாவிலுள்ள எண்ணெய்ப் பிரதேசங்களிலுள்ள ஜெர்மன் பிடிப்புக்கு ஆபத்து துவக்கமாகிவிடும். அதன் காரணத்தினால்தான் ஜெர்மனி இதைகு பலமாக எதிர்த்து நிற்கக்கூடும். மாரிகாலம் வந்து ஹிட்லருக்கு உதவியளிக்குமுன் ருஷ்யர்கள் நீபர் நதிக்கு மேற்குப்பக்கத்தில் முன்னேறாதபடி தடுப்பதற்காக ஜெர்மானியர்கள் மற்ற போர்முனைகளில் கிடைக்கக்கூடிய எல்லா படைபலத்தையும் திரட்டுவார்களென்று நான் எதிர்பார்க்கிறேன். வசந்தகாலம் வரும் வரையில் தெற்கு யுத்த அரங்கம் நிலைகுலைந்துவிடாதபடி ஜெர்மானியர்கள் காப்பாற்ற முடியுமென்று தோன்றுகிறது. அப்படியானால், மாஸ்கோவில் நடைபெற்ற குதூஹலங்கள் அகாலத்தில் நடைபெற்றவைகளல்லவா. நான் அப்படி நினைக்கவில்லை. அதற்கு மேற்கில் நடவடிக்கை எவ்விதமிருப்பினும் டாகன்ராக்கை ஜெர்மனி கைவிட்டதென்பது ஹிட்லர் கிழக்கே முன்னேறும் ஆசையை அகற்றிவிட்டானென்பதைக் காட்டுகிறது. ஹிட்லர் தற்காப்பு யுத்தத்தை மேற்கொண்டுவிட்டானென்பதையும் அது குறிப்பிடுகிறது. நேசதேசப் படைகளின் ஒன்றுபட்ட ஆயுத பலமும், ஒன்றுபட்ட ஊக்கமும், நாஸிகளை வேருடன் அழித்துவிடும்வரையில் ஒன்றுபட்டு போர்புரியவேண்டுமென்ற எண்ணமும் நிலைத்திருக்கும்வரையில் தற்காப்பு யுத்தம் பயன்படாது.

ஆகிலும், அதிக நம்பிக்கை கொள்ளுவது சரியல்ல. டாகன்ராக்கிலிருந்து பின்வாங்கிவிட்டதால் குபான் தீபகற்பத்திலிருந்தும் ஜெர்மனி பின்வாங்கிவிடுமென்று இப்பொழுது நினைப்பதற்கு முகாந்திரமில்லை. மெலிடாபோல் என்பது டாகன்ராக்குக்கு மேற்கே 150 மைல்களிலுள்ளது. அந்த நகரத்துக்கு அபாயம் ஏற்பட்டாலொழிய குபானிலிருக்கும் ஜெர்மன் சேனைகளுக்கு கிரிமியா மார்க்கமாக கெர்ச் ஜலசந்தி வழியாக சாமான்களை அனுப்ப முடியும். கிரிமியாவிலிருந்து ருஷ்யாவுக்குச் செல்லும் இருப்புப் பாதை துண்டிக்கப்பட்டுவிட்டால்—ருஷ்யர்கள் மெலிடாபோலையோ அல்லது ஸாபொரோஷியைக் கைப்பற்றினால் இது நடைபெறும்—குபானிலிருக்கும் ஜெர்மன் துருப்புகளுக்கு ஆபத்து உண்டாகிவிடும். கிழக்குப்பக்கத்தில் முன்னேறும் நோக்கங்களைக் கைவிட்டபின் ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் சௌகரியமிருக்கும்பொழுதே குபானிலுள்ள துருப்புகளை வாபஸ் பெறலாமென்று தீர்மானிக்கலாம். ஆகிலும், அவர்கள் அவ்விதம் செய்தால் ஏராளமான ருஷ்யப் படைகளை இதர போர்முனைகளுக்கு அனுப்ப உதவி செய்ததாகும். குபானைக் காப்பற்றிவரும்வரையில் அங்கிருக்கும் ஜெர்மன் படைகள் ஒரு ராணுவ முக்கியமான வேலையைச் செய்துவருகின்றன. அங்கிருக்கும் பலமான ருஷ்யச்சேனையை அசைய முடியாமல் செய்துவருகின்றன. யுத்தத்தின் அநேக நடவடிக்கைகளைப்போல் இதுவும் காலஹரணம் செய்யும் ஒரு புத்திசாலித்தனமான நிகழ்ச்சியாகும்.

தெற்கு யூக்ரேனிலும், குபான் பிரதேசத்திலும் காலநிலைமையை நிர்த்தாரணம் செய்யமுடியாது. சென்ற வருஷத்தில் மாரிகாலம் நீடித்திருக்கவில்லை. சீக்கிரத்தில் பனி உருக ஆரம்பித்தது. இருப்புப்பாதை வசதிகளில்லாத ருஷ்யர்களுக்கு இது இடைஞ்சலாகயிருந்தது. ஜெர்மானியர்களுக்கு ஏராளமான இருப்புப்பாதை மார்க்கங்களிருந்தன. பனி உருக ஆரம்பித்தபின் ருஷ்யர்களின் பனிக்கட்டிமேல் செல்லும் வண்டிகள் பிரயோஜனப்படவில்லை. ருஷ்யர்கள் முன்னேற, முன்னேற ரஸ்தாக்களையும், இருப்புப்பாதைகளையும் ஜெர்மானியர்கள் அழித்துவிடுவார்களென்றும் பின்வாங்கும் ஜெர்மானியர்களுக்கு பரிஷ்காரமாக இருப்புப்பாதை மார்க்கங்களிருக்கின்றனவென்றும் நாம் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஜெர்மன் விமானப்படையின் சக்தி அழிந்துவிட்டது.

முன்போல் உபயோகப்படவில்லை.

(லியோனர்ட் ஏஞ்சல்).

(நியூயார்க் "லிபர்ட்டி" பத்திரிகை கட்டுரையின் சுருக்கம்).

யுத்த ஆரம்பத்திலிருந்து 65,000 ஜெர்மன் விமானங்கள் தீக்கிரையாகிவிட்டன. தினசரி நாம் 4,000 விமானங்களைக்கொண்டு தாக்கிவருவதால் ஜெர்மன் விமானப்படையின் சக்தி குறைந்துவருகிறது.

"தோல்வியடையாத" ஜெர்மன் விமானப்படை 1940-ம் வருஷம் பிரிடனுக்காக நடைபெற்ற யுத்தத்தில் முதல்முதலாகத் தோல்வி பெற்றது. ஜெர்மனியின் யுத்த ராணுவ நிபுணர்கள், தங்கள் கௌரவத்துடன் பாராட்டி வந்த விமானப்படைக்கு, அதிக நஷ்ட

மேற்படுவதற்குமுன் லண்டனைத் தாக்கும் உபயோகமற்ற நடவடிக்கைகளை நிறுத்திவிடும்படி உத்தரவிட்டார்கள். அடுத்துவந்த மாரிகாலத்திலும், வசந்த காலத்திலும் ஜெர்மனிக்கு ஏற்பட்ட விமான நஷ்டங்களை, ஜெர்மன் தளவாட உற்பத்திசாலைகள் அபரிமிதமாக உற்பத்தி செய்து சரிப்படுத்திவிட்டன. 1941-ம் வருஷம் ஜூன் மாதத்தில் ருஷ்யாவின் பேரில் படையெடுக்க ஹிட்லர் தயாராகயிருந்தபொழுது, ஜெர்மன் விமானப்படையின் வலு பரிபூர்ணமாகயிருந்தது. ருஷ்யாவை, ஜெர்மனி தாக்கியதிலிருந்துதான் ஜெர்மன விமானப் படையின் சக்திக் குறைவு ஆரம்பமாயிற்று. அதன் பிறகு ஒவ்வொரு மாதத்திலும், புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட விமானங்களைவிட சண்டையிலும், அகஸ்மாத்தாகவும், பழுதுபட்டதுமான விமான நஷ்டங்கள் அதிகமானவை. விமானம் ஓட்டிகளும், விமானத் தரைப்படையாளர்களும் வரவரக் குறைந்துவிட்டார்கள். 1941-ம் வருஷம் ஜூன் மாதம் 22-ம் தேதியன்று அநேக இடங்களை விமானப்படை தாக்கவேண்டுமென்று, ஹிட்லர் ஆக்ஞையிட்டது மூலமாக அவனுடைய விமானப் படைக்கும், தரைப் படைகளுக்கும் நாசத்தை விலைக்கு வாங்கினன். அவைகளின் பூர்ணமான அழிவிற்கும் அப்பொழுதே அஸ்திவாரம் போட்டாகிவிட்டது.

விமானப்படையின் குறைவுக் கணக்கு.

ஜெர்மன் விமானப் படையின் குறைவுக் கணக்கைத் திருத்தி எழுதுவதும், அதன் தற்போதிய பலத்தை நிர்ணயிப்பதும் சிரமசாத்தியமான வேலைகள். ரிபோர்ட்டு அனுப்புகிறவர்கள் நல்ல எண்ணத்துடனும், பரிச்ரமப்பட்டு எழுதினலும் யுத்த சம்பந்தமான ரிபோர்ட்டுகள் பூராவும் சரியானவைகளல்ல. ஏனென்ருல் விமானப் போர்கள் மிகவும் குழப்பமானவைகள்.

ஆகிலும், சில விஷயங்களைத் தணிக்கை செய்கிறவர்களும் மறைக்கமுடியாது. கோயபல்ஸூம் மழுப்பிச் சொல்லமுடியாது.

ஹிட்லர் ருஷ்யாவில் படையெடுத்தபொழுது, ஜெர்மன் விமானப்படையில் ஐந்து பகுதிகள் இருந்தன. ஒவ்வொன்றிலும் 1,300 விமானங்களுண்டு. இதைத் தவிர பருந்துப் பாய்ச்சல் விமானங்கள் முக்கியமாகயிருந்த 800 விமானங்களுள்ள ரிச்ஹாபன் என்ற விமானப் பகுதியும் ருஷ்யாவுக்குச் சென்றது. இந்தக் கணக்குகளில் பயிற்சி விமானங்கள், துருப்பேற்றிச் செல்லும் விமானங்கள், உதவி விமானங்கள் சேர்க்கப்படவில்லை. 7,500 விமானங்கள்கொண்ட இந்த விமானப்படை, இதுவரையில் நடைபெருத வண்ணமாய் ஒரே நாளில் 6,000 விமானங்களைக் கொண்டு தாக்குவதற்கு ஜெர்மன் ராணுவ அதிகாரிகளுக்கு வசதியளித்தன. படை வரிசைகளுக்குப் பின்னல் இவைகளைத் தவிர 15,000, 18,000 சண்டை விமானங்களும், வெடி குண்டுவீசும் விமானங்களும் திருத்தியமைக்கப்பட்டன; அல்லது பழுதுபார்க்கப்பட்டுவந்தன.

நஷ்ட சராசரிக் கணக்கு.

பிரிடனுக்காக நடைபெற்ற யுத்தத்தில் இரண்டுமாத காலத்தில் உற்பத்தியைவிட இரண்டு மடங்கு அதிகமாக ஜெர்மன் விமானப்படைக்கு நஷ்டமேற்பட்டதைத் தவிர யுத்தத்தின் முதல் $1\frac{3}{4}$ வருஷத்தில் ஜெர்மன் விமானப்படைக்கு அதிக நஷ்டம் ஏற்படவில்லை. அகஸ்மாத்தாகவும், பழுதுபட்டதுமான விமானங்களுள்பட சராசரி ஒரு மாதத்தில் 500 சண்டை விமானங்களை ஜெர்மனி இழந்திருக்கும். ஆறுமாத காலம் வரையில் ஜெர்மன் விமானப்படைப் பகுதிகள் சும்மாவிருந்துவந்தன. ஆகிலும் 1941-ம் வருஷம் ஜூன் மாதம் 27-ம் தேதியன்று ஒவ்வொரு விமானப்படைப் பகுதியும் யுத்தத்தில் ஈடுபட்டது. நான்கு பகுதிகளும் ரிச்ஹாபன் ரகத்தைச் சேர்ந்த விமானப்படையும், ருஷ்யர்களைத் தாக்கின. மற்ற விமானப்படைப் பகுதிகள் ஐரோப்பாவின் மற்ற பாகங்களைக் காபந்து செய்தன. இந்த மிகுதியான அலுவல்களைச் செய்யமுடியாமல், ஜெர்மன் விமானப்படை சோர்வடைந்தது.

சகலவிதமான காரணங்களாலும், ஒரு விமானப்படையில் முன்னணியிலும், பின்புறம் வைக்கப்பட்டிருக்கும் விமானங்களில் ஒவ்வொரு மாதமும், ஐந்தில் ஒரு பாகம் அழிவுபடக் கூடும். ஆகிலும், ஜெர்மனியின் உயர்தரமான பழுதுபார்க்கும் ஏற்பாட்டினலும், விமானங்களை உத்தாரணம் செய்யும் திறமையாலும் அழிவு கணக்கு மாதாமாதம் 7-ல் ஒருபாகமாகயிருந்துவந்தது.

1941-ம் வருஷம் ஜூன் மாதம் 22-ம் தேதி முதல் ஜெர்மன் விமானப்படையின் நஷ்டங்கள் அபரிமிதமானவை. ருஷ்யப் போர்முனையில் முதல் 5 மாதத்தில் ஜெர்மன் விமானப் படை 20,000 விமானங்களை இழந்துவிட்டது. இவைகளைக்கொண்டு 15 விமானப் பகுதிகளைத் தயார் செய்துவிடலாம்.

இவ்விதமான அபரிமிதமான நஷ்டத்தை ஜெர்மன் விமான உற்பத்தி தொழிற்சாலைகளும், விமானிகளுக்குப் பயிற்சியளிக்கும் ஸ்தாபனங்களும் ஈடு செய்யமுடியவில்லை. 1941-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் நான்கு விமானப்படைப் பகுதிகளை, மூன்று பகுதிகளாகத் திருத்தியமைத்து குறைவு பாடுகள் சரிப்படுத்தப்பட்டன. ஆபிரிக்காவில், பிரிடிஷார் ஆரம்பிக்கப்போகும் தாக்குதலை சமாளிக்க ரோமலுக்கும் ஒரு சிறிது விமானப்படை தான் வந்து சேர்ந்தது.

மாஸ்கோவுக்காக யுத்தம் நடைபெற்று ஸ்டாலின் அரண்மனையில் அந்த வருஷத்தில் ஜெர்மானியர்கள் நுழைய முடியாதென்று அவர்கள் கண்டுகொண்ட பின் ருஷ்யாவில் ஜெர்மன் விமான நடவடிக்கை குறைக்கப்பட்டது. ஜெர்மன் விமானப்படைக்கு ஓய்வு அவசியமாயிற்று. விமானங்களும், அவைகளிலுள்ள முஸ்தீப்புகளும் எந்நிலைமையிலும் ருஷ்யாவின் மாரிகாலத்தில் பயனபடவில்லை. அதன் பயனாக, கிழக்குப் போர்முனையில் மாதாமாதம் சராசரி 1,000 விமானங்கள் நஷ்டமாகின. ருஷ்யாவிலும், மத்தியதரைக்கடலிலும், மேற்குப் போர்முனையிலும் அழிவு பெற்ற விமான நஷ்டத்தை மாரிகாலத்தில் சரிப்படுத்திக்கொள்ள ஜெர்மனிக்கு சந்தர்ப்பம் வாய்த்தது. 15 லக்ஷம் துருப்புகளுக்கு லீவ் கொடுத்து யுத்தத் தொழிற்சாலைகளில் மூன்று மாதங்கள் வேலை செய்யும் படியாக அனுப்பப்பட்டார்கள் அவர்களில் மூன்றில் ஒரு பாகம் ஹெங்கல், மெஸ்ஸர் ஷிமிட், டார்னியர், ஜங்கர் விமான உற்பத்தி சாலைகளிலும் மற்ற இரண்டு பாகம் இதர விமான உற்பத்திசாலைகளிலும் அமர்த்தப்பட்டார்கள். அதன் பயனாக, ஒரு வருஷத்துக்குமுன் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் ஜெர்மன் விமான உற்பத்திசாலைகள் ஏராளமான சண்டை விமானங்களைத் தயாரித்துவிட்டனர்.

நஷ்டத்தோடு கூடிய யுத்தம்.

மாரிகாலத்திய அபரிமிதமான உற்பத்தி மூலம் ஏராளமான சண்டை விமானங்கள் கட்டப்பட்டுவிட்டதால் 1942-ம் வருஷ முன்னேற்ற யுத்தத்துக்கு தினசரி 5,000 முதல் 5,500 வரை விமானங்களை உபயோகிக்க ஜெர்மன் ராணுவ அதிகாரிகளுக்கு சக்தியுண்டாகிவிட்டது.

இந்த மகத்தான யுத்தத்தில் ஒன்றுன வால்கோவுக்கு முன்னேறிய நடவடிக்கையில் ஜெர்மானியர்கள் ஒரு நூதனமான யுத்த தந்திரத்தை மேற்கொண்டார்கள். இது மாட் பல்கீ, அல்லது மோட்டார்களைக் கொண்டு தவிடுபொடியாக்குகிறது என்று ஜெர்மன் ஜெனரல்கள் சொல்லுகிறார்கள். பிடித்த இடங்களைக் காப்பாற்றுவதற்கு பான்ஸர் படையைச் சேர்ந்த ஸ்டோகா விமானங்களின் மின்னல் எதிர்ப்பு போதாதென்று ஜெர்மன் தளகர்த்தர்கள் நினைத்தார்கள். 1941-ம் வருஷத்தில் ருஷ்யப்படை வரிசைகளைப் பிளந்துசென்ற டஜன்கள் கணக்கான ஜெர்மன் கவசம்பூண்ட படைப் பகுதிகள் பின்புறத்தில் துண்டிக்கப்பட்டு பதில் தாக்குதல் செய்யும் ருஷ்யத் துருப்புகளாலும், விமானங்களாலும் நிர்மூலமாக்கப்பட்டன. இதை நிவர்த்திப்பதற்காக ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் டாங்கிகளுக்குப்பின் மோட்டார் படைகளையும், பீரங்கிப் படைகளையும் அனுப்பினார்கள். தரைப் படைகளின் ரக்ஷணைக்காக ஒரு சதுர மைலை அழிப்பதற்காக 100 விமானங்கள் வீதம் ஏராளமான விமானங்களையும் உபயோகப்படுத்தினார்கள்.

கடைசியில் மாட்பல்க்கின் திட்டப்படி அதில் ஈடுபட்ட துருப்புகள் பலஹீனமடைந்தது தான் மிச்சம். 1914—18-ம் வருஷங்களில் நடைபெற்ற ஏராளமான படைகள் மூலம் தாக்கும் முறையானது மறுபடியும் 1942-ம் வருஷத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. யுத்த வெறி பிடித்த மூளைக் கோளாறு உள்ளவர்கள் கண்டுபிடித்திருக்கும் இந்த யுத்த முறையானது அதிக நஷ்டம் உண்டு பண்ணக்கூடியது தவிர வேறில்லை.

1942-ம் வருஷம் வேனிற் காலத்திலும், மாரி காலத்தோல்வியிலும் சென்ற வருஷத்தைவிட இரண்டு மடங்கு விமானங்களை ஒவ்வொரு போர்முனையிலும் ஜெர்மனி இழந்தது. 1942-ம் வருஷம் வேனிற் காலத்தில் ஜெர்மனி மாதாமாதம் 3,000 விமானங்களை யிழந்தது. இவைகளில் பாதிக்குமேல் ஸ்டாலின்கிராட் காளவாயில் சாம்பலாகின.

நான்கு நிகழ்ச்சிகள்.

1942-43-ம் வருஷம் மாரிகாலத்தில் ருஷ்யர்கள் முன்னேற ஆரம்பித்து ஜெர்மானியர்கள் வோல்கா நதி பிரதேசத்தைக் கைப்பற்றும் முயற்சிகளுக்கு உலைவைத்தபொழுது ஜெர்மன் விமானப்படையின் தினசரி வலுவானது 4,000 வெடிவிமானங்களும், சண்டை விமானங்களும். இத்துடன் ஒதுக்கி வைத்திருந்தவைகள் 11,000 முதல் 14,000 விமானங்கள் வரையில். 1941-ம் வருஷ யுத்த முடிவில் ஜெர்மனியில் 4,500 விமானங்களிருந்தன. 4,000 விமானங்களிருந்தன என்பதிலிருந்து அதிகக் குறைவு ஏற்பட்டு விட்டதென்று சொல்ல இயலாது. ஆகிலும், புள்ளி விபரங்கள் குறிப்பிடுவதைவிட ஜெர்மன் விமானப்

படையின் நிலைமை மோசமாகயிருந்தது. ஏனென்றால் 1942—43-ம் வருஷ மாரிகாலத்தில் நஷ்ட ஈடு செய்துகொள்ள ஜெர்மனிக்குச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. இந்த நிலைமைக்கு நான்கு நடவடிக்கைகள் முக்கியமானவை.

1941-ம் வருஷம் முடிவடையும்பொழுது, நாஸிகள் எதிர்பார்த்த நடவடிக்கைகளில், தெற்குப் பக்கத்திலிருந்து ஐரோப்பாவை நேசநாடுகள் படையெடுப்பார்களென்பது அசம்பாவிதமென்று கருதப்பட்டது. ஜெர்மனிக்கு அடிப்பக்கத்தில் மத்தியதரைக்கடலில் நடமாடுவதற்காக ஸிஸிலியிலும், தெற்கு இதாலியிலும் பலமான விமானப்படை வேண்டுமென்று நினைத்தது. கடுங்குளிருள்ள மாதங்களில் சோம்பேறித் தனமானமாக யிருப்பதற்கு பதிலாக அநேக ஜெர்மன் விமானப்படைப் பதிருகள் மத்தியதரைக்கடலில் நடமாடிக் கொண்டிருந்தன.

பிரிடிஷ் விமானப்படை ஜெர்மனியையும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவையும் பலமாகத் தாக்கி வருவதும் இங்கிலாந்தில் அமெரிக்க விமானப்படைகள் குவிந்து வருவதும், இரண்டாவது நடவடிக்கை, விமானத் தாக்குதல் மூலம் ஜெர்மனியை அப்புறப் படுத்த முடியாது. ஆகிலும், ஜெர்மனி இவைகளை அலக்ஷியம் செய்ய முடியாது. ஏனென்றால் எதிர்ப்பு இல்லாத நேசதேச வெடி விமானங்கள் அதிகமான நஷ்டங்களை விளைவிக்கக் கூடும். ஆகையால் விமான எதிர்ப்பு தற்காப்புகளை அமைப்பதின் மூலம் ஜெர்மன் விமானப் படையின் குறைவு அதிகரித்து வருகிறது.

மனித பலம் குறைவு.

ருஷ்யாவின் மாரிகால யுத்தத்தினாலும், ஐரோப்பாவைச் சுற்றிலும் நொருக்க முடியாத எஃகுக் கோட்டையை அமைத்துவிட வேண்டுமென்ற ஜெர்மனியின் தீவ்ரமான முயற்சியாலும் ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் துருப்புகளுக்கு ரஜா கொடுத்து தொழிற்சாலைகளில் வேலை செய்ய அனுப்பக்கூடவில்லை. ஆகையால், இந்த வருஷம் மாரிகாலத்தில் ஜெர்மன் விமான உற்பத்தியே கிடையாது.

வாஸ்தவமாக ஹிட்லரின் யுத்த தளவாட உற்பத்திசாலைகள் சோர்வடைந்துவிட்டன. ருஷ்யாவில் ஏற்பட்ட அபரிமிதமான மனித நஷ்டத்தினால் ஜெர்மனியில் மனித பலக் குறைவு நெருக்கடி ஏற்பட்டுவிட்டது. நாஸிகளின் தரைப்படை, கடல்படை, விமானப்படைகளின் முஸ்தீப்புகளுக்கு இரண்டு அல்லது மூன்று மடங்காக நமது யுத்த தளவாட உற்பத்திகளும், மனித பலமும் அதிகரித்து வரும்பொழுது ஜெர்மனிக்கு மனித பலக் குறைவு ஏற்பட்டிருக்கிறதென்பது விசேஷமானது. மனித பலக்குறைவு ஏற்பட்டுவிட்டதினால் அயல் நாட்டார்கள் ஆயுத உற்பத்தி செய்யக்கூடாதென்று போட்டிருந்த உத்தரவை நாஸிகள் ரத்து செய்துவிட்டு ஆக்கிரமிப்பு நாடுகளிலுள்ள தொழிற்சாலைகளைத் திறந்துவிட்டார்கள்.

சென்ற ஒன்றரை வருஷத்தில் ஜெர்மன் விமானப்படை பலம் குறைந்துவிட்டதுடன் அதின் மனித பலமும் குறைந்துவிட்டது. தொழிற்சாலைகள் விமானத்தைக் கட்டி முடித்துவிட்டாலும் அதை ஓட்டுவதற்கு ஹிட்லர் வாலிபச் சங்கத்தைச் சேர்ந்த வெறிபிடித்த எந்த நபரும் பயிற்சி பெறுவதற்கு காலதாமதமாகுமாகையால் ஜெர்மானியர்களுக்கு விமானங்களின் குறைவைவிட மனித பலக் குறைவு தான் அதிகமாகயிருக்கும்.

65,000 விமானங்கள் நாசமாகிவிட்டன.

1939-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்திலிருந்து 3½ வருஷங்களுக்குள் எல்லாப் போர் முனைகளிலும், சகலவிதமான காரணங்களாலும் ஜெர்மனிக்கு 65,000 சண்டை விமானங்கள் நஷ்டமாகிவிட்டன. இவைகளில் பிரிடிஷ் விமானப்படை 10,000 விமானங்களை சுட்டு வீழ்த்தியிருக்கிறது. இந்த நஷ்டங்கள் பிரிடிஷ் பிரசுரங்களில் வெளியிடப்பட்டன. இன்னும், 10,000 விமான நஷ்டங்களைப் பிரிடிஷார்கள் கண்ணுறக்காணவில்லை. அவைகள் பழுதுபட்டிருக்கலாம் அல்லது போர்முனைகளில் நொருங்கியிருக்கலாம். யுத்தப் பேரேட்டின் ஐந்தைக் கணக்கில் ஜெர்மனியைத் தாக்கிவரும் வெடி விமானப்படையின் நடவடிக்கையைப் போல பிரிடிஷ் பைடர் விமானங்களின் நடவடிக்கைகளும் முக்கியமான ஸ்தானம் வகிக்கக் கூடும்.

ஒன்று நிச்சயம், முன்பு இருந்த சக்தியை ஜெர்மன் விமானப்படை மறுபடியும் அடைய முடியாது. இவ்வருஷத்திய நேசதேசத் தாக்குதல் அதன் வலுவை அதிவேகமாகக் குலைத்துவிடும், அதே சமயத்தில் நேசநாடுகளின் முதல்தரமான விமானப்படை பலம் நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது.

சைனாவின் விடுதலைக்கு மார்க்கம்.

கிழக்கு ஆசியா படைத்தலைவருக்கு யோசனைகள்.

(டெய்லி டெலகிராப் பத்திரிகை).

ஜப்பான் சம்பந்தப்பட்ட மட்டில் இந்த யுத்தத்தில் நமது நிலைமையென்ன? இங்கே நான்கு நேசதேசப் படைத்தலைவர்களிருக்கிறார்கள். அலாஸ்கா பகுதியில் மேஜர் ஜெனரல பக்னரும், ஸ்வதந்திர சைனா படைகளுக்கு ஜெனராலிஸிமோ சியாங்கை ஷேக்கும், தென் மேற்கு பஸிபிக்கில் ஜெனரல் மாக் ஆர்தரும், இந்தியாவையும், சிலோனையும் தளமாகப் பெற்றுள்ள கிழக்கு ஆசியாவில் லூயி மௌண்ட் பேடனும் தலைமை வகிக்கிறார்கள். யுத்த தந்திர முறையில் கவனித்தால் ஆட்டு, கிஸ்கா தீவுகளிலுள்ள தளகர்த்தர் சமீபத்தில் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் முக்கியமான தற்காப்புக்காக நடைபெற்றவை. இந்த முக்கியமான யுத்த முனைகளிலிருந்து அமெரிக்கப் படைகளின் கவனத்தைத் திரும்பி வேறு பக்கம் செலுத்துவதற்காகத்தான் 14 மாதங்களுக்குமுன் அலூஷியன் தீவுகளுக்கு ஜப்பானியர்கள் சென்றார்கள் என்று அவர்கள் இப்பொழுது சொல்லிவருவது பின்புத்தி என்று நாம் புறக்கணித்துவிட வேண்டும். ஆகிலும், ஜப்பானியர்கள் அலூஷியன் தீவுகளில் நிலை பெற்றிருந்த வரையிலும் அலாஸ்காவுக்கு அபாயம் ஏற்பட்டது. அதைக் காப்பாற்ற நேசதேசத்தார்கள் வைத்திருந்த கப்பற்படைகள் அங்கிருந்து சலிக்க முடியவில்லை. இந்த அபாயம் இப்பொழுது நீங்கிவிட்டதிலிருந்து கப்பல்களை அங்கிருந்து வேறு இடங்களுக்கு அனுப்பி விடலாம். ஆகையால், அந்த நடவடிக்கைகளின் நோக்கங்கள் நிறைவேறிவிட்டன.

இந்தப் போர்முனையில் சமீபகாலத்தில் நாம் முன்னேறுவோம் என்று எதிர் பார்ப்பது தவறு. அலூஷியன் தீவுகளிலுள்ள நேசதேசத்தார்கள் மிகவும் கஷ்ட சாத்யமான 800 மைல்கள் அளவுள்ள சமுத்திரத்தையும், மத்தியிலுள்ள குரைல்ஸ் தீவுகளையும் தாண்டிச் செல்லவேண்டும். ருஷ்யாவைச் சேர்ந்த காமசட்காவில் மத்திய தளங்கள் அவர்களுக்கு கிடைக்காததினால் குரைல்ஸ் தீவுகளைத் தாண்டிச் செல்லுவதற்குப் போதுமான படைகளைத் திரட்டுவதும் கஷ்ட சாத்யமாயிருக்கும்.

அடுத்தபடி ஸ்வதந்திர சைனாவின் நிலைமையைப் பார்ப்போம். சென்ற வருஷம் மே மாதத்தில் ஜெனரல் லேமிட்டில் டோக்கியோவை வெடி குண்டுகளால் தாக்கியபின் ஜப்பானியர்கள் சைனாவிலுள்ள துறைமுகங்களை ஆக்கிரமித்துக்கொண்டனர். அதற்குப்பின் ஸ்வதந்திர சைனா உலகத்திலிருந்து துண்டிக்கப்பட்டுவிட்டது. ஒரு சிறிது ஸப்ளைகள் மட்டும் விமானங்கள் மூலமாகவும், ஆசியாவிலுள்ள ருஷ்யாவிலிருந்து சிறிய கோபி பாலைவனத்தின் மார்க்கமாக ரஸ்தாக்கள் மூலமாகவும் சைனாவுக்குப் போய்க்கொண்டிருந்தன.

இதே சமயத்தில் ஜப்பானியர்கள் 100 நாட்கள் யுத்தம் ஒன்றை ஆரம்பித்தார்கள். கடற்கரையிலுள்ள தளங்களிலிருந்து உள்நாட்டை நோக்கி இது நடைபெற்றது. ஜப்பான் பேரில் வெற்றிகரமாக குண்டு வீசக்கூடிய சௌகரியமுள்ள தளங்களை எல்லாம் ஒழித்துவிடுவதென்பதுதான் இந்த நடவடிக்கையின் நோக்கம். விமான தளங்களை அழித்துவிட்டு ஜப்பானியர்கள் பின்சென்று விட்டார்கள். ஆகிலும், அவர்களுக்குத் தேவையான பாகங்களையும் அவர்கள் பலப்படுத்திவிட்டார்கள். நதிகளின் முகத்துவாரங்களிலுள்ள துறைமுகங்களும், போக்குவரவு மார்க்கங்களின் பெரும்பாகமும் ஜப்பானியர் வசமிருப்பதால், மேலும் அதிகமாக வெற்றிகள் சம்பாதிப்பதற்கு அகலக்கால் வைப்பதற்கு அவர்களுக்கு அவசியமேற்படவில்லை.

சைனா பலமாக யுத்தம் செய்வதற்குப் போதுமான யுத்த தளவாடங்களையும், ராணுவத்தையும் அனுப்பி நேசநாடுகள் ஒத்தாசை செய்தாலொழிய, ஸ்வதந்திர சைனாவின் சிறந்த தைரியமும், ஊக்கமும் ஜப்பானியர்களை சமாளித்து நிற்கும் தற்காப்பு ஏற்பாட்டுக்குத்தான் பிரயோஜனப்படும்.

முற்றுகைக்குட்பட்டிருக்கும் சைனாவை எவ்விதம் விடுவிப்பது, ஜப்பான் பேரில் எவ்விதம் போர் தடுப்பது என்பதுதான் முக்கியமான பிரச்னைகள். இந்தப் பொறுப்பை தென் மேற்கு பஸிபிக் கம்மாண்டரும், கிழக்கு ஆசியா கம்மாண்டரும் சேர்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கிழக்கு ஆசியா கம்மாண்டரின் யுத்த நடவடிக்கைகள், ஜெனரல் மாக் ஆர்தருக்கு ஒத்தாசை செய்யும் முறையில் நடைபெறவேண்டும். விளக்கிச் சொன்னால், ஆசியா கண்டத்தில் ஜப்பானியர் வசமுள்ள இருப்புப்பாதைகளை அழிக்கவேண்டும். அதன் மூலம் சைனாவுக்கு உதவியளிக்கவேண்டும்.

இந்த அடிப்படையான நோக்கத்துடன் இந்த ஏற்பாட்டின் மூன்று தெளிவான சம்பாவிதங்களைக் கவனிப்போம். முதலாவது, அஸ்ஸாம் எல்லைப்புறம் வழியாக பர்மாவில் தரை

மார்க்கமாக படையெடுப்புச் செய்யவேண்டும். இந்த நடவடிக்கை சாத்தியமானதல்ல. பிரதேசத்தின் அமைப்பும், சாச்வதமான ரஸ்தாக்களின் குறைவும், அடிக்கடி பருவகால மழை பெய்து தாத்காலிகமாகப் போடப்பட்ட ரஸ்தாக்கள் அழித்துவிடுவதும், பர்மா நடவடிக்கைகளுக்கு இடையூறுகள். ரங்கூனிலுள்ள ஜப்பானியர்களுக்கு பரிஷ்காரமான ரஸ்தாக்களின் வசதியிருப்பதால் அவர்களுக்கு யுத்தம் செய்வதற்கு விசேஷ சௌகரியம் இருக்கிறது.

கடல் மார்க்கமாகச் சென்று ரெங்கூன் வழியாக பர்மாவைப் படையெடுப்பது இரண்டாவது யோசனை. இந்த நடவடிக்கை மூலம் பர்மாவைத் திரும்பிப்பிடித்து விடலாமென்றும் பர்மா ரஸ்தாவைத் திறந்துவிட முடியாது. துருப்புகள் செல்லுவதற்காக இந்த ரஸ்தா அமைக்கப்படவில்லை. அதற்காக நாம் அந்த ரஸ்தாவை உபயோகித்தால் நம்முடைய நோக்கம் பூர்த்தியடையாது. அதாவது ஸ்வதந்திர சைனாவுக்குச் செல்லக்கூடிய சாமான்களுக்கு சைனாவுக்குப் போகும்மார்க்கம் தடைபட்டுவிடும்.

ரெங்கூனுக்குத் தெற்கே வெகு தூரத்திலுள்ள மோல்மீன் வழியாகவும், டாவாய் வழியாகவும் கடல் மூலமாக படையெடுத்து ஸியாமுக்குள் புகுந்து ஒரே மூச்சில் பாஸ்ராவுக்கும் பர்மாவின் இருப்புப் பாதைகளுக்கும் தொடர்ப்பு ஏற்படுத்துவதற்காக ஜப்பானியர்கள் அமைத்துவரும் இருப்புப் பாதைகளையும், மலேயாவுக்குச்செல்லும் இருப்புப்பாதைகளையும் துண்டித்துவிடலாம். மேலும், ஸியாமிலும் இந்தோ-சைனாவிலுமுள்ள கேந்திர ஸ்தானங்களை நேசநாடுகள் பிடித்துவிட்டால் கிழக்கு ஆசியா கம்மாண்டரிடமுள்ள படைகள் ஹையினன்—பார்மோஸா போர்முனையிலுள்ள ஜப்பானியர்களைப் பின்புறத்தில் தாக்கக்கூடும். பிலிப்பைன்ஸ் தீவுகளில் ஜெனரல் மாக்ஆர்தரின் முன் நடவடிக்கைகளுக்கு இந்த நடவடிக்கை சாதகமளிக்கும். இவ்விதமாக இந்தப் போர்முனையில் ஒன்றுபட்டு பலமாகத் தாக்கினால் தான் ஸ்வதந்திர சைனாவுக்குப்போகும் மார்க்கம் திறக்கப்படும். ஆகையால், இந்த மூன்றாவது யோசனைதான் திருப்திகரமாகத் தோன்றுகிறது.

எந்தத் திட்டத்தை நாம் அமுலுக்குக்கொண்டு வந்தாலும் கிழக்கு ஆசியாவில் நாம் கடல் மூலமாகவும், கரை மார்க்கமாகவும் முன்னேறவேண்டும். வெற்றி பெறுவதற்கு அத்யாவச்யமானவைகள் சில உண்டு. (1) காடுகளில் யுத்தம் செய்வதில் பரிஷ்காரமான பயிற்சியும், முஸ்தீபுகளுமுள்ள சேனைவேண்டும். அவர்கள் காடுகளில் இரவில் வசிப்பதற்கு அஞ்சக்கூடாது. (2) வங்காளக்குடாக்கடலில் கடல், விமான ஆதிக்கம் பெறவேண்டும். இதற்கு முற்போக்காக அந்தமான் தீவுகளை மறுபடியும் கைவசப்படுத்தவேண்டும். (3) மகத்தான படையெடுப்புச் செய்வதற்காக கப்பல்களும் துருப்பேற்றிச் செல்லும் தளங்களும் அபரிமிதமாகயிருக்கவேண்டும். இந்தத் தேவைகளெல்லாம் சொல்பமானதல்ல. ஆகிலும், அவைகளை நாம் நிச்சயமாகத் தயாரித்துவிடலாம். அப்பொழுதுதான் ஜப்பானை முறியடிக்கும் சமயம் தோன்றும். இதை வினா வெற்றிபெறுவதற்கு சுலபமான மார்க்கமே கிடையாது.

ஜப்பானைத் தாக்க கடற்படை முஸ்தீப்பு.

(A. J. மாக்வின்னி.)

பிரிடிஷ் கடற்படையின் பெரும்பாகம் தூரக்கிழக்குக்கு வந்து சேரும்பொழுது நேசநாட்டாரின் கப்பற்படை பலம் ஜப்பானியர்களுடையதைவிட குறைந்தபக்ஷம் மூன்று மடங்கு இருக்குமென்று நினைக்கிறேன்.

இதாலியின் வீழ்ச்சியின் காரணமான மத்தியதரைக்கடலிலுள்ள பிரிடிஷ் கடற்படையின் பெரும்பாகம் ஸூயஸைத்தாண்டி கிழக்கு வெளிகளுக்கு அனுப்பப்படலாம். அவ்விதம் வரும் கப்பல்கள் ஜப்பானைத் தாக்குவதற்காக கப்பற் படை பலத்தை அதிகரிக்கக்கூடும்.

மடாபான் யுத்தத்தில் பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் வெற்றிகரமாக இதாலியக் கப்பல்களைத் தாக்கியபின் மத்தியதரைக்கடலில் மகத்தான கப்பல் யுத்தங்கள் நடைபெறவில்லை. பிஸ்மார்க்கையும், கிராப்ஸ்பீயையுமிழந்ததன் மூலம் ஜெர்மனிக்கு பலமான தோல்விகள் கிடைத்ததிலிருந்து அதற்குப்பின் பிரிடிஷ் கடற்படையுடன் மறுமுறை போர் தொடுக்க ஜெர்மனி துணியவில்லை. ஆகையால், ஐரோப்பியக் கடல் யுத்தமானது முக்கியமாக சிறிய கப்பல்களின் சண்டையாகத்தான் நடைபெற்றுவருகிறது. அதாவது நாசகாரிகளும், விரைவாகச் செல்லும் போர்க் கப்பல்களும், நீர்மூழ்கிகளை அழிக்கும் கப்பல்களும், இழுப்புப் படகுகளும், இன்னும் யூ படகுகளை அழிக்கும் சிறிய விமானம் தாங்கிக் கப்பல்களும்தான் சண்டையில் ஈடுபட்டிருக்கின்றன.

பஸிபிக்கில் இவ்விதமான போர்கள் பிரயோஜனப்படாது. அங்கே பெரிய கப்பல் படைகளும், விமானம் தாங்கிச் செல்லும் கப்பல்களின் மூலம் கொண்டுவரப்பட்ட விமானங் களும் சேர்ந்துதான் இறுதி வெற்றியைப் பெறவேண்டும். எல்லைப்புறங்களில் வைத்திருக் கும் ஜப்பானியப் படைகளுக்கு அவர்கள் சாமான்களை எந்நிலைமையிலும் அனுப்பியாக வேண்டும்.

ஜப்பானியக் கப்பல்கள் நழுவிச்செல்லத் துணியாது.

நாசகாரிகள், சஞ்சாரிகளின் உதவியில்லாமல் ஜப்பானிய சாமான் கப்பல்கள் நேசதேசத் தின் பலமான கப்பல்களை எதிர்த்து நிற்கமுடியாது. தரையிலுள்ள விமான தளங்களி லிருந்து வெகுதூரத்தில் விமானந்தாங்கிக் கப்பல்களிலுள்ள ஜப்பானிய விமானங்கள் பெரிய துணைக்காவல் கப்பல் கூட்டங்களுக்கு வேவு பார்க்கும் வேலையிலும், போர்புரியும் வேலையிலும் ஈடுபடவேண்டும். விமானம் தாங்கிக் கப்பல்களுக்கு உதவியாக யுத்தக் கப்பல்களும், கனமான சஞ்சாரிகளும் செல்லவேண்டும். ஆகையால், பஸிபிக் போர்முனையில் மகத்தான கடற்படை போர் நடைபெறுவதற்கு அதிக சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. தயங்கிக் சொண்டிருக்கும் ஜெர்மன், இதாலியக் கடற் தளபதிகள் பிரிடிஷ் கடற்படைக்கு இவ்வித சந்தர்ப்பத்தை வேறு இடத்தில் அளிக்கவில்லை.

ஜப்பானியர்கள் பேடித்தனமாகயிருக்கும் ஐரோப்பிய சிநேகிதர்களைப்போல கடற் படையை சோம்பேறித்தனமாக வைத்திருக்க முடியாது. சாமான் போக்குவரவு மார்க் கங்களைப் பத்திரமாகப் பாதுகார்ப்பதற்காக கப்பல்களை அனுப்பி அவைகளை ஜப்பான் அபாயத் துக்குள்ளாக்க வேண்டியதுதான். வறுமையால் கஷ்டப்படும் தீவிலுள்ள ஒரு ஜப்பானியப் படையை நேசதேசத்தாரின் கடற்படையும், விமானப்படையும் வெகு சுலபமாக முறியடிக்க முடியும். ஒவ்வொரு முக்கியமான தீவையும் ஜப்பான் இழந்துவிட்டால் அவைகள் ஜப் பானுக்குச் செல்லுவதற்கு படிக்கட்டுகள் போல ஆகிவிடும்.

ஜெர்மனியும், இதாலியும் கடல் போர் துவக்குவதில் சிரத்தை காண்பிக்காததைக்கண்டு ஜப்பானியர்கள் ஆச்சரியமடைகிறார்கள். 1942, 1943-ம் வருஷங்களில் அவ்வித யுத்தங்கள் நடைபெற்று, அவைகளில் அச்சுநாடுகள் தோல்வியடைந்தாலும் நேசதேசத்தாருக்கு ஏராளமான கப்பல் நஷ்டங்கள் ஏற்படுமென்று ஜப்பான் நம்பியிருந்தது.

விமானம் தாங்கிக்கப்பல் படையின் விஸ்தரிப்பு.

பஸிபிக் யுத்தம் துவக்கவேண்டுமென்று பிரிடன் முடிவுசெய்துவிட்டதென்பதில் ஐயமில்லை. சென்ற சில மாதங்களாக நீண்ட நோக்கத்துடன் கிழக்கு சமுத்திரங்களில் ஜப்பானியரிடமிருந்து ஏற்பட்டிருக்கும் அபாயத்தை நிவர்த்திப்பதற்காக நேசநாடுகள் தயார்செய்து வருகிறார்களென்பதற்கு ஹேஷ்யங்கள் காணப்படுகின்றன. இதைப்பற்றி பிரிடிஷ் கடற்படை இலாகா உத்தியோக முறையில் ஒரு தகவலையும் வெளியிடவில்லை. கப்பல்களிலுள்ள அநேக பாஷைகளில் அபிருசியுள்ள வேலைக்காரர்கள் ஸ்பெஷலாக தேர்ந் தெடுக்கப்பட்டு அவர்கள் ஜப்பானிய பாஷையைக் கற்றுக்கொள்வதில் அதிக கவனம் செலுத்திவருகிறார்களென்று கடற்படை வட்டாரங்களில் ரகசியமாகப் பேச்சுகள் உலாவுகின்றன.

பிரிடனுடைய கடல் விமானப்படை மேல்மேலும் விஸ்தரிக்கப்படுகிறது. அநேக புதிய கப்பல்கள் கட்டப்படுகின்றன. புதிய மாலுமிகளும், விமானிகளும் பயிற்சிபெற்று வருகிறார்கள். விமானம் தாங்கிக் கப்பல்களும், மாலுமிகளும் ஜெர்மனி முறியடிக்கப்பட்டு யுத்தம் முடிவடைந்தபின் கிழக்கு சமுத்திரங்களுக்குச் சென்று ஜப்பானியர்களைத் தாக்க உபயோகப்படும். கடற்படைக்குத்தான் மனிதபலமும் முகான்மையாக உபயோகப்பட வேண்டுமென்று சமீபகாலத்தில் லண்டனிலுள்ளவர்கள் தீர்மானம் செய்திருப்பதென்பது தூரக்கிழக்கில் உண்டாகியிருக்கும் நிலைமையை சமாளிக்க பிரிடிஷ் கடற்படையின் பலம் அதிகரிக்கவேண்டுமென்ற எண்ணத்தையொட்டித்தான் நடைபெற்றிருக்கிறது.

ஜப்பானுடைய வலிமையை லண்டனிலுள்ளவர்கள் குறைவாக மதிக்கவில்லை. டோக் கியோவை பலமாகத் தாக்குவதற்கு கேந்திர ஸ்தானத்தை அடையுமுன் நேசநாடுகள் அநேகம் தீவுகளைப்பிடித்துக் கொள்ளவேண்டும். டாரண்டோவில் கடல் விமானப்படைக்கு ஏற்பட்ட வெற்றியையும், மடாபான் யுத்தத்தில் கிடைத்த வெற்றியையும், பிஸ்மார்க் கப்பலை நமது கடற்படை மூழ்கடித்ததையும், யூ படகுகளின் அட்டகாசத்தை அடக்கிய நடவடிக்கைகளையும் மதித்துப்பார்த்தால் பிரிடிஷ் கடற்படைக்கு சந்தர்ப்பம் வாய்த்து அவர்கள் ஜப்பானிய கடற்படையுடனும், விமானப் படையுடனும் போர் தொடுத்தால், மிட்வே தீவிலும், பவளக்கடலிலும் அமெரிக்கக் கடற்படையும், அமெரிக்கக் கடல் விமானப் படையும் அடைந்த கியாதியைப்போல் புகழ்பெற்றுவிடுவார்களென்பதில் சந்தேகமில்லை.

கிழக்கு சமுத்திரத்தில் கடற்தளபதி நெல்ஸன் சந்தோஷப்படக்கூடிய கடல் யுத்தங்கள் நடைபெற சந்தர்ப்பங்கள் ஏராளமாகயிருக்கின்றன. இந்த கிழக்குப் பிராந்தியத்திற்கு பிரிடனில் கடல், விமானப்படை தலைவரான லூயி மௌண்ட் பேடன் பிரபு தென்கிழக்கு ஆசியாவிலுள்ள படைகளுக்கு உயர்தர நேசதேச சேனாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இந்தப் புதிய சிரமசாத்தியமான வேலையை ஒப்புக்கொள்ளும்பொழுது, பிரிடனில் கடற்படைக்கு அதிக கவனம் செலுத்தப்படுகிறதென்றும், யுத்த ஆரம்பத்தில் பிரிடனில் இருந்த 1,45,000 ஆபீஸர்களும் வேலைக்காரர்களையும்விட இப்பொழுது பிரிடிஷ் கடற் படையில் 1 மிலியன் உத்தியோகஸ்தர்களும், இதர சிப்பந்திகளுமிருக்கிறார்களென்றும் அவர் அறிவார்.

எல்லாவகைக் கப்பல்களும் அதிகரித்துவிட்டன.

சமீபத்தில் கிடைத்த தகவல்களிலிருந்து, சில பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் ஸூயஸ்கால் வாயைத்தாண்டி கிழக்கு சமுத்திரங்களுக்கு வந்துவிட்டதாகத் தெரியவருகிறது.

மத்தியதரைக்கடலில் கப்பல்களின் அவசியம் குறைந்துவிட்டபடியால் அதிகக் கப்பல் களும், மனிதர்களும் வேறு இடங்களுக்குச் செல்லலாம். இறுதியில் இந்தக் கடற்படை பெருக்கிலிருந்து நேசநாடுகளுக்கு பஸிபிக் சமுத்திரத்தில் யுத்தக் கப்பல்கள், நாசகாரிகள், வேகமாய்ச் செல்லும் போர்க்கப்பல்கள் உள்பட சகலவிதமான கப்பல்களின் ஆதிக்கம் ஏற்பட்டுவிடும். இதைவிட விமானம் தாங்கிக் கப்பல்களும் ஏராளமாக வந்துவிடும்.

இவ்விதமான நிலைமை வரும்பொழுதுதான் சரித்திரத்திலேயே நடைபெறாத, மகத் தானதும், கோரமானதும், முடிவானதுமான கடல் யுத்தம் நடைபெறுமென்று உலகத்தார் எதிர் பார்க்கலாம்.

புல்டோஜர் என்னும் யந்திரங்கள் காடுகளில் பாதையை அமைக்கின்றன.

விமானத்தைத் தவிர தனிப்பட்ட எந்த யுத்த முஸ்தீப்பும் தென் பஸிபிக் யுத்தத்தில் புல்டோஜர் என்னும் யந்திரத்தைப்போல் உபயோகமுள்ளதாகயில்லை. தீவுகளிலும், வடக்கு பிராந்தியங்களிலும் அதன் உதவியில்லாமல் விமானப்படை வெற்றிகரமாக நடமாட முடியாது. இடைஞ்சல்களை அப்புறப்படுத்தி சௌகரியம் ஏற்படுத்துவதற்கு அவைகள்தான் சிறந்தவைகள்.

வெடி விமானங்களும், சண்டை விமானங்களும் தங்கிப் புறப்படுவதற்கு தளங்களை நிர்மாணம் செய்வதற்கு அவைகள் முற்போக்கான வேலையைச் செய்துவிடுகின்றன. மோரும்பும், யுத்த தளவாடங்களும், சாமான்களும் செல்லுவதற்கு அவைகள் ரஸ்தாக்களை அமைக்கின்றன. வெடிகுண்டுகளின் அதிர்ச்சியினாலும், துணுக்குகளாலும் விமானங்களுக்கு நாசம் ஏற்படாமலிருப்பதற்குக் கட்டடங்கள் அமைப்பதிலும் அவைகள் ஈடுபடுகின்றன.

யுத்தத்திற்குமுன் ஆஸ்திரேலியாவில் வசதியுள்ள ஓடும் வழிகளுவுள்ள விமானமிறங் குமிடங்கள் அதிகமாக இல்லை. இப்பொழுது வேகமுள்ள சண்டை விமானங்களும், பெரிய வெடி விமானங்களும் இறங்குவதற்குப் போதுமான வசதிகளுடன் விமான தளங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

புதர்களும், காடுகளுமுள்ள இடத்தில் சில நாட்களுக்குள்ளாக புல்டோஜர் யந்திரம் இறங்குமிடத்தை உண்டுபண்ணிவிடும். பாறைகளுள்ள பிரதேசங்களையும் காட்டையுமழித்து அவைகள் சமப்படுத்திவிடுகின்றன.

நியூ கினியாவின் பூப் பிரதேச அமைப்பை அவைகள் திருத்தியமைக்கின்றன. செங்குத் தான மலைகளும், குன்றுகளும், அடர்த்தியான பயிர் பச்சைகளும் சதுப்பு நிலங்களுமுள்ள பள்ளத்தாக்குகளும், வேகமாகச் செல்லும் நதிகளும் உள்ள நாட்டின் வழியாக ரஸ்தாக்களை அவைகள் அமைக்கின்றன. காட்டையும், மலைகளையும் ஒரேவிதமாக துரிதமாகவும், தங்குதடையின்னியிலும் அழித்து விடுகின்றன. அவைகளுக்குப்பின் மின்சார சக்தியால் ஓடும் உருளைகள் தரை மட்டத்தைக் கெட்டிப்படுத்தி சமப்படுத்துகின்றன.

தென்மேற்கு பஸிபிக்கில் துருப்புகளிருக்குமிடத்திலெல்லாம் புல்டோஜர்களிருக்கின்றன. அவைகள் ஜப்பானியரிடமுமிருக்கின்றன. நியூ கினியாவின் வடக்கு கடற்கரையோரமாக நெருக்கமாக விமான தளங்களை எதிரி அதிவேகமாகக் கட்டியதற்குக் காரணத்தை சர்ச்சை செய்தபொழுது அவன் யந்திர சாதனங்களையும், அபரிமிதமான உள்நாட்டு தொழிலாளர்களை யும் உபயோகப்படுத்தினனென்று வெளிவருகிறது.

புல்டோஜர்கள் நமக்கு பலமான உதவியை அளிக்கின்றன. அவைகளில்லாத போனல் நமது வெடிவிமானங்கள் பறந்து சென்று பிஸ்மார்க் கடலில் துணைக்காவல் கப்பல்களைத் தாக்கியிருக்க முடியாது.

புல்டோஜர் யந்திரம் வெற்றிக்கு அஸ்திவாரம் போடுகிறது.

பிரார்த்தனை தினக் கொண்டாட்டம்.

ராயல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியைச் சேர்ந்த

மிஸ்ட்டர் *V. A. K.* ரெங்கன் என்பவருடைய சொற்பொழிவு.

இந்த யுத்தத்தில் வெற்றி பெருவதற்கு தேசம் பூராவும் பரஸ்பர ஒத்துழைப்புடனும், நன்னம்பிக்கையுடனும் சிரமம் எடுத்துக்கொள்ளவேண்டும். திடகாத்ரமுள்ளவர்கள் சண்டை போடும் படைகளில் சேர்ந்துகொள்ளலாம். தொழிற்சாலைகள் அபரிமிதமாக சாமான்களை வேகமாக உற்பத்தி செய்யவேண்டும். மூவகைப்பட்ட படைகளுக்கும் தேவையான யுத்த தளவாடங்களையும், பீரங்கிகளையும், டாங்கிகளையும், வெடிகுண்டுகளையும் இன்னும் மற்ற தளவாடங்களையும் அவைகள் உற்பத்தி செய்யவேண்டும். சண்டைபோடும் படைகளின் சரீர போஷணையும் சரியாக நடைபெறவேண்டும். காயம்பட்டவர்களுக்குச் சிகிச்சைசெய்து அவர்களை சொஸ்தமாக்கவேண்டும். இதன் பொறுப்பு வைத்திய இலாகாவையும், தாதிகளையும் சேர்ந்தது.

2. சேனைக்கு ஆகாரம்தான் முக்கியமானது. அதற்காக நாம் ஏராளமான உணவுப் பொருள்களை சேமித்து வைக்கவேண்டும். நமது விவசாயிகள் பொதுமக்களுக்கும் நமது கடற்கரைகளைப் பாதுகாக்கக் குவிந்துகொண்டிருக்கும் யுத்தப் படைகளுக்கும் தேவையான உணவுப் பொருள்களை உண்டுபண்ணவேண்டும். பர்மாவை நாம் இழந்துவிட்டபடியால், நமது உணவுப்பொருள் ஸப்ளைகளுக்காக நாம் நமது உள்நாட்டு உற்பத்தியையே நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. ஆகையால், யுத்தத்தில் வெற்றிபெருவதில் விவசாயிக்கும் ஒரு பங்கு உண்டு. நம்மிடமிருக்கும் உணவுப்பொருள்களை நியாயமான பங்கீடு முறைகளில் எல்லோருக்கும் விநியோகம் செய்யவேண்டும். இது சரிவர நடைபெறுவதற்குப் பொதுஜனங்களின் ஒத்துழைப்பு அவசியம். யுத்தத்திலீடுபட்ட ராஜ்யத்திற்கு 5-ம் படையைச் சேர்ந்தவர் ஒரு எதிரி என்பதுபோல், நெருக்கடியான காலத்தில் அளவுக்குமேல் குவித்து வைக்கிறவன் மானிட வர்க்கத்தின் பரம விரோதியாவான். இந்த இரண்டு கெடுதல்களையும், பொதுஜனங்களின் ஒத்துழைப்பு இருந்தால் ஒழித்துவிடலாம். தேசிய யுத்த முன்னணியானது அதிகமாகச் சேமித்துவைப்பவர்களையும், 5-ம் படையினரையும் சிக்ஷைக்குட்படுத்துமாறு பொதுமக்களை வேண்டிக்கொள்ளுகிறது.

3. யுத்த காலத்தில் தேசத்துக்காகப் பாடுபடுவதற்காக வாலிபர்களுக்கு ஏராளமான சந்தர்ப்பங்கள் வாய்த்திருக்கின்றன. யுத்த முடிவில் இந்தியாவை ரக்ஷிக்கக்கூடிய ஒரு மகத்தான தரைப் படை இந்தியாவில் இருக்கக்கூடும். இந்திய வேலைக்காரர்களுள்ள ஒரு பெரிய இந்திய விமானப் படையும், இந்தக் கடற்கரையைப் பாதுகாக்க கூடிய ஒரு இந்தியக் கடற்படையும் தயாராகிவிடும். இவைகளைத் தவிர, யுத்தத் தொழில்களில் பயிற்சி பெற்ற அநேக தொழிலாளர்களும் நமது நாட்டில் இருப்பார்கள். அவர்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்யத் தயாராகயிருப்பார்கள். சரியான வேலைகளில் அமர்த்தப்பட்டால்,அவர்கள் விவசாயம் மிகுதியுள்ள இந்தியாவை, தொழிற்சாலைகள் மிகுதியுள்ள நாடாகவும் செய்துவிடக்கூடும்.

4. ஜாதி, மதம், நிறம் இவைகளை பொருட்படுத்தாமல் யுத்த முயற்சியை அதிகப்படுத்துவதற்காக ஒரு சிறிது வேலை செய்துவரும் தேசிய யுத்த முன்னணியானது இந்தியாவின் புனருத்தாரணத்துக்காக சமாதான காலத்திலும் வேலை செய்து வரலாம். எதிர் காலத்திய இந்தியாவில் கிராமாந்திர சீர்திருத்தமும், பொதுமக்களின் படிப்பின்மையை அகற்றுவதும், கிராமங்களில் சுகாதாரப் பிரகடனம் செய்து வருவதும்தான் முக்கியமான தேவைகள். நல்ல ஆரோக்கிய பிரதமான ஜீவனம் செய்துவர வேண்டுமென்றும், கூடுமானவரையில் பொருளை மீதப்படுத்தி அவைகளை யுத்தக் கடன் பத்திரங்களிலோ அல்லது ஸேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டிலோ விநியோகம் செய்யவேண்டுமென்றும் ஜனங்களுக்குப் போதிக்கப்படுகிறது. யுத்த ஆரம்பத்துக்கு முன்னிருந்ததைவிட இப்பொழுது ரூபாயின் மதிப்பு கால்பாகமாகக் குறைந்துவிட்டது. ஆகையால், அதிகமாகப் மீதப் பொருளுள்ளவர்கள் அவைகளை பத்திரப்படுத்தி ரூபாயின் பூரா மதிப்பு நிலை பெறும்பொழுது அவைகளை

உபயோகப்படுத்த வேண்டுமென்று கோரப்படுகிறார்கள். சமீபத்தில் ஏற்படுத்தப்பட்ட தற்காப்பு கடன் பத்திரங்கள் பொருளுக்குப் பத்திரத்தையும், நல்ல வட்டியையும் அளிக்கின்றன. அவைகள் யுத்தம் முடிந்த பிறகு திருப்பிக் கொடுக்கப்படும். அப்பொழுது ரூபாயின் ஸ்வயமான மதிப்பு மறுபடியும் வந்துவிடும். அப்பொழுது யுத்த சமயத்தில் மீதப்படுத்திய பொருளை லாபகரமாக உபயோகிக்க வசதி யேற்படும்.

5. இவ்விதமாக நமது உபரிப் பொருளை கடன்பத்திரங்களில் விநியோகம் செய்தால், இப்பொழுதே விலைவாசிகள் உயர்வாக யிருந்துவருவதை அதிகப்படுத்த நம்முடைய மிகுதியான பொருளை உபயோகப்படாமல் செய்ததாகும். ஏழைமக்கள் குறைச்சலான விலைக்கு உணவுப் பொருள்களை வாங்கமுடியும். இதன் மூலமாக உள்நாட்டில் சமாதானமும், திருப்தியும், நிலவும். அதன் மூலம் யுத்த முயற்சிகளுக்கு அதிக சௌகரிய மேற்படும். ஆகையால், நாம் செய்யக்கூடிய ஒவ்வொரு சிறிய சேவையும், வெற்றி சீக்கிரம் கிடைப்பதற்கு ஒத்தாசை செய்ததாகும்.

'வி' டயரி-1944.

(குறிப்பு புஸ்தகம்).

(அக்டோபரில் வெளிவரும்).

லினன் ரூ. 1—8—0; ஷீப்ஸ்கின் ரூ. 1—12—0; மொராக்கோ ரூ. 2—4—0.

தபால் செலவு (பிரத்தியேகம்) :—ரிஜிஸ்தர் புக் போஸ்ட்டில் முதல் காபிக்கு ரூ. 0—4—3

அத்துடன் சேர்த்து அனுப்பும் ஒவ்வொரு காபிக்கும் ஒவ்வொரு அணா.

காபிகளுக்கு முந்துங்கள்!

கீழ்க் கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம்.—

காரியதரிசி,

தேசீய யுத்த முன்னணி நிலயம்,

புதுக்கோட்டை (தென் இந்தியா).

புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 164. (4-வது பிரிவு).

18- 9-43	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00
19- 9-43	ஆலங்குடி	... ,,	7.00
,,	ராசியமங்கலம்	... ,,	7.30
20- 9-43	திருமயம்	... ,,	7.00
,,	மேலூர்	... ,,	7.30
21- 9-43	பள்ளிவாசல்	... ,,	7.00
,,	பில்லமங்கலம்	... ,,	7.30
22 -9-43	C. S. M. பள்ளிக்கூடம்	... காலை	10.00
,,	ராணி பெண் பாடசாலை	... ,,	10.45
22- 9-43	காலேஜ் A இங்கிலீஷ்	... காலை	11.00
,,	காலேஜ் B தமிழ்	... ,,	11.00
,,	கொப்பனுபட்டி பள்ளிக்கூடம்.	மாலை	7.00
,,	பொ. புதுப்பட்டி	... ,,	7.30
23- 9-43	வெள்ளனூர்	... ,,	7.00
,,	செம்பாட்டூர்	... ,,	7.30
24- 9-43	புலியூர்	... ,,	7.00
,,	கண்ணங்குடி	... ,,	7.30

பிரஸங்கம் 165. (5-வது பிரிவு).

25- 9-43	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00
27- 9-43	பெருமாநாடு	... ,,	7.00
,,	புல்வயல்	... ,,	7.30
28- 9-43	கீழாநிலை-புதுப்பட்டி	... ,,	7.00
28- 9-43	கீழாநிலை	... மாலை	7.30
29- 9-43	அன்னவாசல்	... ,,	7.00
,,	கீழக்குறிச்சி	... ,,	7.30

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

18— 9—43 திருமெய்யம்.
19— 9—43 மருதன்கோன்விடுதி.
20— 9—43 கொன்னையூர்.
21— 9—43 ராமச்சந்திரபுரம்.
22— 9—43 கரம்பக்குடி.
23— 9—43 இமாகிலைக்கோட்டை.
24— 9—43 புதுக்கோட்டை.
25— 9—43 வெட்டம்விடுதி.
26— 9—43 ஏம்பல்.
27— 9—43 கீரனூர்.
28— 9—43 குடுமியாமலை.
29— 9—43 ராயவரம்.

யுத்தப் பாட்டு ந. 7:—

இதாலியின் சரணாகதி.

By Mr. A. Ramaswami Ayyar, Member, (N. W., F. B).

(பச்சைமலை, பவழமலை என்ற பாட்டு மெட்டு).

1. ஈசனளித்த வெற்றிக்குகா மென்றுமவரைத் தொழுவோம்
நேசக்கட்சிக் கினியும்வெற்றி யிறுதிவரைத் தரவே.
2. இதாலியின் வீழ்ச்சியையே இயம்பிடுவே னின்று
இதிலே நமக்குங் கீர்த்தியுண்டு, இன்பமுடன் கேட்பீர்.
3. ஆதியிலது ஆஸ்திரியாவுக் கடங்கியிருந்த நாடு
வேதனையே பொறுக்காமலே விடுவித்தாரே யதனை
4. தனியேயிருந்து தந்திரமாய்க் காலங்கழித்த நாடு
சனியனாக வந்தானதிலே முஸலோனியெனுங் கூற்றன்.
5. பாதகனிவன் பிறப்பித்தானே பாஸிஸ்டெனு மோர் கட்சி
சாதகமாய்ச் சேர்த்தானதில் சேனைகளைப் பலவாய்.
6. இப்படியே ரகசியமாய் ஈராறு வருடம்
செய்தவுடனே யடக்கினானே சொந்ததேசக் கோனை.
7. அன்றுமுத லவனே சர் வாதிகாரி யாகி
ஆட்டிவைத்தா னரசனையவன் புத்திபோன போக்கில்.
8. ஆயுதங்கள் கூட்டிப்பின்பு ஆளைச்சேர்த்த வுடனே
ஆசைமிகக் கொண்டயலார் நாட்டைப்பிடிக்க லானான்.
9. அயர்ந்துகிடந்த பலமிலாத அபிஸீனியா நாட்டை
விரைந்து பாய்ந்து வீரன்போல வெற்றியையும் கொண்டான்.
10. வெற்றிபெற்ற வெறியினாலே மற்றநாட்டையுஞ் சேர்க்க
பற்றினானே ஜெர்மனது பேருதவியைப் பலமாய்.
11. ஜெர்மன்தொடுத்த சமரில் சமயம் பார்த்துச் சேர்ந்து
குற்றமிலா பிரான்ஸின்முதுகில் குத்தினானே பின்னால்.
12. சின்னநாடுகள் பலவற்றையே சீர்குலைத்த பின்பு
இன்னும்நாமே ஜெயிப்மோமென இறுமாப்பே கொண்டான்.
13. அடியின்மேலே யடியும் அடுத்தடுத்து விழவே
ஓடிஓடித்து நடுநடுங்கி யோடினானே யவனும்.
14. அடுத்துவந்த யரசாங்கம் யவனைச்சிறை யிலிட்டு
தொடுத்துப்போரை நடத்துவதால் தோல்வியெனக் கண்டார்.
15. நேசநாடுகள் வேகமாக விரட்டியடித்து வரவே
மோசமிக்க வருமேயென்று மனங்கலங்க லானார்.
16. சடுதியிலே சரண்புகுந்தார் நாசந்தனைத் தடுக்க
நொடிதனிலே நொருங்கிடுமே ஒடிந்த மீதி யச்சும்.
17. ஜனநாயகம் ஜெயமே பெற்று ஜெகமே தழைத்திடுமே
இனியிதிலே ஐயமில்லை எள்ளளவுங் கூட.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,800—21-9-43.